பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 15 வெள்ளிக்கிழமை (01.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 309

# பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு ஜனாதிபதி ஒப்புதல்



## எம்.பி. பதவியையும் இழந்தார்

கொழும்பு, ஒக்ரோபர் 01

இரண்டாவது இராணுவ நீதிமன்றம் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கிய 30 மாத கடூழியச் சிறைத்தண்டனைக்கு முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்புதல் வழங்கியுள்ளார் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல நேற்றுத் தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறைக்கு பொன்சேகா மாற்றம்



கணவரை எதிர்பார்த்து வெலிக் கடைச் சிறைச்சாலை வாசலில் தவம் கிடக்கும் அனோமா.

கொழும்பு,ஒக்.1

சுமார் மூன்று வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத்பொன்சேகா நேற்றிரவு 10மணியளவில் வெலிக் கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.(24ஆம் பக்கம் பார்க்க)

## நவ. 22இல் பட்ஜெட்

கொழும்பு, ஒக்.01

2011ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நவம்பர் 22ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளைத் தெரிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 22ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இடம்பெறும். வரவு-செலவுத் திட்டக் குழுநிலை விவாதம் நவம்பர் 29ஆம் திகதி முதல் டிசெம்பர் 20ஆம் திகதி வரை இடம்பெறும். இதற்கு கட்சித் தலைவர்களின் இணக்கப்பாடும் வேண்டும்.

இவ்வாறு அவர் சொன்னார். (சி)

### கல்விச் சுடர்

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் வரலாற்றுப் பாட மாதிரி வினாத்தாள் உள்ளே.

## நீதிமன்றம் செல்ல பொன்சேகா கட்சி முடிவு

கொழும்பு, ஒக். 01

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிராகவும், அவரது எம்.பி. பதவியைப் பாதுகாப்பதற்கும் நீதிமன்றம் செல்லப் போவதாக அவரது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்றுக் கூறினார்.

நாவலயில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை எம்மால் ஏற்க முடியாது. இந்தத் தீர்ப்பானது மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட அரசியல் பழிவாங்கலே என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

அரச ஊழியரை (24ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

**அனோமாவின் குமுறல்**

...ங்கரவாதத்திலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றுவதற் காக ... எனது கணவருக்கு ஜனாதிபதி நல்ல ... வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் ... இப்போது மக்களுக்குத் தெளிவாக விளங்கியுள்ளது. இப்படி சரத் பொன்சேகாவின் ... அனோமா பொன்சேகா நேற்றுக் கூறினார்.

பக்கம் 3

**வடக்கு மக்களுக்கு அநீதி நடந்தது உண்மை**

வடக்கு மக்களுக்கு அன்று அநீதி இழைக்கப்பட்டது உண்மையே. எனவே, அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்கவேண்டும்.

பக்கம் 2

**யாழ்ப்பாணத்தின் கல்வியில் பின்னடைவு**

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டம் கல்வித்தரத்தில் முதல் இடத்தில் இருந்தது. இன்று யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை பல்வேறு காரணிகளினால் பின் தள்ளப்பட்டிருக்கின்றது.

பக்கம் 7

**அருணோதயாவுக்கு 2 தங்கம் ஒரு வெள்ளி**

கொழும்பில் நடைபெறும் பாடசாலைகளுக்கு இடையேயான 2010ஆம் ஆண்டுக்கான தேசிய ... போட்டியில் யாழ். மாவட்டத்துக்கு 2 தங்கப் பதக்கங்களும் ஒரு வெள்ளிப் பதக்கமும் கிடைத்துள்ளன.

பக்கம் 20



வவுனியா புனர்வாழ்வு நிலையங்களில் இருந்த தமிழீழ விடு தலைப் புலிகளின் முன்னாள் போராளிகளில், 151 பெண்கள் உள்ளிட்ட 401 பேர் நேற்றுக் காலை பெற்றோர் மற்றும் பாதுகாவலர் களி டம் ஒப்படைக்கப்பட்டனர். விடுதலையான முன்னாள் போராளி ஒருவர் தனது குழந்தையுடன் காணப்படுகிறார். ( 3 ஆம் பக்கமும் பார்க்க)

## வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, ஒக்.01

வடமாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாதத்தை ஒழித்து அங்கு உடனடியாகத் தேர்தலை நடத்தமுடியும் என்றால் வடக்கில் போர் முடிந்து ஒன்றரை வருடம் ஆகிய பின்னரும் ஏன் தேர்தலை நடத்த முடியாது என கட்சி கேட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் மேல்மாகாண சபை உறுப்பினர் ஹர்சண ராஜகருண இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டு மக்கள் நிம்மதி (24ஆம் பக்கம் பார்க்க)

## பிறப்பு, இறப்பு,விவாகப் பதிவுகள் யாழ். செயலகத்தில் கணனிமயம்

### நேற்று முதல் பணிகள் முழு வீச்சில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். மாவட்ட செயலத்தில் பிறப்பு, இறப்பு, விவாக மற்றும் காணிப்பதிவுகள் அனைத்தும் கணனி மயமாக்கப்படுகின்றன. இதற்கான பணிகள் நேற்றுமுதல் முழுவீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ். மாவட்ட உதவிப் பதிவாளர் த.பிரபாகரன் தெரிவித்தவை வருமாறு :-

யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் பதிவுகள் யாவும் பதிவேட்டிலேயே பேணப்பட்டுவந்தன. இதனால் பிறப்பு, இறப்பு, விவாக பதிவுகளைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவந்தனர்.

இதனைக் கருத்திற் கொண்டு (24ஆம் பக்கம் பார்க்க)

## சென்ற வேகத்திலேயே திரும்பியது வயாவிளான் மகா வித்தியாலயம்

வலி.வடக்கு, ஒக். 01

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஒரு நாள் ஆடம்பர நிகழ்வுடன் மீண்டும் பழைய இடத்துக்கே திரும்பியது.

இந்த வித்தியாலயம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் மற்றும் வடக்கு மாகாண சபை ஆளுநரிடம் படையினரால் கையளிக்கப்பட்டது. அது தொடர்பான நிகழ்வில் அமைச்சர், பிரமுகர்கள் கலந்துகொண்டு ஆரவாரப்படுத்தினர்.

அதற்கு முதல்நாளே பாடசாலையின் தளபாடங்கள் வயாவிளானுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் அங்கு அழைத்துச் செல்லப்பட் டனர்.

பாடசாலை கையளிப்பு முடிந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## சுண்ணக்கல் அகழ்வு கீரிமலையில் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 1

உயர்பாதுகாப்பு வலயத்தில் மாவிட்டபுரம் - கீரிமலை வீதியின் தெற்குப் பக்கத்திலும் வடக்குப் பக்கத்திலும் சுண்ணக்கல் அகழ்வது தற்போது இடைநிறுத்தப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் சுண்ணக்கல் அகழ்வது தொடர்பாகப் பலதரப்பட்டோராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. இந்த விவகாரம் தொடர்பாக (24ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation

# வடக்கு மக்களுக்கு அன்று அநீதி இழைக்கப்பட்டது உண்மையே!

## முன்னாள் யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர் சிறிமானே சாட்சியம்

கொழும்பு, ஒக். 01

வடக்கு மக்களுக்கு அன்று அநீதி இழைக்கப்பட்டது உண்மையே. எனவே, அவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையில் முன்னர் பணியாற்றிய அரச ஊழியரான டபிள்யூ. எம். சிறிமானே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்றுமுன்தினம், கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது சாட்சியமளித்தலை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தபோது, தாம் மிகவும் உணர்வுபூர்வமானவர் என்று கூறினார். அவ்வாறே தமது சாட்சியத்தின்போது நான்கு தடவைகள் அழுதும்விட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியவை வருமாறு:-

தெற்கைச் சேர்ந்த நான் 1979களில் யாழ். மாநகர சபையில் எழுதுவினைஞராகக் கடமை புரிந்தேன். அப்போது எனக்குத் தமிழ் தெரியாது என்பதற்காக எனது வசதிக்காக மும்மொழியும் தெரிந்த ஒருவருடன் நான் பணிக்கு அமர்த்தப்பட்டேன். மேலும் அங்குள்ள மக்கள் என்னை அன்புடன் பார்த்துக்கொண்டனர். எனது மேலதிகாரியின் இல்லத்துக்கும் நான் செல்வேன்.

அங்கு பணிபுரிந்த காலத்தில் அடிக்கடி யாழ். நூலகத்துக்குச் செல்வதுண்டு. அங்கு பெரியவர்கள், சிறியவர்கள் எனப் பலரும் பல இடங்களில் மிகவும் ஆர்வமாக வாசித்துக்கொண்டிருப்பார்கள். படிக்கட்டுக்களிலிருந்தும் வாசித்துக்கொண் டிருப்பார்கள். அவ்வாறான காட்சியைத் தெற்கில் என்னால் காண முடியவில்லை. அந்தக் காலத்தில் நானும் மிகவும் ஆவலுடன் யாழ். நூலகத்தில் பத்திரிகைகளைப் படிப்பேன்.

ஆனால், இரண்டு மாதங்களே என்னால் அங்கு பணிபுரிய முடிந்தது. பின்னர் அங்கு ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நான் இடமாற்றம் பெற்று குருணாகல் பகுதிக்கு வந்தேன். அதாவது, அந்தக் காலகட்டத்தில் லயனல் பெர்னாண்டோ என்பவர் யாழ்ப்பாணத்தின் அரச அதிபராகப் பணியாற்றினார். அவர் திடீரென கொழும்புக்கு மாற்றப்பட்டார். இதனை யாழ். தமிழ்க் கட்சிகள் விரும்பவில்லை. இதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட பதற்ற நிலைமை காரணமாகவே நான் வரவேண்டியேற்பட்டது.

அதன்பின்னர் 1981ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில், மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல் நடந்தது. அந்தக் காலகட்டத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரின் உத்தரவின்பேரில் நாங்கள் தேர்தல் கடமைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் அழைத்துச் செல்லப்பட்டோம். வாக்களிப்பு காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகும் என்றும், காலை 10 மணிக்குப் பின்னர் வாக்களிக்க வருகின்ற மக்களை இராணுவ உதவியுடன் விரட்டிவிட்டு வாக்குச்சீட்டில் நாங்களே புள்ளடியிட்டு பெட்டிகளில் இட வேண்டும் என்றும் கூறப்பட்டது. முக்கிய அமைச்சர் ஒருவரால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

அதாவது சில வருடங்களுக்கு முன்னர் மாநகர சபையில் பணியாற்றிவிட்டு அந்த நேரத்தில் அப்பகுதி மக்களுக்கு எதிராக என்னால் செயற்பட முடியவில்லை.

இதனால், நானும் மற்றுமொரு அரச ஊழியரும் தேர்தல் கடமைகளுக்குச் செல்லாமல் அன்றைய தினம் வெளியே வந்துவிட்டோம். சிறிது நேரத்தின் பின்னர் யாழ். மாநகர சபைக்குச் சென்றோம். மாநகரசபை மூடப்பட்டுக் கிடந்தது. அதன் பின்னர் சில வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்றோம்.

மாலை ஐந்து மணியாகிய நிலையிலும் வாக்களிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. காலை 10 மணிக்குப் பின்னர் வாக்களிக்க வருபவர்கள் விரட்டப் படவேண்டும் என்று எங்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது எனக்கு உடனே நினைவுக்கு வந்தது. ஆனால், ஐந்து மணியாகியும் வாக்களிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

சற்று விசாரித்துப் பார்த்தேன். அதாவது யாழ். உதவித் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பல தடைகளையும் மீறி மக்களுக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்ததைக் காண முடிந்தது.

அதன் பின்னர் எனது சக உத்தியோகத்தருடன் நான் முன்னர் விரும்பிப் பத்திரிகை வாசிக்கும் இடமான யாழ். நூலகத்துக்குச் சென்றேன். அங்கே நான் கண்ட காட்சி அபாயகரமானது. நூலகத்திலிருந்து மேலாக பாரிய புகை மண்டலம் வந்துகொண்டிருந்தது. அதாவது, தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகம் எரிந்துகொண்டிருந்தது.

மக்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதனர். பலர் பதறிக் கொண்டு ஓடினர். எங்கள் செல்வம் அழிக்கப்பட்டுவிட்டது என்று கதறியழுதனர். பின்னர் தேர்தல் முடிவுகள் வெளியாகின. என்னதான் வாக்குகள் கொள்ளையடிக்கப்பட்டாலும் தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி வெற்றி பெற்றது. தெற்கிலிருந்து வாக்குகளைக் கொள்ளையடிக்கச் சென்றவர்கள் சர்வதேச அபகீர்த்தியுடன் கொழும்பு திரும்பினர்.

இவ்வாறான அநீதிகள் வடக்கு மக்களுக்கு அன்று இழைக்கப்பட்டது உண்மையே.

தெற்கு மக்களோ வடக்கு மக்களோ கடந்த கால யுத்தத்துக்கு காரணமல்ல. மாறாக இருதரப்பு மக்களும் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டனர். அரசியல்வாதிகள் தமது அதிகாரங்களைத் தக்க வைப்பதற்காக எடுத்த தீர்மானங்களே இவ்வாறானதொரு பிரச்சினைக்கு வித்திட்டது என்பதே எனது நிலைப்பாடாகும்.

எனவே, தற்போது ஒரு விடயத்தை வலியுறுத்திக் கூறுகின்றேன். அதாவது, வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் சகல வசதிகளுடனும் மீளக்குடியமர நடவடிக்கை எடுப்பது அவசியம். மீண்டும் பிரச்சினை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

- இப்படித் தெரிவித்தார். (சி)

## இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கியமை பழிவாங்கும் முயற்சி

### ஜே.வி.பி. விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு

இரண்டாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கியதன் மூலம் சரத் பொன்சேகாவைப் பழிவாங்கும் முயற்சியை நாட்டுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்.

- இவ்வாறு ஜே.வி.பி. நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின்சட்டத்துக்கும், நேர்மைக்கும் மாறாக மோசடியான இராணுவ நீதிமன்றத்தை அரசு உருவாக்கி இருப்பது தனக்கு எதிரான சக்திகளைப் பழிவாங்குவதற்கே என்பது இதன்மூலம் நிரூபணமாகியுள்ளது. யுத்த நீதிமன்றத்தின் மூலம் தனக்குத் தேவையான வகையில் தண்டனை வழங்கும்படி செய்து தனது மோசமான நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதுடன் அதை நாட்டின் முன் முறையானதெனக் காட்டிக்கொள்ள அரசு முயற்சிக்கிறது.

தனது அதிகாரத்துக்காக மோசடி செய்வோர், குண்டர்கள் ஆகியோருக்கு சலுகைகளை வழங்கும் ராஜபக்ஷ நிர்வாகம் கொடூரமான பயங்கரவாதிகளிடமிருந்து தாய் நாட்டை மீட்டெடுக்கப் பாடுபட்ட சரத் பொன்சேகா மீது மோசடிக் குற்றச்சாட்டைச் சுமத்தியது படு மோசமான செயலாகும். - இப்படி அவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)



*வடமராட்சி கிழக்கில் மீள் குடியேறியவர்கள் கடற் றொழில் மேற்கொள்ள நேற்றுமுன்தினம் முதல் அனுமதிக்கப்பட்டார்கள். 551ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுகத் பெரேரா படகின் இயந்திரத்தை இயக்கி கடற் றொழிலை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:கர்ணன்)*

## யாழ்.பல்கலையில் பொறியியல், விவசாய பீடங்கள்; ஆரம்பிக்க இந்தியா சகல உதவிகளையும் வழங்கும்

### அமைச்சர் திஸநாயக்காவின் விஜயத்தில் இணக்கம்

கொழும்பு,ஒக்.1

யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை ஆரம்பிக்கத் தேவையான உதவிகளை வழங்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க இந்தியா சென்றிருந்த வேளை மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கபில் சயிவானுடன் நடத்திய பேச்சுக்களில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

உயர்கல்வி அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்தியப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களது வருடாந்த விடுமுறை காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகங்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு அவர்களது சேவையைப் பயன்படுத்தும் வாய்ப்புத் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது கடந்த 28ஆம் திகதி இந்திய மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கபில் சயிவானுடன் தாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் போது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக அமைச்சர் திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அதே போன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் விவசாய பீடங்களை ஆரம்பிப்பதற்காக இந்திய அரசின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான சம்மதத்தையும் பெற முடிந்துள்ளதாகவும் -

அதேபோன்று இலங்கை பல்கலைக்கழகங்களில் சேவையாற்றும் விரிவுரையாளர்களை இந்தியாவில் பயிற்றுவிப்பதற்கான ஒப்புதலையும் பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் -

அத்துடன் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், அதில் 40 சதவீதத்தை இந்திய மாணவர்களுக்கு வழங்குவதெனவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் திஸநாயக்க தெரிவித்துள்ளார் - என்றுள்ளது. (ஒ-ஐ)

## செம்பியன்பற்று, மருதங்கேணியில் 163 குடும்பங்கள் நேற்று மீள் குடியமர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.1

உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீட்டில் தங்கியிருந்த 163 குடும்பங்கள் அவர்களது சொந்த இடமான வடமராட்சி கிழக்கில் நேற்று வியாழக்கிழமை மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

செம்பியன்பற்று வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 17 குடும்பங்களும், செம்பியன்பற்று தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 26 குடும்பங்களும், மருதங்கேணி கிராம அலவலர் பிரிவில் 54 குடும்பங்களும் வத்திராயன் கிராம அலுவலர் பிரிவில் 66 குடும்பங்களும் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கின் கிராம அலுவலர் பிரிவுகளான செம்பியன்பற்று வடக்கு மற்றும் தெற்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்வதற்கு உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தவர்களுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அவர்களில் மீளக் குடியமராதவர்களின் ஒரு தொகுதியினரே நேற்றைய தினம் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் இதுவரை ஆயிரத்து 947 குடும்பங்களைச்சேர்ந்த ஐந்தாயிரத்து 805 அங்கத்தவர்கள் நேற்றுவரை மீளக் குடியமர்த்தப் பட்டுள்ளனர் என உதவி அரசாங்க அதிபர் ரி.திருலிங்கநாதன் தெரிவித்தார். (ஐ-14)

## எதிர்பார்த்தளவு பொருளாதாரப் பிரதிபலன் வடக்கு மற்றும் கிழக்கில் கிடைக்கவில்லை!

### பொருளியல் நிபுணர் கலாநிதி சமன் கெலேகம தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 01

"வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் எதிர்பார்த்தளவுக்கு பொருளாதாரப் பிரதிபலன்கள் உரிய முறையில் கிடைக்கவில்லை."

- இவ்வாறு பொருளியல் நிபுணர் கலாநிதி சமன் கெலேகம தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதில் அரசின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளும் வலுவற்றனவாக அமைந்துள்ளன.

கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவரும் முயற்சியிலும் அரசு செயலிழந்துள்ளது. அவ்வாறான காலத்தில் ஜனாதிபதி அரசியல் அமைப்பு மற்றும் நிறைவேற்றதிகாரம் என்பவற்றுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்துவது இலகுவான காரியமாக அமையவில்லை. இதன்மூலம் போர்நிறுத்தம் செயலிழந்தமையை அவதானிக்கமுடிந்தது.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## முல்லைத்தீவு வலயத்துக்கு புதிய பணிப்பாளர்

வட மாகாணக் கல்வி அமைச்சில் கடமையாற்றிய எஸ்.கிருஷ்ணகுமார் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக இன்று முதல் பதவியேற்கிறார்.

இதேவேளை, முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளராக இதுவரை கடமையாற்றிய மா.தேவேந்திரன் வட மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இந்த நியமனத்தை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளார். (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்படும் முன்னாள் போராளிகளின் பாதுகாப்புக்கு அரசு முழு உத்தரவாதம்

## வவுனியா வைபவத்தில் அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.01

விடுதலை செய்யப்பட்டவர்களின் முழுப் பாதுகாப்புக்கும் அரசு உத்தரவாதமளிக்கும். இதுவரை விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு பொலிஸாரிடமிருந்தோ, பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்தோ துன்புறுத்தல்கள் ஏற்பட்டதாக எமக்கு எந்தவிதமான முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை - என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

முன்னாள் போராளிகள் 403 பேரை புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுவித்து அவர்களுடைய பெற்றோர்களிடம் அவர்களை ஒப்படைக்கும் வைபவம் நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:-

**கேள்வி:**-விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு ஏதாவது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளனவா?

பதில்:-விடுதலை செய்யப்பட்டவர்கள் எந்தவிதமான நிபந்தனைகளோ, கட்டுப்பாடுகளோ இன்றித் தொடர்ந்து புது வாழ்க்கையில் ஈடுபடலாம். அவர்களுக்கு எந்தவிதமான தடையும் இல்லை. எவரும் எதுவித கட்டுப்பாடுகளையும் அவர்களுக்கு ஏற்படுத்த முடியாது.

**கேள்வி:**- முன்னாள் போராளிகள் வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும், பல உயர்மட்ட அரசியல் பதவிகளிலும் இருந்துள்ளனர். விடுதலை செய்யப்பட்டமையை அடுத்து இவர்கள் மீண்டும் அப்பதவிகளுக்கு உள்வாங்கப்படுவார்களா?

பதில்:-நிச்சயமாக எந்தவித குற்றச்செயல்களுடனும் தொடர்புடையவர்கள் அல்லர் என விடுவிக்கப்பட்டவர்கள் உள்வாங்கப்படுவர். ஆனால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் நீதிமன்றின் மூலம் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டால் அதற்கு நீதிமன்றம் வழங்கும் தண்டனையை ஏற்கத்தான் வேண்டும். அதில் நான் தலையிடமுடியாது.

**கேள்வி:**- இதுவரை காலமும் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான பயிற்சிகள் வழங்கப்பட்டன?

பதில்:- உயர் தகைமையுடையவர்கள் கணினித்துறையில் பயிற்றுவிக்கப்பட்டனர். அத்துடன், ஏனையவர்களுக்கு தையல், சிறுகைத்தொழில், கலை ஆகிய துறைகளிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

நூறு சதவீத சிங்களவர்களைக் கொண்ட ஜே.வி.பியினர் ஐந்து வருடங்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான பயிற்சியும் வழங்கப்படவில்லை.

**கேள்வி:**-வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு அதிகாரசபை எவ்வாறு இயங்கப்போகின்றது?

பதில்:- முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவுவதே எமது நோக்கம்.- இவ்வாறு அவர் கூறினார். (ஒ-சி)

## வெள்ள அனர்த்தம் ஏற்படக்கூடிய இடங்களை இனங்காணுமாறு பணிப்பு

நாவற்குழி,ஒக்.1

எதிர்வரும் மாதங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்படக் கூடிய பகுதிகளை இனங்கண்டு அறிக்கை இடுமாறு பிரதேச செயலர்களை யாழ்.அரச அதிபர் பணித்துள்ளார்.

வெள்ள அனர்த்தத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான முன் ஏற்பாட்டினைச் செயற்படுத்தும் நோக்குடனேயே இத்தகவல் திரட்டப்படுகின்றது.

பாதிப்புக்குள்ளாகுமென எதிர்பார்க்கப்படும் கிராம சேவையாளர் பிரிவும் கிராமமும் பாதிப்படையக் கூடிய சனத்தொகை, வெள்ளத்தால் இடம்பெயர ஏற்படின் தங்க வைக்கக் கூடிய இடங்கள், அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் வசதிகள் ஆகிய விவரங்கள் இதில் கோரப்பட்டுள்ளன. (த-121)

## கல்விச் சுடர்

* இன்றைய கல்விச் சுடரில் வெளியாகும் வரலாற்றுப்பாட வினாத்தாளுக்கான (பகுதி I) விடைகள் எதிர்வரும் திங்கட்கிழமை தமிழ்மொழி வினாத்தாளுடன் வெளிவரும்.
* எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அம்பாறை மாவட்ட பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள்கள் வெளிவரும்.
* சகல வினாத்தாளுக்குமான பகுதி II பகுதி III இற்கான விடைகள் சனிக்கிழமை வெளிவரும்.

## சன்சீ கப்பல் உரிமையாளர் மீது கனடாவில் வழக்கு

கொழும்பு, ஒக். 01

ஈழ அகதிகள் 492 பேரை கனேடிய நாட்டுக்கு ஏற்றிச் சென்ற 'சன் சீ' கப்பலின் உரிமையாளர் எனக் கூறப்படுகின்ற இலங்கைத் தமிழர் ஒருவருக்கு எதிராகக் கனேடிய பொலிஸார் கடத்தல் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

சட்ட விரோதமான முறையில் குறித்த கப்பலில் ஆள்களை ஏற்றிக்கொண்டு கனடா வந்தடைந்தமை தொடர்பாக அந்நாட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரிடம் மேற்கொண்டுள்ள விசாரணைகளில் மூலமே இவர்தான் கப்பலின் உரிமையாளர் என்ற விடயம் தெரிய வந்துள்ளது.

அதேவேளை, இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு கனேடிய நாட்டுக்கு வந்தடைந்த இக் கப்பலில் கப்பல் சொந்தக்காரர் எனக் கூறப்படும் இந்த நபரும், இவரது கர்ப்பிணியான மனைவியும் கூடவே வந்திருந்தனர் என்றும் கனேடிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தாதியர் சுகயீன போராட்டம்

கொழும்பு, ஒக்.01

அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதிமார்கள் 11 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று அதிகாலை 7.30 மணி முதல் சுயீனப் போராட்டம் நடத்தினர். இன்று காலை 7.30 மணிக்கு இந்தப் போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டது.

இந்த சுகயீனப் போராட்டம் குறித்து அகில இலங்கைத் தாதியர் சங்கப் பேச்சாளர் எஸ்.பி. மெதவத்த தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜூலை 2ஆம் திகதி நாடு முழுவதும் தாதியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். இத் தொழிற்சங்க நடவடிக்கையின்போது அரசு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்தது.

ஆனால் அரசு அந்த உறுதிமொழியை உதாசீனப்படுத்திவிட்டு, இன்னும் இதற்கான தீர்வைப் பெற்றுத்தரவில்லை. இதனைக் கண்டித்தே இப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும் நோயாளிகளை சிரமங்களுக்கு உள்ளாக்குகின்றமை இப் போராட்டத்தின் நோக்கமல்ல. - இப்படி அவர் தெரிவித்தார். (சி)



## நாட்டைக் காத்தவருக்கு ஜனாதிபதியின் பரிசு சிறை

### குமுறுகிறார் அனோமா

கொழும்பு, ஒக். 01

பயங்கரவாதத்திலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்ட எனது கணவருக்கு ஜனாதிபதி நல்ல பரிசை வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் சுயரூபம் இப்போது மக்களுக்குத் தெளிவாக விளங்கியுள்ளது. - இப்படி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா நேற்றுக் கூறினார்.

நாவலயில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எனது கணவருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டமையானது வரலாற்றில் என்றுமில்லாத ஒரு நிகழ்வு. பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கப் போராடிய எனது கணவருக்கு ஜனாதிபதி நல்ல பரிசை வழங்கிவிட்டார்.

ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு மூலம் அவரது சுயரூபம் தெரியவந்துள்ளது. இராணுவ நீதிபதிகள் வெறும் பொம்மைகள். அரசுதான் இந்தத் தீர்ப்பின் பின்னணியில் இருந்தது.

இந்தத் தீர்ப்பு சீருடை அணிந்த படையினர் அனைவரையும் அவமதிக்கும் ஒன்றாகும். படையினர் அனைவரும் இத்தீர்ப்பை நிராகரிக்கவேண்டும். இத்தீர்ப்புக்கு எதிராக இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இத்தீர்ப்பை பார்த்து நாம் பின்வாங்கமாட்டோம். எனது கணவரை மீட்கும் வரை தொடர்ந்து போராடுவோம். எனது கணவர் முதுகெலும்புள்ளவர். அதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். - என்றார். (சி)

## ஜப்பானில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.01

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இலங்கை அரசு விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தி ஜப்பானில் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இலங்கையில் ஜனநாயகத்துக்கான அமைப்பு என்கிற சங்கத்தின் ஜப்பானியக் கிளை இப் பேரணியை நடத்தியது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராகவும் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஜப்பானிய மொழியிலும் எழுதப்பட்ட பதாகைகளைத் வைத்திருந்தனர்.

அத்துடன் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (சி)

## கரைச்சிப் பிரதேச செயலர் பதவியிலிருந்து இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.01

கரைச்சிப் பிரதேசசபை செயலாளர் பே.குலேந்திரன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் உத்தரவின் பேரில் நேற்று முதல் பணியிலிருந்து இடைநிறுத்தப்படுகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாக நடவடிக்கைகளை துஷ்பிரயோகம் செய்யதார் என்ற காரணத்தினாலேயே கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் பணியில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார் என்றும் இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் மேற்கொண்டு வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் கேட்டபோது; விசாரணைகளை தாம் ஆரம்பித்திருப்பதாகவும் எனினும் அது தொடர்பாக தற்போது எதுவும் தெரிவிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

## உலர் உணவுத்திட்ட நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற உணவுப் பொருள்களுக்கான செப்ரெம்பர் மாதத்துக்குரிய வழங்கல் கட்டளைகளைப் பெற்ற ப.நோ. கூ. சங்கங்கள் தமக்குரிய பொருள்களை நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் கோப்பாய் உலக உணவுத் திட்ட களஞ்சியத்தில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார்.

வழங்கற் கட்டளைகள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தின் உலக உணவுத் திட்ட முகாமைத்துவப் பிரிவினால் ப. நோ.கூ சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

## ஐ.தே.கட்சி கடும் கண்டனம்

கொழும்பு, ஒக்.01

சரத் பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி அங்கீகரித்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் கண்டனம்தெரிவித்துள்ளது. பொன்சேகாவின் விடுதலைக்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தப்போவதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மங்கள சமரவீர எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் பயங்கரவாதத்தைத் தோற்கடித்த இராணுவ தளபதி சரத் பொன்சேகா மீதுள்ள தனிப்பட்ட கோபத்தால் அரசு அவரைப் பழிவாங்கிவிட்டது. அவருக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கியுள்ள 30 மாத காலத்துக்கான சிறைத்தண்டனையை ஜனாதிபதி அங்கீகரித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றத்தை ஸ்தாபித்தவர் ஜனாதிபதி. இராணுவ நீதிமன்றில் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அல்லது கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மிகவும் வேண்டப்பட்டவர்கள்.

இராணுவ நீதிபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் மிலிந்த பெரேரா தற்போதைய இராணுவத் தளபதியின் மைத்துனர். இவ்வாறு அனைத்து நீதிபதிகளும் உறவினர்கள்தான். பொன்சேகாவுக்கான தீர்ப்பானது திட்டமிட்ட பழிவாங்கலாகும்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ஒருமுறை பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் சரத் பொன்சேகாவைத் தூக்கில் போடுவார் என்று கூறினார். இதிலிருந்து எல்லா ஏற்பாடுகளும் பழிவாங்கல்கள்தான் என்பது தெரிகின்றது.

பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இப்போது ஜனாதிபதி அங்கீகரித்து அதில் கையெழுத்திட்டுள்ளார். இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதற்கு எதிராக நாம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் போராட்டங்களை நடத்துவோம். பொன்சேகாவின் விடுதலைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நாம் மேற்கொள்வோம் - என்றார். (சி)

## நவாலி மகாவித்தியாலய நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.1

நவாலி மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவுக்கான ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நூற்றாண்டு விழாப் பணிகள் சிறக்க வலி.தென்மேற்கு பிரதேச மக்களும், வர்த்தகப் பெருமக்களும் மனமுவந்து உதவ முன்வர வேண்டும் என நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் நவாலி மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழவைக் கொண்டாடவுள்ளது.

அன்றைய தினம் நவீன வடிவிலான இருமாடிக் கட்டடம் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனால் திறந்து வைக்கப்படும். மறுநாள் பரிசளிப்பு விழாவும் நூற்றாண்டு விழாவும் சிறப்பு மலரும் வெளியிட்டுவைக்கப்படும். (த-302)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேவை

ஆங்கிலம் சரளமாக எழுதவும் பேசவும் கூடிய (PROFESSIONAL) "ASSOCIATION OF BUSINESS EXCECUTIVES (U.K)" DIPLOMA IN BUSINESS ADMINISTRATION தகைமை உடைய, கொழும்பில் 10 வருடங்களுக்கு மேல் சர்வதேசப் பாடசாலை மாணவர்களுக்கு [EDEXCELL & CAMBRIDGE (O/L)] வணிகக் கல்வி, வர்த்தகம், கணக்கியல், பொருளியல் GENERAL, ENGLISH LEADING TO SPOKEN, BUSINESS ENGLISH, COMMUNICATION & PRESEN TATION கற்பித்த, அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவர், தற்போது யாழ்ப்பாணத்தில் புதிய வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளார். அவருக்கு ATTACHED BATHROOM உடன்கூடிய பொருத்தமான அறை வகுப்புகளை நடத்துவதற்குப் யாழ்ப்பாண புறநகர்ப் பகுதியில் உடன் தேவை.

**பின்வரும் பகுதிகளில் விரும்பத்தக்கது**

- கோயில் வீதி, (கைலாசபிள்ளையார்).
- நல்லூர் வைமன் வீதி.
- நல்லூர் முன், பின் வீதிகளிலும்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அண்டிய பகுதிகளிலும்
- கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பகுதிகளிலும்
- மானிப்பாய்
- சுண்டுக்குளி
- பெருமாள் கோயிலடிச் சுற்றாடலும்

உடன் தேவை.

நியாயமான கவர்ச்சிகரமான வாடகை வழங்கப்படும்.

தொ.பே : 0776110802

(சி/571484)



## ENGLISH

இலக்கணரீதியாக வசனங்களை உருவாக்குதல் மூலமோ தமிழ் வசனத்தை ஆங்கிலமாக மாற்றுதல் மூலமோ ஆங்கிலத்தினை பேச முடியாது. பேசுதலின்போது எண்ணங்கள் பேசுதலாக நேரடியாக ஆங்கிலத்தில் வர வேண்டும்.

1. அமைப்புக்கள், பிரயோகங்கள் பழக்கப்படுத்துவதன் மூலமும்
2. தமிழ்தொடர்பற்ற புதிய Channel உருவாக்குதல் மூலமும்

இலகுவாக, சரளமாக ஆங்கிலத்தை பேசுவதற்கான

3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறியின்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

புதிய பிரிவுகள்: 9-10, 11-12, 1-2, 2-3, 3-4, 5-6

பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், அரச, தனியார் அலுவலர்கள் வங்கியாளர், வெளிநாடு செல்லும் மாணவர்கள் பயிற்சியில் சேரலாம்

குறிப்பு : இலக்கண கற்றல் மூலம் முயற்சிசெய்து ஆங்கிலம் பேச முடியாது போனவர்கள் நீங்கள் யாராக இருந்தாலும் எழுத்துப்பயிற்சி வீட்டுப்பாடம் இன்றி எமது பயிற்சி மூலமாக மூன்றே மாதத்தில் மிக இலகுவாக முழுமையாக சரளமாக ஆங்கிலத்தினை பேச முடியும்.

**MyWay English**

182, Stanley Road, Jaffna. 077 33 63 456


## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 530

சீட்டிழுப்பு திகதி: 29.09.2010

வெற்றி எழுத்து: U  வெற்றி இலக்கங்கள்: 01 32 39 68

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.10,385,443.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 210 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 425 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10740 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6181 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 154405 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 24690 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ.7,248,140.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.10,549,308.80

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஒக். 1

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 837ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "K" என்ற ஆங்கில எழுத்தும் 03/20/25/37 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 54 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப் படவில்லை.

நான்கு இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டினை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்து லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 309 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,411 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2,01,481 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 29,888 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-16)

## வடமாகாண சாரணர் அலுவலகம் இன்று திறப்பு

இலங்கைச் சாரணர் சங்கத்தின் வடமாகாண அலுவலகம் இன்று காலை 8.30 மணிக்கு நல்லூரில் திறந்துவைக்கப்படும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும்,

சிறப்பு விருந்துனர்களாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வட மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறைச் செயலாளர் இ.இளங்கோவன், வட.மாகாண பிரதிச் செயலாளர் த.இராசநாயம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வையொட்டி கச்சேரி பழைய பூங்காப்பகுதியில் மரம் நடும் வைபவம் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும். (ஒ-16)

## கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியில் இன்று சிறுவர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 1

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு ஆதவன் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னதாக சிறுவர்கள் வேடம் புனையப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியசகிதம் முன்பள்ளிக்கு அழைத்து வரப்படுவர். தொடர்ந்து சிறுவர் கௌரவிப்பு நிகழ்வுகளும், சிறுவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-10-405)

## நாளை மின் தடை

வீதி அகலமாக்கும் பணிகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ-16)

## மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்,1

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 88 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை ஒட்டி நடத்தும் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நாளை பிற்பகல் ஒரு மணிக்கும் இறுதி நிகழ்வு நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறும்.

இறுதி நிகழ்வு சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார். (ஒ-ஐ)

## கண்ணீர்க் காணிக்கை

எம்முடன் தன்னலம் கருதாது உறுதுணையாக இருந்தவரும் வட.இலங்கை சுதேச மருத்துவசபை மூலமாக லங்கா சித்த ஆயுள் வேத வைத்தியக் கல்லூரிக்கு காணி, கட்டடம் எடுத்தமைக்கும் கல்லூரியையும் சபையையும் பல ஆண்டுகளாக அரச அங்கீகாரம் இல்லாதிருந்த DAM பட்டத்தினை இந்தவருடம்முதல் அரசாங்கம் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எமக்குப் பக்கபலமாக ஒத்துழைப்புத் தந்த வயதில் மூத்தவராயினும் மிகச்சிறந்ததொரு அன்பு நண்பருமான

**Dr.அ.துரைராஜா DAM**

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு மிகுந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அவரது மகன் கோபி மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுதேச மருத்துவர் ஜெ.ஜெயலன்,
(சுஜீவா வைத்தியசாலை)
செயலாளர், வட.இலங்கை சுதேச மருத்துவ சபை.

(சி/571488)


## பொருளியல்

S.வரதராஜன்

**A/L 2011**
பாடத்திட்ட வகுப்பு
தேசிய வருமானம்
Sat,Sun 12.00 - 1.00
மீட்டல், வினா-விடை வகுப்பு
பிரிவு - I Sat,Sun 8.00 - 9.00
பிரிவு - II Sat,Sun 1.00 - 2.00
ஆரம்பம்: 02-10-10 (சனி)

**A/L 2012**
சந்தைச் சமநிலை
Sat,Sun 10.00 - 11.00
மீட்டல், வினா-விடை வகுப்பு
Sat,Sun 7.00 - 8.00
ஆரம்பம்: 03-10-10 (ஞாயிறு)

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சோமாஸ்கந்தன்

நவாலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சோமாஸ்கந்தன் 28.09.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் ரத்தினபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கதிர்காமு - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் பகீரதியின் அன்புச் சகோதரனும், லிங்கன் (U.S.A), யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிவாணன், காலஞ்சென்ற கௌசல்யா ஆகியோரின் அன்பு மாமனும் பிருந்தா, சுகந்தா, அஜந்தா, ஷமிக்ஷா, கனிஸ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொறளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25/8 A, முதலாம் ஒழுங்கை,
குடா எதண்டா றோட்,
வத்தளை.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

(சி/571485)

### வேலுப்பிள்ளை துரைராஜா

(யாழ்.போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், சித்த ஆயுள்வேத வைத்தியர் - அகஸ்தியர் வைத்தியசாலை)



கரம்பைக்குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும் இல.29, மூத்த விநாயகர் வீதி, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை துரைராஜா நேற்று (30.09.2010) வியாழக்கிழமை சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அனுசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் வாசுகி (லண்டன்), கோபி நாத் (சித்த மருத்துவர்), சுகிர்தரநாத் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கோகுல்நாத் (Q.S.,யாழ்ப்பாணம்), ராகவநாத் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகானந்ததாஸின் (லண்டன்) மாமனாரும் சிதம்பரப்பிள்ளை, வேலாயுதம்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரமேஸ்வரி, இலட்சுமிப்பிள்ளை, சண்முகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

(சி/571487)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொறுப்பு முழுக்க அரசினதே

போர் விட்டுச்சென்ற பெரும் சமூகப் பாதிப்புகளில் விதவைகளின் நிர்க்கதியான நிலையும் மேல் வரிசை யில் இடம்பிடித்திருக்கிறது.வடக்கு, கிழக்கில் மொத்தம் 89,000 பெண்கள் விதவைகளாகிவிட்டனர் என்று குழந்தைகள் நலன் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு நடத்திய கணக் கெடுப்பு மூலம் தெரியவந்துள்ளது. இவர்களில் கிழக்கில் 49,000 பெண்களும்,வடக்கில் 40,000 பெண்களும் கண வர்களை இழந்து, தத்தமது குடும்பங்களின் தலைமைத் துவப் பொறுப்பை தனித்து ஏற்கவேண்டிய நிலைமைக் குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்; நிர்ப்பந்திக்கப்பட்டுள் ளார்கள்.

கிழக்கில் விதவைகளான பெண்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 25,000பேர் தமது குடும்ப அங்கத்த வர்களுக்கு, பிள்ளைகளுக்கு, வயதான தாய், தந்தையருக்கு அன்றாட மூன்று வேளை உணவுக்கும் வழி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இவர்களில் சுமார் ஐம்பது சதவீதத்தி னர் நாற்பது வயதுக்கும் குறைந்த இளம் விதவைகள். மூன் றில் ஒரு பங்கினர் மூன்று குழந்தைகளின் தாய்மார்.

இந்தப் புள்ளிவிவரங்களை குழந்தைகள் நலன் மற்றும் பெண்கள் விவ்கார பிரதி அமைச்சர் எம்.எல் .ஏ.எம்.ஹிஸ் புல்லா வெளியிட்டிருக்கிறார். வடக்கில், வன் னியில் பாதிக் கப்பட்ட விதவைகளின் புள்ளி விவரங்களும் அனேகமா கக் கிழக்கை அண்மித்ததாகவே இருக்கும் என நம்பலாம்.

மொத்தத்தில், பாதிக்கப்பட்ட பெண்கள் அனை வரும் தத்தமது குடும்ப அங்கத்தவர்களை உரிய முறையில் பராம ரிக்க இயலாத கஷ்ட நிலையில் நொந்து நொடிந்து போயுள்ளார்கள். அவர்களின் பிள்ளைகள் வடக்கு, கிழக் கின் எதிர்காலப் பிரஜைகள். அந்தச் சிறு வர்களின் தேவை களை நிறைவேற்ற வேண்டிய நேரடிப் பொறுப்பும் பளு வும் குடும்பத் தலைவர்களாக மாறி யுள்ள விதவைகள் தலையிலேயே பொறிந்துள்ளது; போரின் கொடுமைகளில் ஒன்றாகப் பொறிக்கப்பட்டுள்ளது என்பதே பொருத்தம்.

போரினால் பாதிப்புற்றுத் தமது பிள்ளைகளை வளர்த் தெடுத்து வாழ வைப்பதற்கு வழியின்றி வாடும் விதவை களின் குடும்பங்களுக்குக் கைகொடுத்து துணை நிற்கும் பொறுப்பு முழுக்க முழுக்க அரசாங்கத் துக்கே உண்டு. இனப்பிரச்சினையை ஜனநாயக வழி முறையில் தீர்ப்பதில் அக்கறை இன்றி, விருப்பம் இன்றி, இராணுவ முறையில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எடுத்த முடிவின் விளை வாக தமிழ், முஸ்லிம் மக்கள் அனுபவித்துவரும் துன்ப துயரங்களுக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும்.

2005ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தை மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று பலதரப்பு களும் வலியுறுத்திய போதிலும், ஜனாதிபதி அதனை விரும்ப வில்லை என்றும், போர் என்றால் போர் என்ற வழி யைக் கையாண்டு அதனை வென்றார் என்றும் அரசின் உயர் அதி கார தரப்பில் இருந்து தகவல் வெளியிடப் பட்டுள்ளது. இதனை நாம் எமது குறிப்புரை யாகச் சொல்லவில்லை. ஜனாதிபதியின் சகோதரரும், அவரது வலதுகையுமான பாதுகாப்புச் செயலாளர் மிகப் பெருமிதத்தோடு இவ்விதம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை மத்திய வங்கியின் அறுபதாவது ஆண்டு விழாவை முன்னிட்டு ராஜகிரியவில் நடைபெற்ற "பொரு ளாதார முகாமைத்துவமும் போரினால் கற்றுக் கொண்ட பாடங்களும்" என்ற பொருளிலான கருத்தரங்கில் பேசுகை யிலேயே கோத்தபாய இந்த 'இரகசியத்தை' வெளியிட் டிருக்கிறார்.

ஆகையால் போரினால் மக்களுக்கும் நாட்டுக்கும் உண் டான இழப்புக்கள், பாதிப்புக்கள், நஷ்டங்கள், கஷ்டங் களுக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதி களைச் சேர்ந்த விதவைகளின் ஏழ்மையையும், இயலா மையையும் வாழ்க்கைக் கஷ்டங்களைப் போக்குவதற் கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக ஊடகங் கள் மூலம் பிரசித்தப்படுத்தினால் மட்டும் போதாது.

அரசாங்க அமைச்சர்களும் அதிகாரிகளும் தாம் தயா ரித்துள்ள புனர்வாழ்வுத் திட்டங்களை - வெறும் காகிதத் திட்டங்களை - பிரசித்தப்படுத்திக் கொள்வதால் எவ்வித பயனும் இல்லை. இவ்விதமான அரசியல் வெறு வாய் சப்புதல்களினால், பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கை சீராகப் போவதில்லை.

ஒரேவிதமான நிவாரண அல்லது புனர்வாழ்வு நடவ டிக்கைகள் எல்லாக் குடும்பங்களினதும் விதவைகளின தும் வாழ்வு நிலையை உயர்த்தாது. பிள்ளைகளின் எதிர் காலத்தையும் வளர்க்காது; வளமாக்காது.

போர் முடிந்து ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. ஆனால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் மீள்குடியேற்றம் அதன் பின் னரான அடிப்படைத் தேவைகள் இன்னமும் பத்து வீதம் தானும் நிறைவேற்றப்பட்டதாக இல்லை.

வடக்கிலும் கிழக்கிலும் மாரி காலம் ஆரம்பமாகி விட்டது. மீள்குடியமர்ந்தவர்கள் தறப்பாழ்களுடனும் கொட்டில்களு டனும் எவ்வாறு வாழ்க்கையை நடத்தப் போகிறார்கள்?

அவர்களின் நாளாந்த வாழ்க்கைக்கான தேவைகள் எவ் வாறு நிறைவேற்றப்படும்? வெட்டவெளியான நிலங் களில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் வெள்ளத்தில் மூழ்கு வதா? அதனைத் தடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டாயிற்றா? அதற்குச் செயல் வடிவம் கொடுக்க நிதி வசதி உண்டா?

மீளக்குடியேறியோரினதும், போரினால் ஏனைய வழிக ளால் பாதிக்கப்பட்டோரினதும் தேவைகள் ஏராளம், ஏராளம். அவற்றை நிறைவேற்றும் பணிகள் ஆமை வேகத்திலேயே நகர்கின்றன.

வடக்கு, கிழக்கு மக்களும் நாட்டின் ஏனைய பிரதேச மக்கள் போன்று கஷ்டங்கள், துன்பங்கள் இன்றி இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப இன்னும் எத்தனை காலம் செல்லும்?

இத்தனைக்கும் பதிலும் பொறுப்பும் கூற வேண்டிய கடமை அரசாங்கத்துக்கே உண்டு. வெளிநாடுகளுக்கோ அல்லது அவற்றின் தொண்டு நிறுவனங்களுக்கோ அல்ல. போருக்குக் கோடி கோடியாகச் செலவிட்ட அரசு, பாதிக் கப்பட்ட மக்களுக்குரிய சேவைகளை ஆற்றுவதற்கும் உதவுவதற்கும் பிறதரப்புக்களை நம்பியிருப்பது பெரும் வேடிக்கையாகும்; வெட்கத்துக்கு உரியதுமாகும்.

# பல்துறைசார்ந்த அறிவை மக்களுக்கு வழங்கவேண்டியவர்கள் எழுத்தாளர்களே

## நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சிவசந்திரன் உரை

சுன்னாகம்,ஒக்.1

பல்துறை சார்ந்த அறிவினை எமது மாணவர்களுக்கு வழங்க வேண் டிய பணி எழுத்தாளர்களைச் சாரும். இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் இரா.சிவசந்திரன். பொ.ஐங்கர நேசனின் ஏழாவது 'ஊழி' நூல் வெளி யீட்டு விழா யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடை பெற்ற போது மதிப்பீட்டுரை ஆற்று கையிலேயே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

இளைப்பாறிய அரச நிர்வாக அதிகாரியான சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

இன்றைய உலகம் அறிவுசார் உலகமாகும். பல்துறை சார்ந்த அறி வைப் பெற்றுக் கொண்டு அவற்றை எமது மாணவர்களுக்கு வழங்கும் திறமைமிக்கவர்கள் எமது சூழலில் உருவாக வேண்டும். பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை நீண்ட காலமாக சுயமொழிக் கல்வி நடை முறையில் உள்ள போதும் தமிழில் அறிவியல் நூல்களின் வரவு குறை வாகவே உள்ளது. அவ்வகையில் இத்தகைய நூல்களின் வரவு முக்கி யத்துவம் வாய்ந்ததாகும்.

உலக மயமாக்கலில் உலக நாடுகள் யாவும் சிக்குண்டுள்ளன. உலக மயமாக்கலின் விளைவாக சுற்றுச் சூழல் பிரச்சினைகள் அதிக மாக உள்ளன. சுற்றுச் சூழல் பிரச்சி னைகளை உலக ரீதியாகவும், அதே வேளை நமது வடக்கு, கிழக்குப் பிரதேச ரீதியாகவும் என இரு நிலை களில் மதிப்பிட்டு எமக்கான தீர்வி னைத் தேடவேண்டியவர்களாக உள் ளோம்.

வடமாகாணத்தில் 51 வீதமான பிரதேசத்தில் காடுகள் இருந்தன. ஆனால் இன்று பெருமளவான பிர தேசத்தில் மரங்கள் வெட்டப்பட்டும், காடுகள் அழிக்கப்பட்டும் உள்ளன. 30 வருட யுத்தத்தில் இலட்சக்கணக் கான பயன்தரு மரங்கள் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் உயர்பாது காப்பு வலயமாகப் பிரகடனப்படுத் தப்பட்ட பகுதியில் பெருமளவில் சுண் ணக் கற்கள் அகழப்பட்டுள்ளன. இரண்டு பனையளவு ஆழத்தில் தொடர்ந்தும் சுண்ணக் கற்கள் அக ழப்படுகின்றன. சுனாமி போன்ற தொரு அழிவு இடம்பெறும் போது இப் பகுதி கடல் நீராக மாறும் அபாய முள்ளது. இவை தொடர்பான விழிப் புணர்வு மக்களுக்கு அவசியமாகும். அதை ஏற்படுத்த இத்தகைய நூல் கள் உதவும்- என்றார்.

மருத்துவர் யமுனாநந்தா வெளியீட் டுரையினை நிகழ்த்த, த.தே.கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நூலை வெளியிட்டு வைத்தார். 'அகவிழி' ஆசிரியர் தெ.மதுசூதனன் மதிப்பீட்டு ரையை நிகழ்த்தினார். (உ-38)

## வரணி உப அஞ்சல் அலுவலகத்துக்கு தொலைபேசி

தென்மராட்சி,ஒக்.1

வரணி உப அஞ்சல் அலுவலகத் துக்கு அண்மையில் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக இந்த அலுவலகத் துக்குத் தொலைபேசி வசதி இல்லை.

அண்மையில் ஒருவருக்கு நேர் முகப் பரீட்சை ஒன்றிற்கு தந்திச் செய்தி மூலம் அழைப்பு விடுக் கப்பட்டிருந்தது. தொலைபேசி வசதி இன்மையால் இந்த தந்தி மூலமான செய்தி இவ்வலுவலகத்திற்கு சாதா ரண தபால் மூலமே உரியவருக்குக் கிடைத்தது- கிடைத்த தினமே நேர்முகப் பரீட்சை இடம்பெற்றதால் உரியவர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போனதும் குறிப் பிடத்தக்கது- மாவட்டத்தில் ஏனை யோர் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி யிருந்தனர். சம்பந்தப்பட்ட நபர் இவ் விடயத்தை வடமாகாண பிரதி அஞ் சல் மா அதிபருக்கு சுட்டிக் காட்டியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (த-122)

## அதி விசேட தர நிர்வாகியாக யாழ்.அரச அதிபர் இமெல்டா

யாழ்ப்பாணம், ஒக்.1

பொதுநிர்வாக உள்நாட்டு அலு வல்கள் அமைச்சு, இலங்கையின் அதிவிசேட தர நிர்வாகசேவையாளர் களாகச் சிபார்சு செய்துள்ள 57 பேரின் பெயர் விவரங்களை வெளி யிட்டுள்ளது.

தமிழர்களின் இருவரின் பெயர் களும் இடம்பெற்றுள்ளன. யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், எம்.ஐ.எம்.ராவீக் ஆகிய இரு தமிழர்களின் பெயர்கள் மட்டுமே இந்தப் பட்டியலில் உள் ளன.

பொது நிர்வாக உள்நாட்டு அலு வல்கள் அமைச்சினால் இந்த மாதம் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை யில், 2005 ஆம் ஆண்டு இலங்கை யின் அதி விசேட தர நிர்வாக சேவை யின் தர வரிசைப் பட்டியலில் இருந் தவர்கள் இப்போது எந்தத் தரத்தில் உள்ளனர் என்பது குறித்துக் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டு 375ஆவது இடத்தில் இருந்த எம்.ஐ. எம்.ராவீக், இந்த வருடம் 30 ஆவது இடத்துக்கு அதி நிர்வாக தர சேவை யாளராகத் தரம் உயர்ந்துள்ளதாகவும் முன்னர் 490ஆவது



இடத்தில் இருந்த யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இந்த வருடம் 44 ஆவது இடத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

## இலவசக் கல்வியின் தந்தை கன்னங்கராவுக்கு ஜனாதிபதி செயலகத்தில் உருவச்சிலை

நாவற்குழி, ஒக்.1

இலவசக் கல்வியின் தந்தை யான அமரர் சி.டபிள்யு.டபிள்யூ. கன்னங் கராவுக்கு நன்றி செலுத்தும் வகையில் ஜனாதிபதியின் செயலக வளாகத்தில் அப்பெரியாரின் உரு வச்சிலை யொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

1944 ஆம் ஆண்டு சட்டசபை யில் இலவசக் கல்வித் திட்டத்தை அமரர் கன்னங்கரா சமர்ப்பித்து நிறைவேறச் செய்தார். அதன்மூலம் நாட்டிலுள்ள மக்கள் அனைவருமே பேதமின்றிப் பயனடைந்தார்கள்.

இலவசக் கல்வியால் பயன்பெற்ற இலங்கையர்கள் இச்சிலை நிறுவப் படுவதற்கு தம்மாலான நிதி உதவி களை வழங்கவேண்டுமென ஜனாதி பதியின் செயலாளர் லலித் வீரதுங்க விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித் துள்ளார். (ப)

## நாளை

| | | |
|---|---|---|
| புரட்டாதி 16 | | 02.10.2010 சனிக்கிழமை |
| திதி: | : | நவமி பி.ப 02.38 வரை |
| நட்சத்திரம் | : | புனர்பூசம் பி.ப. 03.51 வரை |
| சுபநேரம் | : | 03.02-04.32 வரை |
| ராகுகாலம் | | 09.02-10.32 வரை |

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபராகக் கணபதிப்பிள்ளை



யாழ்ப்பாணம்,ஒக்.1

கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் செயற்பாடுகளின் இயல்பு நிலையை மேம்படுத்தும் நோக்குடன் கலா சாலையின் அதிபராக வே.கா.கண பதிப்பிள்ளை கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாகக் கலாசாலை அதிபர் அலு வலகம் பூட்டப்பட்ட நிலை தொடர் வதையும் கலாசாலைப் பொறுப்புக் கள் முறைப்படி முன்னாள் அதிபரால் ஒப்படைக்கப்படாதிருப்பதையும் தொடர்ந்து கலாசாலைச் செயற்பாடு களைச் சீர்ப்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக இந்த அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளது.

முன்னதாக கடந்த மே மாதம் தொடக்கம் கலாசாலைச் செயற்பாடு களை மேற்பார்வை செய்யும் வகை யில் பதில் அதிபர் என்ற பதவி நிலை யில் வாரத்துக்கு மூன்று நாள்கள் கடமையாற்றி வந்த வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி க.பேர்னாட்டின் பணிகளும் தற்போது மீளப் பெறப்பட்டுள்ளன.

இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச் சில் கடந்த 29 ஆம் திகதி தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட வே.கா.கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் கலாசாலையில் பணியேற்பதற்காக வருகை தந்த போது விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வரவேற்பளித்தனர்.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சேவையாற்றும் வே.கா.கணபதிப் பிள்ளை நீர்வேலியைச் சொந்த இடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## யுத்தத்தால் வடக்கு, கிழக்கில் 89 ஆயிரம் விதவைப் பெண்கள்

### பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தகவல்

கொழும்பு, ஒக். 1

வடக்குக் கிழக்கில் யுத்தம் காரண மாக 89 ஆயிரம் பெண்கள் கணவனை இழந்துள்ளனர் - என்று சிறுவர் அபிவி ருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல் லாஹ் தெரிவித்துள்ளார்.

சுயதொழில் வாய்ப்புகளை வழங்கு தல் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிழக்கில் 49 ஆயிரம் பெண்களும், வடக்கில் 40 ஆயிரம் பெண்களும் கண வனை இழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதில் 25 ஆயிரம் பெண்கள் மட்டக் களப்பு மாவட்டத்தில் இருக்கின்றனர் என்றும், 12000 பெண்கள் நாற்பது வயதுக்கும் குறைந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

8000 கணவனை இழந்த பெண்கள் குறைந்தபட்சம் மூன்று குழந்தை களுடன் காணப்படுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரத் பொன்சேகாவுக்கு
## தண்டனை வேண்டுமா? இல்லையா? 'ஏசியன் ட்ரிபியூன்' கருத்துக் கணிப்பு

கொழும்பு,ஒக்.1

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படவேண்டுமா, இல்லையா என்று பிரபல் இணையதளமான 'ஏசியன் ட்ரிபியூன்' நாட்டு மக்களிடம் கருத்துக் கணிப்பொன்றை ஆரம்பித்துள்ளது.

சரத் பொன்சேகா தொடர்பில் நாட்டு மக்களின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்று அறிவதற்காகவே இந்தக் கருத்துக் கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அந்த இணையதளம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத்துக்கணிப்புக்கு 'சரத் பொன்சேகா சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டியவரா' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.


ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 60
திகதி - 29.09.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: G   அதிர்ஷ்ட இலக்கம்: 03   வெற்றி இலக்கம்: 2 7 5 3 6

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | G | 03 | 2 | 7 | 5 | 3 | 6 | ரூ. 18,508,345.00 | பரிசு - |
| 1 பரிசு | | 03 | 2 | 7 | 5 | 3 | 6 | ரூ. 2,000,000.00 | பரிசு 01 |
| 2 பரிசு | | | 2 | 7 | 5 | 3 | 6 | ரூ. 100,000.00 | பரிசு 02 |
| 3 பரிசு | | | | 7 | 5 | 3 | 6 | ரூ. 10,000.00 | பரிசு 28 |
| 4 பரிசு | | | | | 5 | 3 | 6 | ரூ. 1,000.00 | பரிசு 258 |
| 5 பரிசு | | | | | | 3 | 6 | ரூ. 50.00 | பரிசு 2505 |
| 6 பரிசு | | | | | | | 6 | ரூ. 20.00 | பரிசு 24328 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | வெற்றியாளர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 | 7 | 5 | 3 | | ரூ. 1,000.00 | பரிசு 24 |
| 8 பரிசு | | | 2 | 7 | 5 | | | ரூ. 100.00 | பரிசு 257 |
| 9 பரிசு | | | 2 | 7 | | | | ரூ. 50.00 | பரிசு 2546 |
| 10 பரிசு | G | | | | | | | ரூ. 20.00 | பரிசு 10057 |
| 11 பரிசு | G | 03 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1115 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,839,450.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2475360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.18,508,345.00


## சட்டவிரோதமாக வரும் இலங்கையர்களை திருப்பியனுப்பக் கோருகிறது கனேடியக் குழு

கொழும்பு, ஒக்.1

சட்டவிரோதமாக - கடத்தல்காரர்களுக்குப் பணம் கொடுத்து - கனடாவுக்கு வரும் இலங்கையர்களை அப்பாவிகளாக கருத முடியாது. எனவே அவர்களைச் சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்ப வேண்டும் என கனேடியக் குழு ஒன்று கோரியுள்ளது.

இதன் மூலமே கடத்தல்காரர்களுக்கு முக்கிய செய்தியைத் தெரிவிக்கமுடியும் என அந்தக்குழு தெரிவித்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள குடிவரவு தொடர்பான குழு, இந்தக் கோரிக்கையை கனேடிய அரசிடம் முன்வைத்துள்ளது .

முன்னாள் ராஜதந்திரி, ஜேமஸ் பிஸாட், இந்தப் புதிய குழுவின் தலைவராகச் செயற்படுகிறார்.

கடத்தல்காரர்கள் மூலம் கனடாவுக்கு வரும் ஒருவரையாவது மீண்டும் அவரின் சொந்த நாட்டுக்கு திருப்பிய அனுப்பினால் மாத்திரமே சட்டவிரோதமாக எவரும் கனடாவுக்கு வரமாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கைக்கான முன்னாள் தூதர் மார்டின் கொலாகொட்டும் கனேடிய அரசிடம் இலங்கை அகதிகளைத் திருப்பியனுப்புமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

## ஐ.தே.க. சமாதானத்தை விரும்பியது புலிகள்தான் அதனை நிராகரித்தனர்
### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.1

ஒஸ்லோ உடன்படிக்கையை முன் நகர்த்திச் செல்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்களிடம் ஆணை கேட்டது. ஆனால், இதைப் புலிகளும் அதன் தலைவர்களும் நிராகரித்தனர் - என்று ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு ஐ.தே.கட்சி விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. வன்னியில் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்தவதற்கே முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். அனைத்துச் சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வை உள்ளடக்கிய அரசியல் தீர்வுக்காக ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


## கட்டடம் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றின் அலுவலகம் அமைப்பதற்கு யாழ்.நகரை அண்மித்த பகுதியில் கட்டடம் வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 0773936768
0773879415


## வடபகுதி ஒப்பந்தக்காரர்களின் பணியை அரசு ஆராயவுள்ளது

கொழும்பு,ஒக்.1

இலங்கையின் வடபகுதி அபி விருத்தி நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தக்காரர்களின் பணி குறித்து ஆராய்வதற்கு வடமாகாண ஆளுநர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காரர்கள் தங்கள் பணிகளைச் சரிவரச் செய்யத் தவறும் பட்சத்தில் அவர்களுடனான ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்படும் எனவும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து ஒப்பந்த காரர்கள் மற்றும் பொறியியலாளர் களுக்கு விளக்கமளிக்கவுள்ளதாகவும் வடமாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்

வடபகுதியின் அபிவிருத்திப் பணிகளில் இணைந்துள்ள 400இற் கும் மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களை ஆளுனர் சந்தித்துக் கலந் துரையாடவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக ஒப்பந்தகாரர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற)


## பெயர் மாற்ற அறிவித்தல்

5ஆம் வாய்க்கால் மதியவர்ணம் கமம், பெரியபரந்தன் கிளிநொச்சியைச் சேர்ந்த பெரியதம்பி கந்தசாமி ஆகிய நான் இன்று (01.10.2010) முதல் எனது பெயரை பெரியசாமி பிரதீபன் என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

*பெரியபரந்தன், கிளிநொச்சி.*   பெரியசாமி பிரதீபன்


## மரண அறிவித்தல்
### *கந்தையா குணலிங்கம்*

(பிரபல லொறிச் சாரதி, யாழ்.-கொழும்பு)



உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணலிங்கம் (லொறிச் சாரதி) 29.09.2010 புதன் கிழமை காலமாவிட்டார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அழகம்மா மற்றும் ம.கமலராணி(சுவிஸ்), ந.செல்வராணி(ஜேர்மனி), காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் க.யோகராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஜிக்குமார்(ரஜீபன் - உரிமையாளர், சாரு போறிங் வேக்ஸ்), வசந்தகுமார், சுபோஜினி(இத்தாலி), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரோசி, கேசலா, ரகுநாதன் (இத்தாலி), ஜெகன்நாதன்(கண்ணன் - உரிமையாளர், சிறி நாகபூசணி அம்பாள் ரயர் வேக்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ரஜீபன்
(சாரு போறிங் வேக்ஸ்)
*உடுவில் தெற்கு, மானிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(103993)


## யாழ். - கொழும்பு சொகுசு பஸ் சேவை

சுன்னாகம்-யாழ்., கொழும்பு, வெள்ளவத்தை,
வெள்ளவத்தை - கொழும்பு - யாழ். - சுன்னாகம்




*பயணிகளின் நன்மைகருதி தற்போது விசேட கட்டண குறைப்பு*

### *அம்பாள் எக்ஸ்பிரஸ்*

*271, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 222 2531, 0777872322*

*248/97, ஆட்டுபட்டித் தெரு, கொழும்பு-13. 0112452468, 0775141146, [illegible]34*

Hot Line: 0777880209


## மரண அறிவித்தல்
### *அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை*



103,(39) இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமா கவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை பொன்னுத்துரை 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), பவளதேவி (யாழ்ப்பாணம்), பத்மநாதன் (பிரான்ஸ்), விஜியகாந்தன் (பிரான்ஸ்), சந்திரகாந்தன் (பிரான்ஸ்), சரோஜினிதேவி (பிரான்ஸ்), சிறீகாந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகுதந்தையும் சுதாநிதி(உப அதிபர் யாழ்.மங்கையர்க்கரசி வித்தியாலயம்), சண்முகநாதன்(யாழ்ப்பாணம்), செல்வலஷ்மி (பிரான்ஸ்), செல்வமலர் (பிரான்ஸ்), பிறேமளாதேவி(பிரான்ஸ்), மிதிலை ஜெயன் (பிரான்ஸ்), அருந்ததி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

103(39), இராசாவின்தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.
பவளதேவி - இலங்கை
தொ.பே. 0212229254

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

| | |
|---|---|
| மிதிலை ஜெயன்(பிரான்ஸ்) | 0033607545929 |
| க.மேனகா(லண்டன்) | 00442088665152 |
| விஜியகாந்தன்(பிரான்ஸ்) | 0033164114615 |
| பத்மநாதன்(பிரான்ஸ்) | 0033160607491 |
| சிறிகாந்தன்(பிரான்ஸ்) | 0033160601680 |
| [illegible]காந்தன்(பிரான்ஸ்) | 0033662068809 |

(103999)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தின் கல்விநிலை பல்வேறு காரணிகளால் பின்தள்ளப்பட்டுள்ளது

## யாழ்.கன்னியர் மடத்தில் வட மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், ஒக்.1

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டம் கல்வித்தரத்தில் முதல் இடத்தில் இருந்தது. இன்று யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை பல்வேறு காரணிகளினால் பின் தள்ளப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டமை தொடர்பான நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:

பல்வேறு துறைகளிலும் யாழ். திருக்குடும்பம் கன்னியர் மடம் முதலிடத்தை வகித்து வந்துள்ளமை கடந்த கால வரலாறுகள் நமக்குத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. 1845 ஆம் ஆண்டில் முற்போக்குவாதிகளாகத் திகழ்ந்த நம் முன்னோரால் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதை நாம் அறிவோம்.

இக் கல்லூரி மூலம் கற்பிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வி, மொத்தத்தில் யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வந்துள்ளது.

அரசின் கொள்கையாக்கத்திற்கமைய 1960 ஆம் ஆண்டிற்கு பின்னர், அரச முகாமையின் கீழ் திருக் குடும்பக் கன்னியர்மடமாகியது.

தற்போது இக் கல்லூரி தேசிய மட்டத்திற்குத் தரமுயர்த்தப்பட்டமை வரப்பிரசாதமாகும்.

சர்வதேச மயமாக்கல் மற்றும் புதிதாக உருவாக்கக்கூடிய மாறுபட்ட சூழ்நிலைகளைச் சமாளிக்க கூடியதாக நாம் ஒரு தடவை கடந்த கால நடைமுறைகளைப் புரட்டிப் பார்க்க வேண்டிய தேவை உண்டு.

யாழ்ப்பாணத்து மக்கள் தற்போது வசந்தக் காற்றைச் சுவாசிக்கின்றனர். இந்த நிலையில் யாழ்ப்பாணத்து மக்கள் முன்பு போல தமது பழைய வாழ்க்கைக்குத் திரும்பி மறுபடியும் புகழ்சேர்க்க இதுவோர் சந்தர்ப்பமாகும்.

பொறுப்புணர்வுள்ள ஆசிரியர் சமூகமொன்றை உருவாக்குவது எமது கடமையாகும். இழந்த வற்றை நாம் திரும்பப் பெறுதல் வேண்டும்.

எனவே புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பித்து அனைத்துப் பாடசாலைகளிலும் உங்கள் பாடசாலையேதான் சிறந்ததெனக் கூறிக்கொள்ளக் கூடிய முன் முயற்சிகளை இன்றே ஆரம்பிப்போம் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவிக்கையில்:

இந்தப் பாடசாலையை தேசியப் பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் 1998 ஆம் ஆண்டிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இருந்த போதும் அப்போதிருந்தவர்களால் இதை நிறைவேற்ற முடியாமல் போனது.

யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி எனது இல்லத்திற்கு வருகை தந்தபோது அவரிடம் இந்தப் பாடசாலையை தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்து மாறும் கோரிக்கை விடுத்தேன். இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். அதன் பின்னர் திருமதி சிராந்தி ராஜபக்ஷ எனது இல்லத்திற்கு வருகை தந்தபோது அவரிடமும் இந்தக் கோரிக்கையை விடுத்தேன்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால், இந்தப் பாடசாலை இன்று தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கின்றேன் - என்றார் அவர். (204-15)




# மணியந்தோட்டத்தில் குடியமர்ந்துள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை

கொழும்புத்துறை, ஒக்.1

மணியந்தோட்டப் பகுதியில் அண்மையில் மீளக்குடியேறிய குடும்பங்கள் தற்போது பெய்து வரும் மழையினால் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள வீடுகள் முற்றாக அழிந்த நிலையில் தற்காலிக கொட்டில் குடியிருப்புகளில் வசித்து வரும் மக்கள் மழைநீர் உட்புகுவதால் உறக்கமின்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அதேவேளை மின்சார, சுகாதார, வீதிக்கட்டமைப்புவசதிகள் எதுவு மற்ற நிர்க்கதியான நிலையில் அவர்கள் வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த இக் கிராமத்தில் 100 இற்குக் குறைவான குடும்பங்களே தற்போது மீளக்குடியேறி உள்ளதாகக் கூறப்படுகிறது. (த-204-135)

# யாழ்.ஆஸ்பத்திரி வளாகத்துக்குள் 'சொப்பிங்பாக்' எடுத்துச்செல்லத்தடை

வண்ணை, ஒக்.1

யாழ்.ஆஸ்பத்திரி வளாகத்தினுள் 'சொப்பிங்பாக்' எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்கள் மற்றும் நோயாளர்களை விடுதிகளில் தங்க வைத்துள்ளவர்கள், பார்வையிடச் செல்பவர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்த நடைமுறையால் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுடன் அங்கு வருவோர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் 'சொப்பிங் பாக்' பாவனையால் கழிவுப் பொருள்கள் நிரம்பியுள்ளன. இதனால் இலையான், நுளம்பு, நோய் பரப்பும் கிருமிகள் உருவாவதால் 'சொப்பிங்பாக்' தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-209-160)

# வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் மக்களின் பயணத்தை இலகுவாக்கவே

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

வீதியில் போக்குவரத்துச் செய்யும் மக்களின் பயணத்தை இலகுவாக்கவே வீதி ஒழுங்குச் சட்டங்கள் பொலிஸாரால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா.

வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாக யாழ்.மாவட்ட மக்களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-



வீதிவிபத்துக்களால் ஏற்படும்தேவையற்ற மரணங்கள் மற்றும் அவய இழப்புக்களைத் தடுப்பதற்கு அனைத்து மக்களும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

கடந்த பல மாதங்களாக யாழ்.குடாநாட்டு வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் மக்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டு வந்தது. எனினும் இவர்கள் வீதி ஒழுங்குகளை உரியமுறையில் கடைப்பிடிக்கத் தவறிவருகின்றனர்.

எனவே இவர்களுக்கு வீதி ஒழுங்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இன்று இக்கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இவற்றை உரிய முறையில் பாதசாரிகள் மற்றும் சாரதிகள் பின்பற்றுவார்களாயின் வீதி விபத்துக்களைத் தடுக்கமுடியும் - என்றார்.

இக்காண்காட்சி நிகழ்வில் பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகள் வீதியில் எவ்வாறு பயணிக்க வேண்டும் என்பது போன்ற விளக்கங்கள் பொலிஸாரால் செய்முறையாக நிகழ்த்திக்காட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவும் மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர். (204-16)

# மழைநீரால் நனையும் ஆஸ்பத்திரி உள்ளக நடைபாதைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள நடைபாதைக் கூரைகள் பழுதடைந்து மழைநேரத்தில் ஒழுக்கு ஏற்படுவதால் பணியாளர்களும் நோயாளர்களும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலை விடுதியிலும் வெளிநோயாளர் பிரிவிலும் இருந்து சக்கரநாற்காலியில் நோயாளர்களைக் கொண்டு செல்லும் வேளையில் நடைபாதைக் கூரை வழியாக மழைநீர் ஒழுகுவதால் சிரமங்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-204-26)

# பொலித்தீன் பாவனை தடை




யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.மாநகரப் பகுதியில் பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது என முற்றவெளியில் மாநகராட்சி மன்றத்தினால் பெயர்ப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பொழுது போக்கு சுற்றுலாப் பயணிகள் தாம் கொண்டுவரும் பொலித்தீன் பைகளை வீசிவிட்டுச் செல்கின்றனர்.

இதனால் இப்பிரதேசம் பொலித்தீன்களால் நிரம்பிக் காணப்படுகின்றது.

மாநகர தொழிலாளர்கள் பொலித்தீன்களை ஒன்று சேர்த்து தீயிட்டுக் கொழுத்தி வருகின்றனர்.

இப்பகுதியில் பொலித்தீன் பாவனையைத் தடை செய்வதற்காக யாழ்.மாநகரசபை அறிவுறுத்தல் பலகைகளை காட்சிப்படுத்தியுள்ளனர். (204-26)

# பற்றை மூடியுள்ள நினைவுத் தூபி

கொழும்புத்துறை,ஒக்.1

யாழ்.முற்றவெளிப் பகுதியில் அமைந்துள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் பலியானோரின் நினைவுத் தூபிப் பகுதி பற்றைகள் வளர்ந்து மூடிக்காணப்படுகின்றது.

இதனைச் சூழவுள்ள பிரதேசம் சுத்தமாகக் காணப்படும்போது இந்த நினைவிடம் மட்டும் கவனிப்பாரின்றி விடப்பட்டுள்ளது கவலை அளிப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

இவ்விடயத்தில் உரியவர்கள் கவனமெடுத்து சுத்தமாகவைத்திருக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-135)

# கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வுகள்

கொழும்புத்துறை, ஒக்.1

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வே. ஞானகாந்தன், பாரியார் திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினராக ஜே/94 கிராம உத்தியோகத்தர் இ.தங்கத்துரை கலந்துகொள்வார்.

அரியாலைப் பிரதேசத்தில் வசித்து வரும் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவர்களின் வரவேற்புப் பா, பொம்மலாட்டம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (204-135)

# 'எக்ஸ்றே' இயந்திரம் மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதடைந்த 'எக்ஸ்றே' படப்பிடிப்பு இயந்திரம் திருத்தம் செய்யப்பட்டு சேவைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே பழுதடைந்த இரண்டு 'எக்ஸ்றே' படப்பிடிப்பு இயந்திரங்களில் ஒரு இயந்திரம் மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மற்றைய இயந்திரம் திருத்தமுடியாது உள்ளதனால் கைவிடப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இரண்டு 'எக்ஸ்றே' படப்பிடிப்பு இயந்திரங்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன என கூறப்படுகின்றது. (204-26)

# மதுப்பிரியர் அட்டகாசம் நகரில் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.நகரில் இரவு வேளைகளில் மதுப்பிரியர்களின அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

நகரில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களில் மதுவை அதிகமாக அருந்திவிட்டு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் செயலால் வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

மதுவை அருந்திவிட்டு தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பாவிக்கும் இவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (204-26)

# சொமாலை அன்னை ஆலய வளாகம் துப்புரவு

கொழும்புத்துறை,ஒக்.1

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வளாகப்பகுதி மற்றும் சுற்றாடல் வீதிகள் இலகு வேலைத்திட்ட பயனாளிகளால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

மேற்படி ஆலய குருவிழாவை யொட்டி ஜே/62 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இலகு வேலைத் திட்ட பயனாளிகள் அப்பகுதிகளில் உள்ள பற்றைகள், புற்கள், குப்பைகளை வெட்டி அகற்றுவதில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத்திருப்பலியும் தொடர்ந்து தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளது. (த-204-135)



இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத்திட்ட பயனாளர்களுக்கு இறப்புப் பணிக்கொடை நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

இதில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நெடுந்தீவைச் சேர்ந்த ரி.வரதலட்சுமியின் தந்தையாரிடம் இறப்புப் பணிக்கொடையை வழங்குவதைப் படத்தில் காணலாம். (த-16)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ENGLISH

Special classes By **Anton Anandan**

Win English Language Academy — Anton Anandan

கொழும்பு, நீர்கொழும்பு, குருநாகல், வவுனியா பிரபல விரிவுரையாளரும் முற்றும் புதுமையான தன்போதனா சுலையால் கல்வித்துறையினர் மற்றும் புத்திஜீவிகள் யாவரதும் உன்னத பாராட்டைப் பெற்றவரும் 39வருட துறைசார் அனுபவம் பெற்றவரும்.

Speech Practice, Grammar, Vocabulary, Text Creation, Writing

யாவும் அடங்கிய மூன்று அற்புதமான **தமிழ்மொழிமூல ஆங்கில** பாடநெறிகள்.

| JELA | SPOKEN ENGLISH | PEARL- 40 |
|---|---|---|
| 100 Hours | 40 Hours | 40 Hours |

- பாடசாலை விலகியோர் ( GCE A/L அல்லது O/L இன் பின்)
- IELTS பரீட்சைக்கு அடிப்படை அறிவு தேடுவோர்
- உயர்கல்வியை மேற்கொள்ளுவோர்
- உத்தியோகஸ்தர்கள்

**இலவசம்:** மேற்படிகற்கைநெறிகளின் நோக்கம் உள்ளடக்கம் போன்ற சகல விவரங்களை அறியவும் பாடவிதான கட்டமைப்புக்களைப் பார்வையிடவும்- பயிற்றுனருடன் நேரில் உரையாடவும்-- மூன்று மணிநேர இலவச கருத்தரங்கம் 04.10.2010 அன்று காலை 9மணி- 12மணிவரை.

**இடம்:** Thames International Educational Consultancy (Pvt) Ltd.
644, Hospital Road (Near- Hospital Junction) Jaffna.

கருத்தரங்கிற்கு தொலைபேசி மூலம் முன்பதிவு: 077 4393043, 071 6109729

4.10.2010க்கு முந்திய அனுமதிகட்கு 25% கட்டணக்கழிவு.



# Happy Children Day



சிறுவர் தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் சிறுவர்களைக் கௌரவித்து மகிழ்ச்சிக்குள்ளாக்க பரிசில்களை வழங்குகின்றது

**அன்னை நாகா பூட்சிற்றி**

ஒரே கூரையின் கீழ்

- Party Center & Fancy Center
- Food City
- House holding items
- Baby Center
- Diabetic Center

இன்றே விரையுங்கள்...!
சிறுவர் தினத்தைக் கொண்டாட

**அன்னை நாகா பூட்சிற்றி**

175, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2160 திகதி 29-09-2010

ஆங்கில எழுத்திற்கும் Z

வெற்றி எண்கள் **11 33 66 68**    போனஸ் இல: **43**

ஜக்பொட் பரிசு ரூ. **15,380,500/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 181309 | 20/- | 3,626,180/- |
| 2 இல | 12891 | 100/- | 1,289,100/- |
| 3 இல | 265 | 1,000/- | 265,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7137 | 40/- | 285,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 509 | 1,000/- | 509,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 80,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,380,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 8700 | 100/- | 870,000/- |
| 2 இல + போனஸ் இல | 399 | 500/- | 199,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 324 | 200/- | 64,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,716,060/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 211576 | | 9,316,060/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 202341550-9-43 |
| கண்டி | 202339400-2-18 |
| கேகாலை | 202341061-4-14 |
| மொணராகலை | 202337825-1-18 |
| குருநாகல் | 202336260-4-19 |
| நுவரேலியா | 202339557-8-20 |
| மாத்தறை | 202338422-9-30 |
| இரத்தினபுரி | 202343207-0-07 |
| பதுளை | 202342185-0-03 |
| கம்பஹா | 202341124-9-37 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 15,875,200/-**

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 02 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.1

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துவிட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு எதிர்கால தொழிலுக்கான வழிகாட்டல் செயலமர்வு யாழ். கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினரால் நடத்தப்படவுள்ளது.

இவ் வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியிலும், 5 ஆம் திகதி யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும், 7 ஆம் திகதி புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிலும் காலை 8.30 மணி தொடக்கம் தகுதி வாய்ந்த வளவாளர்களினால் நடத்தப்படவுள்ளது.

இதில் பங்கு பற்றி பயன்பெறுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(ஒ-315-317)


Internationally Recognized and Affordable — UK Qualification

# HND in Business Management

அரச,அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க வார இறுதிநாள் பிரிவுகளும் ஆரம்பம்.

முகாமைத்துவத்துறையில் உங்கள் தகுதியையும்,தகைமையையும் உயர்த்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் பிரித்தானிய முன்னணிப் பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவப் பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு 021 4900 900



New Batch Starts on 02.10.2010

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk





மீண்டும் யாழ் நகரில்

இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துணர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியர் **M.R.M. Rizvi** அவர்களின்

# Diploma in Mobile Phone Repairing

**Hardware**

- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கழற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

Free! Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

Rs.8750/=

**Software** Setup Installation, Unlocking, Flashing

Jaf. P-Key. SE tool. NSpro. Infinity. Pin Finder. Spiderman. MX-Key.

வகுப்பு நடைபெறும் இடம்
SDC
No: 102-2/2, Navalar Road, (Luxman Plaza Building) Jaffna.
CALL : 071-4241873

4 DAYS COURSE
MON 4 THU | TUE 5 FRI | WED 6 SAT | THU 7 SUN
10.00 AM- 3.00 PM

SDC No: 1, Perera Lane, Wellawatha Colombo-6. TEL : 011-7539075



# Computer Express

## Institute of Information Technology

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு

**அதிரடிக் கட்டணக் கழிவு**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 1000/= | Diploma in Desktop Publishing 4 Months 1000/= | Diploma in Web Page Designing 3 Months 1000/= |
| Diploma in Graphic Designing 4 Months 1000/= | Diploma in Hardware Engineering 3 Months | Diploma in Auto CAD 3 Months 1000/= |
| Diploma in Accounting Package 3 Months 1000/= | Diploma in Computer Science 4 Months 1000/= | Honors Diploma in Computer Science 3 Months 1000/= |

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i - 01.10.2010 - 10am or 3pm
Batch ii - 02.10.2010 - 11am or 3pm
Batch iii - 03.10.2010 - 11am or 3pm
Batch iv - 05.10.2010 - 10am or 3pm

10.10.2010க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிக்கொட்'டின் சுகாதார, கல்வித் திட்டங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

## கடந்த மாதம் ஒப்பந்தம் கைச்சாத்தானது

கிளிநொச்சி,ஒக்.1

'நிக்கொட்' நிறுவனம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த மாதம் 2 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

விரைவில் அங்கு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று 'நிக்கொட்' நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி எஸ்.எஸ்.நிரஞ்சினி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'நிக்கொட்' நிறுவனத்தின் 2010 ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் இம்முறை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இரண்டு மாவட்டங்களிலும் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றினைக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

யுத்தத்தால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைத்தல், மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தல் உபகரணங்களைக் கையளித்தல் எனப் பல்வேறு வகையில் கல்வித்துறை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அத்துடன் சுகாதாரத்துறை சார்ந்த குறிப்பாக சேதமடைந்த வைத்தியசாலைகளைப் புனரமைத்தல், தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்தல் எனப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார்.

இந்த அபிவிருத்தி தொடர்பான துறைசார் திணைக்களத் திடம் விவரங்கள் திரட்டப்பட்டு அடுத்த மாதமளவில் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

### மகாத்மா காந்திபுலமைப் பரிசில்

கிளிநொச்சி,ஒக்.1

கிளிநொச்சி பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களுக்கான மகாத்மா காந்தி புலமைப் பரிசில் கொடுப்பனவுக் காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளை பின்வரும் மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

ஏ.ரேணுகா - கிளிநொச்சி மத்தியகல்லூரி, பி.ஜோதிகா - வட்டக்கச்சி மகாவித்தியாலயம், பி.துஷாந்தினி - அக்கராயன் அ.த.க.பாடசாலை, ஜெ.செசியா மேபிள் - கிளிநொச்சி மத்திய கல்லூரி,ஆர்.லாவண்யா - கிளிநொச்சி மத்தியகல்லூரி, ஜே.காண்டீபன் - திருவையாறு மகாவித்தியாலயம், யு.அனுரஜ் - கிளிநொச்சி மத்திய கல்லூரி. (க-405)

### தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்டச் செயலகம் திறப்பு

கிளிநொச்சி,ஒக்.1

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை பி.ப 4 மணியளவில் 315, கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கட்டடத்தில் இந்தச் செயலகம் திறந்து வைக்கப்படும்.

இந்த நிகழ்வுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமை தாங்குவார். சந்திரகாசன் செல்வநாயகம் செயலகத்தைத் திறந்து வைப்பார். (த)

### மலேரியா நோயாளர்கள் இனம் காணப்பட்டனர்

கிளிநொச்சி,ஒக்.1

கண்டாவளைப் பிரதேச கரவெட்டித்திடல் பகுதியில் மலேரியா நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இனம் காணப் பட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து அந்தப் பிரதேசம் முழுவதும் பூச்சியியல் பகுதியினரால் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. டெங்கு ஒழிப்புத் திட்டச் செயற்பாட்டுக் குழுக் களினூடாக குறித்த பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-440)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் இரத்த வகைகளுக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி,ஒக்.1

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனைத்து வகையான இரத்தங்களுக்கும் முழுமையான தட்டுப்பாடு நிலவுவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே இரத்ததானம் வழங்குவதற்கு முன்வருமாறு அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலை




யில் வெளிநோயாளர் பிரிவில் தினமும் 700ற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

அத்துடன் விடுதியில் தினமும் 100ற்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

இதில் அவசர சிகிச்சைக்குரிய நோயாளர்களுக்கு ஏற்றுவதற்கு போதியளவு இரத்தமின்மையால் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.(த-9)

### விதை விநியோகம்

கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்கல் திணைக்களம் காலபோக பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு விதைநெல், உப-உணவு பயிர் விதைகள், அடி உரம் என்பவற்றை வழங்கி வருகின்றது.

ஒவ்வொரு பகுதிக்குமான திட்டக் குழுக்களினால் விவரங்கள் திரட்டப்பட்டு அந்தப் பகுதி கமநல சேவை நிலையங்களினூடாக மானிய முறையில் நேரடியாக இவை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. (க-440)

## கிளிநொச்சி வைத்திய அதிகாரி பணிமனைகளில் கர்ப்பிணிகளுக்கான சிகிச்சை வசதிகள் இல்லை

### சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் விசனம்

கிளிநொச்சி,ஒக்.1

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வைத்திய அதிகாரி பணிமனைகளில் கர்ப்பிணித் தாய்மாருக்கான சிகிச்சை வசதிகள் இல்லை. அத்துடன் அங்கு வைத்தியர் பற்றாக்குறையும் உள்ளது. இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் கிளிநொச்சியில் உள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கான கருத்தரங்கினை நடத்துவதற்கு தாய், சேய் நல வைத்திய அதிகாரி திருமதி சிவசங்கர் திருமகள் அங்கு சென்றிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வைத்திய அதிகாரி பணிமனைகளில் தற்போதைய நிலைமை குறித்து அவரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குள்ள நிலைமைகள் குறித்து அவர் மேலும் விவரிக்கையில் தெரிவித்தமை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளை, கிளி நொச்சி, பளை, பூநகரி ஆகிய இடங்களில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் கர்ப்பிணித் தாய்மாருக்கான அடிப்படை வசதிகள் இல்லை. அத்துடன் அதற்குரிய அத்தியாவசியப் பொருள்கள் எதுவுமே இல்லாத இக்கட்டான நிலையில் இயங்கி வருகிறது. அத்துடன் அங்கு வைத்தியர்கள் எவருமே நியமிக்கப்படவில்லை. குடும்பநல உத்தியோகத்தர்கள் மட்டுமே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கென தாய், சேய் வைத்திய அதிகாரி தொற்று நோயியலாளர் ஆகியோர் இதுவரை நியமிக்கப்படவில்லை. இதனால் அப்பகுதியில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்- என்றார். (த-9)

## ஆற்றுப் பெருமணலுக்குத் தட்டுப்பாடு கட்டடங்கள் அரைகுறை நிலையில்

கிளிநொச்சி,ஒக்.1

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆற்றுப் பெருமணலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் கட்டட வேலைகள் இடைநடுவில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் கிராமப் புறங்களில் பெரும்பாலான வீடுகள் உடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. பருவமழை ஆரம்பமாவதற்கு முன்பதாக தமது வீடுகளைத் திருத்தியமைக்க வேண்டிய கட்டாய நிலையில் இங்குள்ள மக்கள் உள்ளனர். இல்லையென்றால் மிகப்பெரிய அவலத்தை இவர்கள் சந்திக்க நேரிடும். முக்கியமாக உடைந்த கிணறுகள், மலசல கூடங்கள் என்பன திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. நகரப்பகுதிகளைப் பொறுத்த வரையில் வீடுகள் மட்டுமல்ல வியாபார நிலையங்களும் துரித கதியில் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இந்த வேலைகளுக்கு கிளிநொச்சியில் இருந்தே ஆற்றுப் பெருமணல் பெறப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இதற்குத் தட்டுப்பாடு நிலவுவதால் கட்டட வேலைகள் பாதியிலேயே நிற்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. மீள்குடியேறிய அனேக குடும்பங்கள் தமது வீட்டுத் திட்டங் களுக்கு வழங்கப்பட்ட வீடுகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அவல நிலையில் உள்ளனர்.

ஒவ்வொரு கிராம அபிவிருத்திச் சங்கங்களும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இயங்கி வரும் புவிச்சரிதவியல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மணல் அகழ்வுக்குரிய அனுமதியினை உரிய முறையில் பெற்றுக் கொள்வதன் மூலம் இதற் கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியு மென்பதுடன் இலகுவான முறையில் மணல் தேவையுடையோருக்கு வழங்க முடியு மென்றும் தெரிவிக்கப்பட்டது. (க-440)

## வன்னியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை உளநலக் கவனிப்புக்கு உட்படுத்தல் அவசியம்

வன்னியில் நிகழ்ந்த மனிதப் பேரவலத்தால் சிதறுண்ட உறவுகள் தமது இல்லிடங் களுக்கு மீளத் திரும்பும் சம்பவங்கள் தற்போது நடைபெற்றுவரும் நிலையில் இவர்கள் தமது உறவுகளை இழந்து பரிதவிக்கும் அவலம் மனிதநேயம் உள்ளவர்களை துயரத்தில் ஆழ்த்தி வருகிறது. தற்போது மீளக்குடியேறி வரும் மக்களின் அநியாயமாகப் பாதிக்கப்பட்ட உறவுகளின் உயிர்களோ அல்லது இழந்த சொத்துக்களோ திரும்பி வரப்போவதில்லை. எனினும் உறவுகளை, சொத்துக்களை இழந்த மக்களின் ஆற்றொணாத் துயரைத் துடைப்பதற்கு முன்வர வேண்டியது நமது கட்டாய கடமையாக உள்ளது.

உறவுகளின் பிரிவை ஆற்ற முடியாது அல்லற்படும் மக்களை அணுகி அவர்கள் மனதில் ஆழ வேரூன்றிவிட்ட மன வடுக்களை நீக்குவதற்கு உளவியல் ரீதியான ஆதரவை சம்பந்தப்பட்டவர்கள் வழங்க முற்பட வேண்டும். இல்லையேல் மன நிலை நிரந்தரமாகவே பாதிப்படைந்து அவர்களின் எதிர் கால வாழ்க்கையே ஊனமாகிப் போய் விடக் கூடிய அபாயமும் உண்டு.

போர் ஓய்ந்து அசாதாரண அமைதி நிலவிவரும் இவ்வேளையில் அவர்கள் மனதில் பதிந்துள்ள வடுக்கள், மனத்துயர்கள் ஓய்ந்து ஒழிந்து போய்விடப் போவதில்லை என்பது யதார்த்தம். காலாகாலமாக அந்த உளப்பேரதிர்வின் தாக்கம் உணரப்பட்டுக் கொண்டே இருக்கும். இந்த உளப் பேரதிர்வு நீண்ட காலத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நிலை தொடர விடாமல் தடுப்பதற்கு பல இடையறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் முன்வர வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் மக்களிடத்தே பல்வேறு உளப் பாதிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக இளையோர்கள், மாணவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் ஏனையோரை விடவும் உளரீதியாகப் பாதிப்படையும் வீதம் அதிகம் என்பதால் அவர்களை நேரிய சீரிய வழிகளில் ஆற்றுப்படுத்தல் வேண்டும். பொதுவாக நோக்குமிடத்து இவர்கள் மனதில் பல்வேறு உளசமூக பிரச்சினைகள் காணப்படுவதை அவதானிக்கலாம்.

* ஒரே சோகமயமாக தொடர்ச்சியாக கவலைப்பட்டவாறு மூழ்கியிருத்தல்.
* எதிர்காலத்தில் நம்பிக்கையின்றி ஒருவித தாழ்வு மனப்பான்மையில் மூழ்கியிருத்தல்.
* நான் கையாலாகதவன், என்னுடைய வாழ்க்கையில் இனி சந்தோசமோ இல்லை என்ற எண்ணம்.
* சந்தோசங்களை உணர முடியாமல் தவித்தல் அதாவது சந்தோசமான சடங்குகளை, நிகழ்வுகளைத் தவிர்த்தல்.
* எந்த விடயத்திலும் மனதை ஒருமுகப்படுத்த முடியாமல் இருத்தல்.
* எந்த விடயத்திலும் முடிவெடுக்க முடியாமல் தவித்தல்.
* அடிக்கடி நித்திரைக் குழப்பம் அல்லது ஆழ்ந்த நித்திரையின்றி தவித்தல்.

[illegible], போரில் நேரில் கண்ட காட்சிகள், சம்பவங் கள் மீளோட்டமாக அடிக்கடி நினை வில் வரல்.

* நாளாந்த வேலைகளை, கடமைகளை சரிவரச் செய்ய முடியாதிருத்தல்.
* மற்றைய பலருடன் உரையாடுவதைத் தவிர்த்தல். சமூகத்துடன் ஒன்றி வாழ்தலை தவிர்த்தல்.
* பசியின்மை, உணவில் நாட்ட மின்றியிருத்தல் இதன் விளைவாக உடல் மெலிந்து, களைப்பு, பலவீனம், இலகுவில் நோய் வாய்ப்படும் தாக்கம் அதிகரிப்பு போன்றவை ஏற்படும்.
* தலையிடி, நெஞ்சுநோவு, பயம், பதட்டம், கைகால் வலி, உடல் முழுவதும் ஒருவித சோர்வு, வலிகள் போன்ற பலவித உடலியல் முறைப்பாடுகள் காணப்படும்.
* ஆண்களாயின் மது, புகைத்தல், போதைப் பாவனைகளுக்கு அடிமையாகும் வாய்ப்பு.
* பாலியல் ரீதியான பிரச்சினைகள், குறைபாடுகள் காணப்படும்.
* தற்கொலை எண்ணம் அல்லது தற்கொலை முயற்சி தனக்குத் தானே தீங்கு செய்யும் அல்லது பிறருக்கு தீங்கு செய்யும் பழிவாங்கும் எண்ணங்கள் மேலோங்கியிருத்தல்.

போன்ற பலவித உள சமூக பிரச்சினைகள் காணப்படும்.

தமிழர் பிரதேசங்களில் ஏற்பட்ட பேரழிவுகள் எண்ணிலடவிட முடியாதவை. தமிழ் மக்களைப் பொறுத்தவரை போர்ச் சூழலுக்குள் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். இன்னொரு வகையில் கூறின் போரியல் வாழ்க்கை முறையில் நன்குபுடம் போடப்பட்டவர்கள். இருந்தும் அண்மையில் வன்னியில் நிகழ்ந்த மனிதப் பேரவலம் இதுவரை யில் நிகழ்ந்திராத கொடூரமான நிகழ்வாகும். அத்தகைய போரின் வடுக்கள் எஞ்சிய மக்களின் மனதில் ஆழ வேரூன்றிவிட்ட உளப் பாதிப்புக்களை களைவதற்கு நடைமுறைச் சாத்தியமான முயற்சிகளை மேற்கொண்டு அவர்களின் இழந்த வாழ்வை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா, பிள்ளையான், கே.பிக்கு அரசு சலுகை வழங்குவதை ஏற்க முடியாது

## ஐக்கிய தேசியக் கட்சி காட்டம்

கொழும்பு, ஒக். 1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களாக இருந்த கருணா, பிள்ளையான், கே.பி. போன்றவர்களை அரசு வித்தியாசமான முறையில் நடத்துவதை ஏற்றுக்கொள்ளவே முடியாது; எல்லோருக்கும் சட்டம் பொதுவானது - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேகநபர்கள் என்கின்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் ஏராளமானோர் தொடர்ச்சியாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை குறித்துக் கருத்துக் கூறியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் இது குறித்து தெரிவித்தவை வருமாறு -

எல்லோருக்கும் சட்டம் பொதுவானது. எல்லோரும் சமமானவர்களாகவே நடத்தப்பட வேண்டும். கருணா, பிள்ளையான், கே.பி. போன்றவர்கள் வேறு விதமாக நடத்தப்படுகின்றமையை ஏற்கவே முடியாது.

ஆனால் சர்வதேச சமூகம் இறைமையுடைய நாடு ஒன்றின் மீது நிபந்தனைகளைப் போடக்கூடாது. இலங்கை மீது நிபந்தனைகளைப் போட இது ஏற்புடைய தருணமும் அல்ல.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

### அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான போட்டிக்கு

# அழைப்புக் கடிதம் பிந்தியதால் வாய்ப்பை இழந்த மாணவிகள்

கொழும்பு, ஒக்.1

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு சம்மாந்துறை வலய மாணவ மாணவிகளுக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து நாவிதன்வெளி, அன்னமலை வித்தியாலயத்தின் அதிபர் இலட்சுமணன் தெரிவிக்கையில், ''எமது பாடசாலை சார்பாக நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற தேசிய விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இருந்த இரண்டு மாணவிகளுக்கான அழைப்புக் கடிதங்களும் அவை தொடர்பான பிரசுரங்களும் வலயக்கல்வி அலுவலகத்தினால் நேற்று காலை 8.30 மணியளவிலேயே அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சம்மாந்துறை வலயத்திலிருந்து உடனே சென்று கலந்துகொள்வதென்பது முடியாத காரியமாகும். பல எதிர்பார்ப்புகளுடன் இருந்த எமது மாணவர்களுக்கு இது பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது'' - என்றார்.

இப்பாடசாலையைச் சார்ந்த எஸ்.லோகேஸ்வரி 100மீற்றர், 400மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டிகளிலும் கே.சாந்தினி 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்திலும் பங்குபற்றவிருந்தனர். (சி)

# பொன்சேகாவை விடுவிக்கக்கோரி டோக்கியோவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.1

கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் பேரணியொன்று கடந்த செவ்வாயன்று ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இடம்பெற்றது.

இலங்கையின் ஜனநாயகத்திற்கான அமைப்பின் ஜப்பான் கிளை இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சரத் பொன்சேகாவை சிறையில் அடைக்கும் முயற்சிகளை இலங்கை அரசு கைவிட வேண்டும் எனவும் நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை ஸ்தாபிக்க வேண்டும் எனவும் கோரி இந்த பேரணி நடத்தப்பட்டுள்ளது. (ஏ-சி)

# சொத்து இழந்தோருக்கு ரூ.2 லட்சம் கடன் உதவி

தென்மராட்சி, ஒக்.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்தவர்களின் சொத்துக்களை இழந்தவர்களில் 20 பேருக்கு இரண்டு லட்சம் ரூபாவரை கடன் வழங்கப்படவுள்ளது.

ஆள்களையும், ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்வதற்கான அதிகாரசபையின் புனர்வாழ்வுப் பிரிவினர் இந்தக் கடன்களை இலங்கை வங்கி ஊடாக வழங்கவுள்ளனர்.

10 வருட காலத்தில் மீளச் செலுத்தக் கூடியதாகக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கடன் வசதியைப் பெற விரும்புவோர் தென்மராட்சிப் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-207)

## வைகறை வழிபாடு

வடமராட்சி, ஒக்.1

மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியாலை வளாக மெதடிஸ்த திருச்சபை சிற்றாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு வைகறை வழிபாடு இடம்பெறவுள்ளது. இவ்வழிபாட்டினை பருத்தித்துறை- கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு [illegible] நடத்துவார். (201-36)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04.08.1934

உதிர்வு: 11.10.2009

திதி: அட்டமி

அமரர் பழநி
**நவரத்தினம்**
(சோதிடர்)

*எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!*
*அன்பாலே எம்மையெல்லாம் அரவணைத்து*
*பண்பாக வாழ வழிசமைத்தீர்*
*நாள்கோள் பார்த்து நற்காரியங்கள் பல சமூகத்திற்கு*
*செய்த நீங்கள் நிலையான வாழ்வு தேடிச் சென்றீரே*

என்று உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்

கி.கதிர்காமநாதன்,
துவாரகை, அல்வாய். (103778)

---

## நீங்கா நினைவில் ஓராண்டு



கண் மகிழ: 16.10.1942

கண் நெகிழ: 11.10.2009

அமரர் சிவசிதம்பரம்
**சிவானந்தர்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி:அட்டமி (01.10.2010)

*அப்பா என்ற*
*அற்புத ஜீவன் மறைந்து*
*ஆண்டு ஒன்று ஆனதே!*
*இன்று மட்டும் அல்ல*
*இந்த உலகம் முடியும்- வரை*
*உங்கள் நினைவுகளுடன்*

என்றும் உம் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்.

198/10, [20] திருவள்ளுவர்சாலை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (103773)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் செல்லையா
**சிவகுருநாதன்**

*கடந்த 01.09.2010 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட் டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.10.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவி னர், நண்பர் ள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

அன்னை மடியில்: 15.03.1951
ஆண்டவன் திருவடியில்: 01.09.2010

குடும்பத்தினர்
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(103976)

---

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 16 . 12 . 1929



மறைவு 01 . 09 . 2010

### அமரர் கந்தையா சுவாமிநாதன்

*அன்புடன் எமைவளர்த்து ஆளாக்கி அனுதினமும்*
*இன்பக் களிப்பில் இறுதிவரை துயர் போக்கி*
*பண்புற்றமக்களென பக்குவமாய் கரை, சேர்த்து*
*விண்ணுற்ற ஒளிவிளக்கே எமை விட்டு பிரிந்ததேன்?*

கடந்த 01.09.2010 அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (01.10.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம்நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

*உசன்கந்தசாமி கோயிலடி,*
*உசன், மிருசுவில்.* (102778)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் கதிரிப்பிள்ளை
**சின்னத்தம்பி**

தோற்றம்: 09.08.1936
மறைவு: 03.09.2010

*கடந்த 03.09.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (01.10.2010) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் ஊறல் இந்து மயானத்திலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவிலும் கைதடியில் உள்ள மகன் கணேசமூர்த்தியின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கைதடி கிழக்கு,
கைதடி.

(103981)

---

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கிறிஸ்ரியன் ஸ்ரனிஸ் ஜெயகானந்தன் (B.A)**

அன்னை மடியில் 06★09★1974

ஆண்டவன் அடியில் 01★10★2003

ஏழாண்டுகள் விரைந்தோடி மறைந்ததையா
எம் மனம் விட்டகலாது உன் உருவமையா
நிலையில்லா வாழ்விதென மெய்நாடி
நிலையான இடம் தேடிச் சென்றனையோ
ஆறுமோ ஆறாது எம் துயரவெள்ளம்
தேறுமோ தேறாது நெஞ்சம் தேம்பி அழுதாலும்

3,சென்.ஆன்ஸ் 2ஆம் ஒழுங்கை,
பாண்டியன் தாழ்வு. (103955)

*உம் பிரிவால் துயருறும்:*
அம்மா, அப்பா, தங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமான வரி செலுத்துவோர் தொகை குடாநாட்டில் இரு மடங்காக அதிகரிப்பு

## இதுவரை திரண்டது 10 கோடி ரூபா

யாழ்ப்பாணம்,ஒக்.1

உள்நாட்டு இறைவரித்திணைக் களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை இந்த வருடம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகப் பொறுப்பதிகாரி க.இராசையா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தின் யாழ். பிராந் திய அலுவலகத்தால் தற்போது வெளிக் களப் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேவேளை வருமான வரிகள் தொடர்பான விவரங்களையும், விளக்கங்களையும் வர்த்தகர்களுக்கும் நிறுவனங்களுக்கும் தெளிவுபடுத்தி வருகின்றோம். இதன் காரணமாக வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவ்வருடம் ஆரம்பம் முதல் இந்த மாதம் வரையும் வருமான வரியாக செலுத்தப்பட்டுள்ள தொகை நூறு மில்லியனைத் தாண்டியுள்ளது. கடந்த வருடம் இதே காலப் பகுதியில் செலுத்தப்பட்ட வருமான வரியின் முழுத்தொகை சுமார் 48 மில்லியன் ரூபா ஆகும்.

நாட்டின் மட்டக்களப்பு, கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பிராந்திய அலுவலங்களில் செலுத்தப்பட்ட தொகையை விட யாழ். பிராந்தியத்தில் செலுத்தப்பட்டுள்ள வருமான வரித் தொகை அதிகமாகும்.

எமது பிராந்திய அலுவலகத்தின் வெளிக்களப் பணிகள் காரணமாக சுயவிருப்பின் பேரில் வருமான வரி செலுத்துவோர் தொகை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக இந்த வருடம் வருமான வரி செலுத்துபவர்களுக்கான புதிதாக 200 கோவைகளும், மொத்த விற்பனை வரி செலுத்துபவர்களுக்காக 400 கோவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார் அவர்.(த-201-14)

# வீட்டில் முடங்கியிருந்த என்னை 'வாழ்வகம்' சித்தியடைய வைத்தது

## மாணவன் அருண்குமார் பேட்டி

சுன்னாகம்,ஒக்.1



கல்வி கற்காது வீட்டில் முடங்கியிருந்த என்னைத் தேடி வந்து வாழ்வகத்தில் இணைத்துக் கல்வி பயிற்றுவித்ததாலேயே புலமைப்பரிசில் சித்தி பெற முடிந்தது. இவ்வாறு தெரிவித்தார். புல மைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த துரைராசா அருண்குமார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், உடுப்பிட்டி, கம்பர்மலையில் விவசாயக் குடும்பத்தில் 7 பிள்ளைகளில் ஆறாவதாக நான் பிறந்தேன். பிறந்து ஆறு மாதத்தில் காண்பார்வை அற்றுப் போனது. இதனால் என்னால் கற்றலில் ஈடுபட முடியவில்லை. பாடசாலை செல்லாது வீட்டிலேயே முடங்கியிருந்தேன்.

இந்த வேளையில் தமது உறவினர் வீட்டிற்கு வந்த வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரனும் அவரது துணைவியாரும் இப்பகுதியில் விழிப்புல வலுவிழந்தோர் யாராவது உள்ளனரா என வினவியதற்கு அங்குள்ளவர்கள் என்னை அடையாளம் காட்டினர். அவர்கள் என்னைத் தேடிவந்து பெற்றோருடன் கதைத்துக் கட்டாயக் கல்வி ஏற்பாடுகளின் படி 2007 இல் பாடசாலையில் சேர்ப்பித்தனர்.

எனவே சுன்னாகம் வாழ்வக இல்லத்தில் தங்கியிருந்து இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்றேன். நீண்ட காலம் பாடசாலை செல்லாததால் வாழ்வகத் தலைவரும், ஆசிரியர்களும் அதிக அக்கறையெடுத்துக் கற்பித்தனர்.

இதேவேளை பாடசாலையில்- வகுப்பாசிரியை திருமதி குமரவேள், திருமதி தாமரைச் செல்வி கீதா கிருஸ்ணன் ஆகியோர் என்னை மிகவும் ஊக்கப்படுத்தினர். அத்துடன் வாழ்வகத்திலும் விசேட வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இதனால் நல்ல பெறுபேற்றினைப் பெற என்னால் முடிந்தது. பாடசாலை செல்லாமல் ஒதுங்கியிருந்த என்னை தன்னம்பிக்கையுடன் தலை நிமிர வைத்த வாழ்வகத் தலைவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றார் அந்த மாணவன். (201-38)

# 'நெல்சிப்' திட்டத் தகவல்களை வழங்குமாறு பிரதிப் பிரதம செயலாளர் வேண்டுகோள்

## வடக்கு- கிழக்கு உள்ளூராட்சி மேம்பாட்டுத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடக்கு- கிழக்கு உள்ளூராட்சி மேம்பாட்டுத் திட்டத்தின் (நெல்சிப்) கீழ் அபிவிருத்தி தொடர்பான மேலதிக தகவல்களை உடன் வழங்குமாறு வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்கட்ட வேலைகளை யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகள் முழுயாகப் பூர்த்தி செய்துள்ளன.

அடுத்த கட்டமாக மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) தலைமையிலான குழு முன் மொழிவுகளையும் தேவையான ஆவணங்களையும்வழங்குமாறுகேட்டுள்ளது.

மக்கள் பங்கேற்புத் திட்டம், கணக்காய்வு அறிக்கை (2008/2009), முன்மொழிவுப் பத்திரம், சபை தீர்மானம், நிலவுரிமை படம், 2009 கணிப்பீட்டுச் சபை அறிக்கை, நிலையியற்குழு அறிக்கை, நெல்சிப் கடைசி கூட்டத் திகதி, அசையும், அசையா சொத்துக்கள் விவரம், ஐந்தொகை மற்றும் செலவின அறிக்கை என்பனவே கோரப்பட்டுள்ள ஆவணங்களாகும்.

இதேவேளை- நெல்சிப் அபிவிருத்தி முன்மொழிவுகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (201-302)

# பண்ணைப் பகுதியில் விரைவில் விலங்குப் புலனாய்வு நிலையம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடமாகாணத்துக்கான விலங்குப் புலனாய்வு நிலையத்துக்கு தனியான கட்டடம் யாழ். பண்ணைப் பகுதியில் அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட விலங்கு புலனாய்வுத் துறை அதிகாரி திருமதி அமுதா பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

மேற்படி புலனாய்வு நிலையத்துக்காக 12 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் அமைக்கப் பட்டு அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விலங்குகள்- பறவைகள் ஆகியவற்றுக்கு ஏற்படும் நோய்களுக்கு விசேட சிகிச்சைக் களமாக இந்த நிலையம் செயற்படும். இதன் மூலம் விலங்குகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்வதால் அத்துறையில் அபிவிருத்தி ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகும்.

அத்துடன் நீண்ட காலமாக வடமாகாணத்தில் விலங்குப் புலனாய்வு நிலையத்துக்கான தனியான கட்டடமின்றிச் செயற்பட்ட நிலை நீங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (201-302)

# வல்லைப் பாலத்தின் விஸ்தரிப்பால் ஏ.டி.எஸ்.எல் வசதி தாமதமாகும்

வடமராட்சி,ஒக்.1

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பைபர் ஒப்ரிக்கல் கேபிள் மூலமாக ஏ.டி.எஸ்.எல். இணையவசதி வடமராட்சிப் பிரதேச மக்களுக்குக் கிடைப்பதில் சில மாதங்கள் கால தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

ஏ.டி.எஸ்.எல். இணைய வசதிகளை வழங்குவதற்கு அல்வாய், மாலி சந்திக்கு அண்மையில் உள்ள வடமராட்சிக்கான தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் தயாராக இருக்கின்ற போதும் 'பைபர் ஒப்ரிக்கல் கேபிள்' இணைப்பு சேவைகள் பூர்த்தியடையாததால் இணைய வசதிகளை வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சி தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் வரை இணைய வசதிக்கான கேபிள் லைன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் வல்லைப் பகுதியில் பால விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறுவதால் அப்பகுதியூடாக இன்னமும் கேபிள் லைன் பொருத்தப்படாமையினால் வடமராட்சிப் பிரதேசத்திற்கான ஏ.டி.எஸ்.எல்.இணைய வசதிகளை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துரிதமாக நடைபெற்று வரும் வல்லைப் பால வேலைகள் நிறைவடைந்ததும் இது சாத்தியப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. (201-236)




# வீதிக் குறியீடுகளை அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முன்னால் உள்ள வீதிக் குறியீடுகள் தெளிவற்றுக் காணப்படுவதால் மாணவர்கள் போக்குவரத்துச் சிரமங்களுக்குள்ளாகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

மேற்படி பாடசாலைக்கு முன்னால் உள்ள வீதிக் கடவைக் குறியீடான மஞ்சள் குறியீடு தெளிவற்றதாகக் காணப்படுவதால் வாகனச் சாரதிகள் இதனைக் கவனத்தில் எடுப்பதில்லை. இதனால் விபத்துக்களுக்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளதாகப் பெற்றோர் கூறுகின்றனர்

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து வீதிக் குறியீடுகளை மீண்டும் அமைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளார். (த-201-121)

# குழாய் நீர் விநியோகம் நெடுந்தீவில் சீரில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.1

நெடுந்தீவுப் பகுதியில் குழாய் நீர் விநியோகச் சேவை அடிக்கடி ஸ்தம்பிதமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 50 வருடங்களுக்கு முன்னர் சீனச் சட்டியில் அமைக்கப்பட்ட நீர் விநியோகக் குழாய்களே இன்று வரைக்கும் விநியோகத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றதாக மேற்படி பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே இந்நீர் விநியோகக் குழாய்கள் தற்போது சேதமடைந்துள்ளதால் புதிய விநியோகக் குழாய்கள் பொருத்த வேண்டியுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இதேவேளை கடந்த 1954 ஆம் ஆண்டில் பிரதமராக இருந்து சேர் ஜோன் கொத்தலாவை நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் விநியோக சேவைக்கான நிதி ஒதுக்கீடு செய்திருந்ததையடுத்து 1960 ஆம் ஆண்டு குழாய் நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(201-7)




செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவுத் தொண்டர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவுத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தானியா பிறவுண் ஆகியோர் தொண்டர்களுக்கான சான்றிதழ், விருதுகள் வழங்குவதைக் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் சேதமடைந்துள்ள வைத்தியசாலைகள் விரைவில் புனரமைக்கப்படும்

## சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடமராட்சிக் கிழக்கில் சேதமடைந்துள்ள வைத்தியசாலைகள் சர்வதேச மற்றும் உள்ளூர் கொடையாளர்களின் நிதி உதவியுடன் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி எ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடமராட்சி கிழக்கில் உள்ள நான்கு வைத்தியசாலைகளும் சேதமடைந்துள்ளன. அவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கென நிதி நிறுவனங்களிடம் உதவி கோரியுள்ளோம்.

அம்பன் பிரதேச வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு மலேசிய நாட்டு நிறுவனமான 'மேர்சி மலேசியா' பொறுப்பேற்றுள்ளது. ஜனாதிபதியின் விசேட செயலணியின் அனுமதி கிடைத்ததும் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் மருதங்கேணிப் பிரதேச வைத்தியசாலை, முள்ளியான் பிரதேச வைத்தியசாலைகள் கொடையாளர்களின் உதவியுடன் விரைவில் புனரமைக்கப் படவுள்ளன.

மருதங்கேணிப் பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் தற்போது இயங்கி வருகின்றது. மேற்படி வைத்தியசாலையின் கட்டடம் ஒன்று பாதுகாப்புப் படையினரால் புனரமைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேர்சி மலேசியா நிறுவனம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் வாரத்தில் 6 நாள்கள் மாமுனை, மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை ஆகிய இடங்களில் நடமாடும் சேவையை மேற்கொண்டு வருகின்றோம்.

அம்பன், மருதங்கேணி ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வாகனமும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளது.

முள்ளியான் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதும் அங்கும் நடமாடும் மருத்துவ சேவையை நடத்துவதற்கு தயாராக உள்ளோம்- என்றார் அவர். (த-201-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
வெற்றிச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். கடுமையாக இருக்கும் என நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிந்து விடலாம். சிலரிடம் உங்களின் பிரச்சினைகளைச் சொல்லி யோசனை கேட்பீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் விமர்சனங்களைச் சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். நல்லது நடக்கும்.

**இடபம்:**
எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறுவதில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சில வேலைகளை பொறுமையாக இருந்துதான் முடிக்க நேரிடும். குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வழக்கு விவகாரங்களில் மாற்றங்களைச் சந்திக்கலாம். சில பொருள்களை வாங்கி விட்டு கடன் சொல்ல நேரிடலாம்.

**மிதுனம்:**
சரியெனத் தோன்றியதை பிறரிடம் சொல்வீர்கள். எதையும் சாதிக்க முடியும் என்ற வல்லமை அதிகரிக்கும். பழைய கடன் ஒன்றை புதிதாக வரும் வரவுகளால் தீர்ப்பீர்கள். இரண்டு நாள்களாக தடைபட்ட வேலை ஒன்று இன்று வெற்றிகரமாக முடியும். புதிய வேலை முயற் சிகளில் நல்ல தகவல்களைப் பெறலாம். கோபத்தைத் தவிர்க்கவும்.

**கடகம்:**
சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்கலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் இருந்தாலும், பின்னர் சரியான நேரத்திற்கு முடிவுக்கு வரும். உங்களின் அனுபவம் ஒன்றைப் பற்றி நண்பர்களிடம் சொல்வீர்கள். உறவினர்கள் நீங்கள் கேட்காமலேயே உதவிகள் செய்வர். பிள்ளைகள் மீதான பாசம் கூடும்.

**சிங்கம்:**
உங்களின் முயற்சிகளுக்கு நண்பர்கள் ஆதரவு தெரிவிக்கலாம். லாபகரமான பணவரவுகளைப் பெறலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். கொண்டாட்டங்கள் உண்டு.

**கன்னி:**
எதிலும் உள்நோக்கத்துடன் செயற்படும் நாள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள். பெண்கள் கணவனின் பாராட்டைப் பெறலாம். எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சில வேலைகளை அவசரப் பட்டு செய்து விட்டு வருத்தம் அடைவீர்கள். சிவாலய வழிபாட்டின் மூலம் சிறப்பு பெறலாம்.

**துலாம்:**
சிலரின் பாராட்டுகளைப் பெறலாம். பழைய நண்பர்களின் உதவிகள் கிடைக்கலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்தலாம். தாய் வழி உறவுகள் விடயத்தில் பட்டும் படாமல் இருப்பது நல்லது. திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்காமல் போய் விடுமோ என பயம் கொள்ளலாம். பலனை எதிர்பார்த்து ஒரு வேலையைச் செய்வீர்கள்.

**விருச்சிகம்:**
தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். நெருங்கிய நண்பர் ஒருவரே, ஒரு விடயத்தில் உங்களுக்கு எதிர்ப்பாக செயற்படலாம். மற்றவர்களை நம்பி முக்கியமான வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். நீங்கள் செய்த காரியம் ஒன்றை, ஒருவர் தான் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம்.

**தனுசு:**
உறவினர்கள், நண்பர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். பிரியமானவர்கள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பல நாட்களாக நீடித்த மனக்குறை ஒன்று தீரும் சூழ்நிலை உருவாகும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறலாம். சக ஊழியர்கள் சிலர் விமர்சித்தாலும், அதைக் கண்டு கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள்.

**மகரம்:**
தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் மூலம் உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட நண்பர்கள் அன்பாக நடந்து கொள்வர் . நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களை தேடி வரலாம்.

**கும்பம்:**
சில விஷயங்களை வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள் போட்டுக் கொண்டு வெதும்பலாம். பெண்கள், பெற்றோர் வழியில் உதவிகளைப் பெறலாம். கடும் பிரயத்தனம் மேற்கொண்டாவது சில வேலைகளை முடித்து விடுவீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். வயிறு உபாதையைச் சந்திக்கலாம்.

**மீனம்:**
கணவன் அல்லது மனைவி வழி உறவினர்கள் வழியில் சிறு தொல்லைகளுக்கு ஆள்படலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகளை வசூலிப்பர். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு செல்லலாம். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மாற்று மதத்தினர்கள் உதவியாக இருப்பர். சிக்கலில் இருக்கும் ஒருவருக்கு உதவுவீர்கள்.

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிடவுள்ளது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை**

வி.அபிநயன்(183),அ.அபிநந்தன் (179), இ.ஆதிரையன் (178), இ.இளங்கீதன் (176), அ.அபிராம் (176), கி.அபிராமி (175), ஜெ.சரண் (175), ப.நிருத்திகன் (174), அ.ஹரிசாந் (172), அ.ஆதித்தியா (172), உ.கார்த்திகன் (169), பி.நிசங்கன் (169), ஜெ.நிவாசன் (169), இ.பிரியங்கா (169), த.கௌசிகா (168).

இ.சங்கவி (168), த.அபிநாத் (168), நி.ஆதவன் (167), த.ஜன்சிகா (167), சி.சந்துரு (166), கி.கோபிசன் (165), சி.காயத்திரி (165), க.தனுசாந் (164), க.பார்கவசர்மா (164), இ.அரண் (164),இ.தனுசன் (164), ந.சுமூகன் (163), சி.அபிசாந்தன் (163), சி.சஜீவன் (163).

ஜெ.கஜீவன் (163), கே.அபிராமி (162),சு.காருணியன் (161), வ.ஹம்சாநத் (161), ச.மோகனரஞ்சன் (161), வ.வக்சலாயன் (161), தி.ஜீவனா (161), க.சுஜன் (160), அ.அபிராமி (160), சி.மதிவதனன் (160), சி.பவித்திரன் (159), இ.லதாங்கி (159), அ.அனுசிகா (159), க.பானுஜன் (159).

ஜெ.ஜெயப்பிரவீன் (159), கே.தனுஷன் (158), டி.கவிப்பிரியன் (158), ர.வித்தியராகவி (158), சி.பவித்திரா (158), சி.பாரதி (158), ச.சாகீத்தியன் (157), வி.டினோசன் (157), சி.நிசாந்தன் (157), த.சாருஜா (157), பா.நரேன் (157), ஆ.டினுசன் (157), ஈ.தீபிகா (157), ர.கீர்த்தனன் (156), ப.விஷ்ணுசூர்யா (156), சி. அபிநயா (156).

கி.கோகுலன் (156), பா.சதுர்ஜன் (156), வி.லருசன் (156), ந.கிருத்திகா (156), த.நிசான் (155), மு.பிரவீன் (155), சி.பிரணவன் (155), ம.கஜவர்சன் (155), த. சுவேதிகா (155),ப.ஜீவிதா (155), ர.கசோடினா (155).

ந.அபிப்பிரியன் (154), ச.டிருபா (154), லோ.செந்தில்குமரன் (154), அ.கீர்த்திபன் (154), கு.கஜீபன் (153), செ.கிருஷாந் (153), கே.யதுர்சன் (153), ச.அபிராமி (153), பா.ஐஸ்வர்யா (153), வி.சொரூபி (152), சி.மாதுமை (152), அ.தனுசியன் (152), கு.கௌசிகன் (152), ஜெ.வைஷ்ணவி (152), செ.அஜித் (151).

சி.ஆர்த்திகன் (151), அ.பவித்திரன் (150), கி.யதுசிகன் (150), சி.சாம்பவி (149), இ.பிரகலாதன் (148), ச.திருக்குமரன் (148), சி.வாகீசன் (148), இ.அரவிந்தன் (148), த.ஆகாஷ் (148), மு.கஜார்த்தனி (148), ஆ.ஷோகீசன் (148), சி.சிவருஜன் (148), கு.அபர்ணா (148), சி.சிவவாசினி (148).

உ.செந்தூரன் (147), சு.திருமுருகன் (147), சே.யானுஜன் (147), இ.பிரியந்தி (147), ப.தஸ்மிகா (147), சி.காருண்யா (147), சி.ஜெயவைசாளி (147), ச.நாராயணி (147), வி.சுதர்ஷிகா (146), ச.விதுஷன் (145), க. பிருந்தவர்னன் (144), ந.சஞ்சயன் (144), ஜெ.ஆரபி (144), கு.கஸ்தூரி (144), பி.காயத்திரி (143), சி.கஜலக்சன் (143), சி.துஷாந்தி (143), ஆ.அபிசன் (142). அ.துஷாரா (142). (முடிவுகள் தொடர்ந்து வெளிவரும்). (201)

# வடமாகாணத்திலுள்ள 23 பாடசாலைகளுக்கு கணனிகளை வழங்கியது கல்வித் திணைக்களம்

தென்மராட்சி, ஒக்.1

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினர் 23 பாடசாலைகளுக்கு தலா நான்கு கணனிகள் வீதம் கல்வி அறிவுசார் நிகழ்ச்சித் திட்டத்தின் (ஈ.கே.எஸ்.பி) கீழ் வழங்கியுள்ளனர்.

கணனியைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**தீவக வலயம்:** காரையூரி அ.மி.த.க.பாடசாலை, அனலைதீவு வட லூர் அ.த.க.பாடசாலை.

**யாழ்ப்பாண வலயம்:** கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை, சிறுப்பிட்டி இந்து த.க. பாடசாலை.

**தென்மராட்சி வலயம்:** சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை.

**வடமராட்சி வலயம்** கெருடாவில் இந்து த.க.பாடசாலை, கரணவாய் தாமோதரா வித்தியாலயம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.

**வலிகாமம் வலயம்:** மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம், மூளாய் அ.மி.த.க.பாடசாலை, டாக்டர் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்.

**வவுனியா வடக்கு வலயம்:** கோணர்புளியங்குளம் கிருஷ்ணா வித்தியாலயம், குறிசுட்டகுளம் அ.த.க.பாடசாலை.

**வவுனியா தெற்கு வலயம்:** கல்லாறு சித்தி விநாயகர் வித்தியாலயம், முருகனூர் சாரதா வித்தியாலயம், மகா கரம்பைக்குளம் அ. த.க.பாடசாலை.

**மன்னார் வலயம்:** தலைமன்னார் பியர் றோ.க.த.க. பாடசாலை.

**கிளிநொச்சி வலயம்:** கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை.

**முல்லைத்தீவு வலயம்:** முள்ளியவளை றோ.க.த.க. பாடசாலை.

**துணுக்காய் வலயம்:** ஒட்டுசுட்டான் இந்து வித்தியாலயம்.

**மடு வலயம்:** அடம்பன் றோ.க.த.க.பாடசாலை.

(எ-207)

# ஆடுகளின் அறிவுரை



இராமாயணத்திலே கடைசியிலே இராமருக்கு பட்டாபிஷேகம் நடந்த பின் இராமர் ஆட்சி செய்து கொண்டிருக்கும் பொழுது கைகேயி ஒருநாள் ''பிறவிப் பெருங்கடலிலே வீழ்ந்து நான் தவித்துக் கொண்டிருக்கிறேன். உன்னுடைய உபதேச மொழிகளால்தான் கரை சேரனும்!'' என்று கூறினார். அதற்கு இராமர் அம்மா! கவலைப்படாதேங்கோ! நாளைக்கு இலட்சுமணன் உங்களை அழைத்து உபதேசம் பண்ணி வைப்பான்!'' என்றான்.

இராமன் இலட்சுமணனிடம் ''கைகேயியை சரயு நதிக்கரைக்கு அழைத்துச் சென்று ஆட்டு மந்தைகள் கத்தும் சத்தத்தைக் கேட்கச் செய்!' என்றார். அதே மாதிரி கைகேயியை இலட்சுமணன் கூட்டிச் சென்றார். ''இந்த ஆடுகள் கத்தும் ஒலியை தாங்கள் ஒரு முகூர்த்தம் கேட்கவேணும்'' என இராமர் சொன்னார்.

கைகேயி ஆடுகள் போடுகிற சத்தத்தை கூர்ந்து கவனித்த போது அவை மே! மே! எனக் கத்தியது. கொஞ்ச நேரத்தில் கைகேயின் முகத்தில் ஒரு ஒளி தோன்றி அஞ்ஞானம் நீங்கி ஞானம் வந்தது மாதிரி கைகேயின் முகம் பிரகாசமானது. உடனே இலட்சுமணனைப் பார்த்து ''குழந்தாய்! மெய்ஞானத்தை அடைய இராமன் எனக்கு உதவி செய்திட்டான்'' எனக் கூறினாள் கைகேயி. அரண்மனைக்குச் செல்லும்போது இலட்சுமணன் ''ஆடுகளின் ஒலியில் இருந்து என்ன விளங்கியது?'' எனக் கேட்டான். அதற்கு கைகேயி ''ஆடுகளெல்லாம் மே!மே! என்று கத்தியது. மே! என்றால் 'எனது' என்று அர்த்தம். அதனால் தான் ஆடுகளாக பிறந்து தவிக்கின்றோம். இனிமேல் எதையும் 'எனது' என்று சொல்லமாட்டேன் எனக் கூறினாள்.

இவ்வாறே இராமனிடமும் சொல்ல அதற்கு இராமர் நான் என்கிற அகங்காரமும் 'எனது' என்கிற மமகாரமும் தான் நம்மை படுகுழியில் தள்ளுகின்றன. உங்களுக்கு ஞானம் வந்துவிட்டது. நான் உங்களுடைய மகன் என்பதால் உபதேசம் செய்கிற உரிமை எனக்குக் கிடையாது. அதனால்தான் இப்படிச் செய்தேன் என்றான் இராமன். எனவே ஆடுகள் போடுகிற சத்தத்திலே இருந்து நாம் எவ்வளவு அர்த்தத்தை புரிந்துகொள்ள முடியும் என்பதைப் பார்த்தீர்களா?

**கோ.சுவாமிநாதன்.**

# நினைப்பதும் நடப்பதும்

முற்கால சரித்திரத்திலேயே அசோக வனத்தில் சீதாபிராட்டி சிறை இருக்கிறாள். திரிசடை என்கிற பீடணன் மகள் துணை இருக்கிறாள். சீதை இருக்கும் அசோக மரத்தில் ஒரு நிகழ்வு நிகழ்ந்தது.

களிமண் கூட்டுக்குள் குளவி ஒரு புழுவைக் கொண்டு வந்து வைத்தது. புழுவால் நகர முடியாது. குளவியின் ரீங்காரம் ஓயாமல் கேட்டது.

இக்காட்சியைக் கண்ட சீதை திகைத்துப் போய் இங்கு என்ன நடக்கிறது என திரிசடையைக் கேட்டாள்.

குளவி புழுவைக் கொண்டு வந்து வைத்து ஓயாமல் சுற்றிச் சுற்றி வரும். இடை இடையே கொட்டிக் கொட்டிக் துன்புறுத்தும். குளவியையே நினைத்து நினைத்து அதே எண்ணத்தில் இருப்பதால் புழு குளவியாகிவிடும் என்று திரிசடை விளக்கினாள்.

இதைக் கேட்ட சீதை ஓவென்று அழ ஆரம்பித்தாள். திரிசடை நடுங்கிப் போய் '' ஏன் அழுகிறீர்கள்'' என்று கேட்க புழுப்போல் அல்லும் பகலும் ராமரையே நினைக்கும் நான் இராமராக மாறிவிட்டால் என் கதி என்னாகும் என்று கூறினார்.



திரிசடை சமயோசிதமாகப் பதில் சொன்னாள். ''தாங்கள் ராமரையே எண்ணி எண்ணி ராமர் ஆனாலும் கவலை இல்லை. ஏன் என்றால் அதே நேரத்தில் ராமர் உங்களையே எண்ணி சீதையாகி இருப்பார்.

எப்போதும் ஒரு ராமர் ஒரு சீதை இணை பிரியாது இருக்க முடியும்'' என்றாள். இது ஒரு செவி வழிக்கதை என்றாலும் ஒருவன் தன் மனதில் எண்ணுகிறானோ. அதுவாகவே ஆகிறான் என்று மனோதத்துவம் அழகாக விளக்குகின்றது.

**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த வேளையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் வர்த்தகர்களால் கைவிடப்பட்ட பொருள்களையும் ஆவணங்களையும் மீட்டுச் சென்றவர்களுடன் பேசி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்ற நிர்வாகத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இருபது மில்லியன் ரூபாவையும் ஆவணங்களையும் பெற்று 48 வர்த்தகர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு மன்றின் வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வெள்ளிவிழா ஆண்டையொட்டி மன்றில் 25 வருடங்கள் அங்கத்தவர்களாக இருந்து ஒத்துழைத்த வர்த்தகர்கள் மன்றின் நினைவு முத்திரை பொறித்த கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் வெள்ளிவிழா மலரும் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் 25 வருட பணியினை தொடர்ந்த வணிக நிலையங்கள், வணிகர்களுக்கு விருதுகள் வருடாவருடம் வழங்கப்பட்டு வருகின்றன.

2004ஆம் ஆண்டு மன்றத்தின் மாடிக் கட்டடத்தை அமரர் ச.நமசிவாயம் நினைவு மண்டபம் எனப் பெயரிடப்பட்டு திறக்கப்பட்டு அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல்களும், மன்ற நிர்வாக சபைக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகிறது. மன்றத்தின் வெள்ளி விழாவையொட்டி சாவகச்சேரி நகரின் மையப் பகுதி மற்றும் டிறிபேக் கல்லூரி ஆகியவற்றில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. அவ்வருடமே மன்றுக்கான இலட்சனையும் உருவாக்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை நெல்லியடியில் மன்ற அலுவலகம் தற்காலிகமாக இயங்கி வந்த காலத்தில் அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தக் கட்டணம் அறவிடாத போதிலும் மீளக் குடியேறிய பின்னரும் தமது சேவையினை மன்றம் தொடர்ந்தது. வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் தற்காலிகமாக இயங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி ஆகியவற்றின் தளபாடங்கள், ஆவணங்கள் போன்றவற்றை தனது செலவில் கொண்டுவந்து கொடுத்ததுடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு பிளாஸ்ரிக் கதிரைகளையும் மரத்தளபாடங்களையும் கொள்வனவு செய்து வழங்கியது. சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்குப் பார்வையாளர் மண்டபம் அமைத்துக் கொடுத்ததுடன் அங்குள்ள விடுதிகளுக்கு வர்த்தகர்களின் உதவியுடன் வர்ணந் தீட்டப்பட்டது. அத்துடன் மனநோய், காசநோய் பிரிவுகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டியினையும், மின்விசிறியினையும் வழங்கியுள்ளனர். 2006ஆம் ஆண்டு மன்றத்தினால் புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு வருடாவருடம் வறிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2006ஆம் ஆண்டு ஏ-9 வீதி போக்குவரத்து மூடப்பட்டபோது யாழ்.குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்பட்ட வேளையில் யாழ். அரச அதிபருடன் தொடர்புகொண்டு ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்கள் பெறப்பட்டு தென்மராட்சி முழுவதும் கட்டுப்பாட்டு விலைக்கு வணிக நிலையங்களுக்கு வழங்கி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி





டிறிபேக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கியதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டதுடன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அங்கிருந்தவர்களுக்கு உணவுப் பொருள்கள், உடுபுடைவைகள் வழங்கியுள்ளது. 2005 ஆம் ஆண்டு மன்ற அங்கத்தவர்களின் நலன்கருதி சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பெரும் எண்ணிக்கையான வர்த்தகர்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர்.

*(தொடரும்)*

# சப்பச்சி மாவடிப் பிள்ளையார்

தொகுப்பு: ஜெயந்தன்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் கம்பீரமான நிலையில் பிள்ளையாரின் எழுந்தருளி விக்கிரகம் சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலயத்திலேயே உள்ளது.

இவ் ஆலயத்தில் நித்திய பூஜைகளை மேற்கொண்ட செல்லையா ஐயர் சோமசுந்தரக் குருக்கள் தொடர்ச்சியாக 45 வருடங்கள் பிள்ளையாருக்குத் தொண்டாற்றி வந்தார். அவரின் மனதில் தோன்றிய எண்ணக் கருவில் உதித்த கம்பீரமான பிள்ளையார் எழுந்தருளியை தனது செலவில் செய்வித்து ஆலயத்தில் பிரதிஸ்டை செய்வித்தார்.

பிள்ளையாரில் மிகுந்த பக்தியும் பற்றும் கொண்ட கல்வயலூர் சோமசுந்தரக் குருக்கள் ஒய்வுபெற முன்னர் தனது மகளின் கணவரான செவ்வந்திநாத ஐயர் பரமானந்தக் குருக்களை ஆலய நித்திய பூஜைகளை மேற்கொள்ளச் செய்தார். இவருக்கு உதவியாக இவரது மூன்று புதல்வர்களும் ஆலயத்தில் பணி புரிந்தனர்.

2003ஆம் ஆண்டு ஆலய பஞ்சகுண்டபக்ஸ புனராவர்த்தன பிரதிஸ்டா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் சரசாலையைச் சேர்ந்த நடராசாக் குருக்கள், யோகேஸ்வரக் குருக்கள் ஆலய நித்திய பூஜைகள் செய்யும் பொறுப்பினை ஏற்று நடத்தி வருகிறார். 2005ஆம் ஆண்டு தொடக்கம் ஆலய உற்சவ வேளைகளில் சங்கத்தானையைச் சேர்ந்த சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள் பிரதம குருவாக செயற்பட்டு வருகிறார்.

1995ஆம் ஆண்டு ஆலய அடியார்களின் விருப்பத்திற்கேற்ப இதுவரை காலமும் தை மாதம் ரேவதி நட்சத்திரத்தில் அதாவது ஆலயம் உருவாக்கப்பட்ட நாளான தினத்தில் முடிவுறும் வகையில் நடத்தப்பட்டு வந்த அலங்காரத் திருவிழாவை பெருந் திருவிழாவாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. அந்த வருடம் கொடிக்கம்பம் ஸ்தாபிக்கப்பட்டு வைகாசி மாத பூரணை தினத்தில் பூர்த்தியாகக் கூடிய வகையில் பத்து நாள்கள் பெருந்திருவிழா ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வருடமே அடியார்களின் ஒத்துழைப்புடன் புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான வேலைகள்ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நாட்டு நிலைமை இடப்பெயர்வு போன்றவைகளால் கட்டுமாணப் பணி தாமதமாகி 2002ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்வின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 31.05.2004ஆம் திகதி பெருந்திருவிழா காலத்தில் சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டது.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற வேளையில் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் பெரும் யுத்தமேகம் சூழ்ந்திருந்தது எனலாம். தம்பு தோட்டம் பகுதி படையினரின் முகாம் அமைந்திருந்ததால் ஆலய சுற்றாடல் பகுதி பலத்த பாதுகாப்பின் மத்தியில் வைக்கப்பட்டிருந்தது.

ஆலயத்தை அண்டியுள்ள பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட வேளையில் ஆலயத்திற்கு வந்த மக்கள் ஆலய நிலையைக் கண்டு பிள்ளையாரின் மகத்துவத்தைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினர். இடப்பெயர்வின்போது ஆலய தர்மகர்த்தாவினால் போடப்பட்ட பூட்டுகள் அப்படியே இருந்தன.

தென்மராட்சியில் அவ்வேளையில் பல ஆலயங்கள் உடைக்கப்பட்டும் சேதமடைந்தும் காணப்பட்ட வேளையில் இந்த ஆலயத்தில் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாததுடன் ஆலய வளாகத்தில் உள்ள அனைத்துப் பொருள்களும் பாதுகாப்பாகக் காணப்பட்டன.

பிள்ளையாரின் மகிமையை உணர்ந்த அடியார்கள் நித்திய பூஜைகளை உடனே ஆரம்பித்ததுடன் மகா கும்பாபிஷேகம் செய்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு 07.02.2003ஆம் திகதி பிரம்மஸ்ரீ செ.பரமானந்தக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஆலயம் உருவாக்கப்பட்ட பின்னர் நடத்தப்படும் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் இதுவாகும்.

*(தொடரும்)*

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமை மீறல் தற்போதும் தொடர்ந்து வருகின்றது

## பழ.நெடுமாறன் வேதனை



திருச்சி, ஒக்.1

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது போர்க்குற்ற விசாரணை நடத்தி, உரிய தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் இப்போதும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்றும் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

தமிழகக் கல்லூரி மாணவர்கள் கூட்டமைப்பின் சார்பில் திருச்சியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'புலம்பெயர்க்கப்பட்ட தமிழர்களும், மனித உரிமை மீறல்களும்' என்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியவை வருமாறு -

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போரில் ஒரு இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்தப் பேரவலத்தைத் தடுத்து நிறுத்த இந்தியா உள்ளிட்ட எந்த உலக நாடுகளும் முன்வரவில்லை. இப்போதும் அங்கு மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

தமிழ் மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது போர்க்குற்ற விசாரணை நடத்தி, உரிய தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

பிரபாகரன் உயிரோடு இருக்கிறாரா என மாணவர்கள் கேட்ட கேள்விக்கு பழ.நெடுமாறன் பதிலளிக்கையில் -

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடுதான் இருக்கிறார். அடுத்த கட்டப் போருக்கு அவர் தயாராகி வருகிறார். நிச்சயம் பிரபாகரன் தலைமையில் அடுத்தக் கட்டப் போர் இலங்கையில் நடைபெறும். அவரது இருப்பு குறித்து இலங்கை, இந்திய உளவுத் துறையினர் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர் - என்று கூறினார்.

இந்தக் கருத்தரங்கில், சர்வதேச தொண்டு நிறுவனங்களையும், ஊடகங்களையும் இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குள் அனுமதிக்க வேண்டும். தமிழர் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் ஆதிக்கத்தையும், கட்டுப்பாட்டையும் முற்றிலும் நீக்க வேண்டும். போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை சொந்த இடங்களில் முறையாக மீள்குடியேற்றம் செய்து, முறையான மறுகட்டமைப்புச் செய்ய வேண்டும்.

இந்தப் பணியை சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் குழு கண்காணிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சம்மாந்துறையில் பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஒக்.1

சம்மாந்துறை, நெய்னாகாடு கல்லாற்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டதாக சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லாற்றில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் ஆற்றில் சடலம் மிதப்பதைக் கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே சடலம் மீட்கப்பட்டது.

அடையாளம் காணமுடியாத வகையில் சடலம் பழுதடைந்துள்ளதுடன் ஒரு சோடி செருப்பு மற்றும் உடைந்த நிலையிலான கைக்கடிகாரம் போன்றன மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஏ-10)

### போர் இடம்பெற்ற காலத்தில்

## வாகனங்களைப் புலிகளின் பகுதிகளுக்குள் கொண்டு சென்று விற்பனை செய்து வந்த கும்பல் கைது

கொழும்பு,ஒக்.1

போர் இடம்பெற்ற காலத்தில் தெற்கிலிருந்து வாகனங்களை எடுத்துச் சென்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு விற்பனை செய்த கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய கும்பலின் தலைவர் உள்ளிட்ட மூன்று பேரை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் அண்மையில் கொள்ளையிடப்பட்ட கார், வான் மற்றும் லொறி ஆகிய எட்டு வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன என விம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தெற்கில் வாகனங்களைக் கொள்ளையிட்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர் நிறைவடைந்ததன் பின்னரும் குறித்த கும்பல் வாகனக் கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ற)

## கொழும்பு பல்கலையில் குழு மோதல் 3 மாணவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக்.1

கொழும்பு பல்கலைக்கழகக் கலைப் பீட மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் காயமடைந்துள்ளார் என்றும் அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ர)

## ரத்வத்தவின் ஊழல் மோசடி வழக்கு ஒக்டோபர் 11 ஆம் திகதி விசாரணை

கொழும்பு,ஒக்.1

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்தவத்வுக்கு எதிரான ஊழல் மோசடி வழக்கு ஒக்டோபர் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

தமது வருமானத்திற்கு மேலதிகமான முறையில் சொத்துகளை குவித்துள்ளார் என அனுருத்த ரத்வத்தவிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்றரை கோடி ரூபா பணமும், ஒன்றரை கோடி ரூபா சொத்துக்களுக்கும் வருமானத்திற்கு மேலதிகமாக உரிய கணக்குகளின்றித் திரட்டப்பட்டுள்ளது என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அனுருத்த ரத்வத்த ஏற்கனவே ஊழல் வழக் கிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தத் தீர்ப்புத் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் விசாரணைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ர)

## கல்முனை வைத்தியசாலை பணிப்பாளருக்கு எதிராக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம்

கல்முனை,ஒக்.1

கல்முனை ஆதார வைத்தியசாலை பணிப்பாளரை இடமாற்றக் கோரி நேற்று முன்தினம் கல்முனை ஆதார வைத்தியசாலையின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் விழிப்புணர்வுக் குழுவினரால் நடத் தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், மழையையும் பொருட்படுத்தாமல் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டனர்.

அங்கு வந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன, வைத்திய பணிப்பாளருக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்ததாகக் கூறி அவருக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (ஏ-10)


union assurance
Trust in your tomorrow, today.

# இளைஞர் யுவதிகளே !

## A/L எழுதிவிட்டு காத்திருக்கின்ற மாணவர்களே !

**வாழ்க்கைப் பயணத்தில் வெற்றிச்சிகரத்தை அடைய ஓர் அரிய சந்தர்ப்பம்**

யூனியன் அஷ்யூரன்ஸின் மாபெரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்
பதவி வெற்றிடங்கள் எம்மிடம். நிரப்ப நீங்கள் தயாரா..?

இதோ!.. யாழ். பிரதான கிளையில்

பதவி (1) காப்புறுதி ஆலோசகர்
பதவி (2) தனிப்பட்ட நிதி ஆலோசகர்
பதவி (3) சிரேஷ்ட தனிப்பட்ட நிதி ஆலோசகர்
பதவி (4) தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
பதவி (5) சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்

**தகைமைகள்:-**

* க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி
* காப்புறுதித்துறையில்/ சந்தைப்படுத்தல்துறையில் முன்னனுபவம் (கட்டாயம் அல்ல)
* வன்னியில் இருந்து மீளக் குடியமர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை

**தகைமையுடன் நாம் எதிர்பார்ப்பது**

★ இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
★ வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கான ஆர்வம் திடசித்தம், உழைக்கும் விருப்பம்

**தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிவரக்கோவையுடன்**

காலம் :- 04.10. 2010
நேரம் :- 09 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- A. அன்ரன் (விற்பனை முகாமையாளர்)
077 342 2716 021 222 3753














(அ/571353)

### வீடு வாடகைக்குண்டு

யாழ்.கந்தர்மடத்தில் 3 படுக்கை அறைகள், ஒருசமையல் அறை, விசாலமான வரவேற்பறை மற்றும் 25 வாகனங்கள் தரிப்பிட வசதிகொண்ட வீடு வாடகைக்குண்டு. அலுவலகப்பாவனைக்கு உகந்தது
இல.283/2, பலாலி வீதி, (கேற்ற போல் சந்தி)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0777769260,0772328684
(பார்வையிடும் நேரம்-
காலை 9-மாலை 6 மணிவரை).

### TV கள் மலிவு விற்பனை

Sony wega Flat 14" - 10,000/=, 21" - 14,000/=, 25" - 22,000/=, 29" - 25,000/= மற்றும் பொக்ஸ் வகைகள், அம்பிளிபயர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், Casste Deck, ரேடியோக்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொ.பே: 077 1393670, 021 4920853
இ.மகேஸ்வரன்
அம்பலக்கொம்பனி, சீவிப்புலியடி (ஆரம்ப பாடசாலை அருகில்), கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

### தவறிவிட்டது

வடலியடைப்பு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன் என்பவரது கல்வி சார்ந்த ஆவணங்கள், மோட்டார் காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன கைப்பையுடன் தாவடிச் சந்தியில் இருந்து மானிப்பாய் ஊடாக சங்கானைக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 0773144631 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### காணி விற்பனைக்கு

இணுவில் மேற்கு, பாப்பா தோட்ட ஒழுங்கை, பருத்தியடைப்புப் பிள்ளையாரடி முடக்கில் ஒழுங்கை முகப்பு உடைய இரண்டு பரப்பு ஒன்றரைக் குழி காணி.
விலை: பரப்பு ஏழரை இலட்சம்.
தொடர்பு:- 94, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு.
தொ.பே: 0213216866

### காணி விற்பனைக்கு

மட்டுவில், சந்திரபுரம் அரசடி வீதியில் (குளக்கடை ஒழுங்கை) அமைந்துள்ள காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- வி.கோபி விக்ரர் 0775250012

### மணமகள் தேவை

69ஆம் ஆண்டு, உத்தரம், செவ்வாய் இல்லாத, லண்டன் P.R மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. (யாழ்.இந்து கௌரவ குடும்பம்). துர்க்கா திருமண சேவை 9, சங்கிலியன் வீதி, நல்லூர். 0213211814

### காணி விற்பனைக்கு

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில், G.P.S வாசிகசாலைக்கும் விளையாட்டரங்கிற்கும் இடையில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொ.பே:- 0711276747,0212228203


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி முதியோர் இல்லத்தின் தோற்றமும் பணிகளும்

இலங்கையில் முதியோர்கள் பராமரிப்பு நிலையங்கள் மாவட்டத்திற்கு மாவட்டம் பல இருந்தாலும் அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற முதியோர் இல்லங்கள் மூன்றே மூன்று தான் உள்ளன. அவற்றில் ஒன்று மீகிரிகம என்ற இடத்திலும், அடுத்தது அநுராதபுரத்தி லும் மற்றது வடமாகாணத்திலுள்ள யாழ்.மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள கைதடி என்னும் பிரதேசத்தில் சாந்தி நிலையம் என்ற பெயரிலும் அமைந்துள்ளன. கைதடிப் பிரதேசத்தில் அமைவதற்கு அந்தக் கிராமத்தில் சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் திரு.குமாரசாமி ஆவார். நாட்டின் முதல் பிரதமராக இருந்த டி.எஸ்.சேனநாயக்காவினால் 1952ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி முதியோர் இல்லத்திற்கான அடிக்கல் கைதடியில் நாட்டப்பட்டு பின்னர் இரண்டாவது பிரதமராக வந்த சேர்.ஜோன்.கொத்தலாவலவினால் சர்வதேச முதியோர் வாரத்தில் ஒரு நாளான 1954ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. முதியவர்களுக்கு தள்ளாத வயதில் கைக்கு ஊன்றுகோல் (கைத்தடி) தேவை என்பது போல் கைதடியில் இந்த இல்லம் அமைந்தது சாலவும் பொருத்தமாகும். இந்தச் சாந்தி நிலையமானது A-9 பாதையில் அருகில் அமைந்த தோடு அதனைச் சூழ சித்த வைத்திய பல்கலைக்கழகமும், சித்த வைத்தியசாலையும், கைதடி மருத்துவமனையும் சிறுவர்களைப் பொறுப்பேற்கும் இல்லமும் நவீல்ட் பாடசாலையும் அமைந் திருப்பது சிறப்பம்சங்களாகும்.



தற்போது வடக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் இந்த சாந்தி நிலையம் ஆதரவற்ற அநாதரவான மூத்தோர்க ளுக்கு புகலிடம் வழங்கி அன்பாகவும் ஆதர வாகவும் அரவணைத்து பாதுகாப்பளித்து வருகின்றது.

சாந்தி நிலையத்தில் கடந்த வருடம் ஆண்களுக்காக ஒரு விடுதி வடக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டு அழகான முறையில் அமைக்கப்பட்டு ஆண் முதியவர்களின் பாவனைக்காக எமது வடமாகாண ஆளுநர் கௌரவ ஜி.ஏ.சந்திரசிறி அவர் களால் திறந்து வைக்கப்பட்டது. A9 பாதை திறக்கப்பட்ட பின்பு சாந்தி நிலையமானது நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இதனால் யாழ்.மாவட்டத்தை நோக்கி வரும் தென்பகுதியாளர்களை கவர்ந்திழுக்கின்றது. சாந்தி நிலையத்தில் பல அபிவிருத்தி வேலைகளை வடக்கு சமூக சேவைகள் திணைக்களம் செய்துள்ளது. தற்போதும் செய்துகொண்டிருக்கின்றது. இந்த இல்லமானது எதிர்காலத்தில் முதியோர்களின் ஆனந்தமான அழகான இல்லமாக திகழும் என்பதில் சந்தேகமே இல்லை. சாந்தி நிலையத்தில் தற்போது 109 ஆண்களும் 74 பெண்களுமாக மொத்தம் 183 முதியவர்கள் பாது காக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களுக்கான உணவு, உடைகள், மருத்துவம் போன்ற ஏனைய வசதிகளை வடக்கு சமூக சேவைகள் திணைக்களம் வழங்கி வருகின்றது. சர்வதேச முதியோர் வாரம் ஒக்ரோபர் 01ஆம் திகதி தொடக்கம் 07ஆம் திகதிவரை சகல நாடுகளிலும் கொண்டாடப்படும் அதே வேளையில் எமது சாந்தி நிலையமும் அவ் வாரத்தினை ஒவ்வொரு நாளும் பல நிகழ்ச்சிகளை நடத்தி முதியோர்களை கௌரவித்து வந்துள்ளது. அதேபோல் இந்த வருடமும் சிறப்பாக கொண்டாடவுள்ளது. இங்கு வாழும் முதியவர்களுக்கு பல போட்டிகள் வைத்து இறுதிநாள் விழாவில் போட்டியில் வெற்றியீட் டிய முதியவர்களை கௌரவித்து பல பரிசுகள் வழங்கவுள்ளோம்.

சாந்தி நிலையத்தில் வாழும் முதியவர்களைப் பராமரிப்பதற்காக சமூக சேவைத் திணைக்களம் அத்தியட்சகர் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தாதிகள், பரிசாரகர்கள், தொழிலாளிகள், சுகாதாரத் தொழிலாளிகள், காவலாளிகள், சமைய லாளர்கள் போன்றோர்களை நியமித்து இந்த இல்லத்தினை சிறப்பாக வழிநடத்தி வருகின்றது. பராமரிப்பு ஊழியர்களும் முதியோர்களை அன்பாக வழிநடத்தி பராமரித்து வருகின்றார்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கு ஏற்ப எம்மை எல்லாம் பெற்றெடுத்து வளர்த்து இந் நிலைக்கு ஆளாக்கிய எம் தாய், தந்தையரை நினைவு கூர்ந்து ஆதரவற்று அநாதரவான முதியோர்கள் முதியோர் இல்லங்களில் வாழ்கின்றார்கள். எனவே இல்லங்களில் வாழும் மூத்தோர்களை சர்வதேச முதியோர் வாரத்தில் ஒரு நாள் சென்று தரிசித்து அவர்களை சந்தோஷப்படுத்துவோமாக.

எஸ்.ராசலிங்கம் (அத்தியட்சகர், சாந்தி நிலையம்)

## முதியோரின் உள மகிழ்வுக்கான செயல்களை மேற்கொள்ள வேண்டும்

மனித வாழ்வில் முதுமைப்பருவம் அனுபவமிக்க அழகிய பருவமாகும். இப்பருவத்தில் உடலானது தளர்ச்சியடைந்து வலுக்குறைந்து காணப்படும். இந்நிலை காரணமாக இப்பருவம் இயலாமை எனும் நிலைக்குள் தள்ளப்படுகின்றது. இதனால் அவர்களின் நடத்தைகள் அசாதாரணமானவையாகக் காணப்படலாம். இதனைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு உதவுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

முதுமைப் பருவம் தனது சுமைகளையும் ஏக்கங்களையும் இறக்கி வைத்து நிம்மதி காண முயல்கின்றது. ஆனால் இதற்கு உதவுவார் இல்லை. குடும்பத்தில் அவர்களை முதன்மைப் படுத்தி கருமமாற்றுவோர் எத்தனைபேர்? இப்பருவத்தி னர் தம்மால் பிறருக்கு தீங்கு ஏற்படாத வகையில் தம்மைத் தாழ்த்தியும் குறுக்கியும் வாழ முற்படுகின்றனர். இந்நிலையைப் புரிந்துகொண்டு அவர்களின் உள வருடல்களையும் உளச்சுமைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் முதுமைப் பருவம் முழுமை காண முயலும்.

பெற்றோர்கள் பிள்ளைகளை முதியோர்களுடன் இணைத்துக் கருமமாற்ற வேண்டும். அவர்களுக்கான சிறு சிறு உதவிகளைச் செய்து காண்பிப்பதுடன் செய்ய வழிப்படுத்தவும் வேண்டும்.

முதுமை காணும் உலகை மகிழ்வுக்குரியதாக்குவதும் அவர்களுக்கு உளமாற உதவுவதும் சமூக அங்கத்தவர் ஒவ்வொருவரினதும் பணியாக இருப்பதுடன் தனியே முதியோர்தின விழாக்களில் மட்டு மல்லாது தொடர்ச்சியாக அவர்களுக்கான உதவி நிலைத் திட்டமொன்றை செயற்படுத்தும்போது முதியோரின் பய ணப் பாதை மகிழ்வானதாகும்.

முதியோரின் உள ஆற்றலை வளப்படுத்துவதற்கு உதவும் இலக்கியப் படைப்புக்களைப் பிரசவிக்க வேண்டும். அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு களம் அமைத்துக் கொடுப்பதன் மூலம் சிறந்த அனுபவப் பகிர்வுகள் சமுதாயத்தை வந்தடையும்.

முதியோரைக் கேலி செய்வதும் அவர்களைத் துன்புறுத்துவதும் தவிர்க்கப்பட வேண்டும். இதனைப் பிள்ளைகள் உணர்ந்து முதியோரின் உள மகிழ்வுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். வலு நிறைந்த சமுதாயத்தின் தோற்றத்திற்கு முதுமை யின் அனுபவப் பகிர்வுகள் என்றும் உதவி நிற்கும்.

வை.சசிகுமார்
(ஆசிரியர்)

**இன்று சர்வதேச முதியோர் தினம்**

# சிறுவர்கள் நலனில் அக்கறை செலுத்துவோம்

சாந்தியும் சமாதானமும் நிறைந்த, ஒளிமயமான சுபீட்சமான ஒரு நாட்டைக் கட்டி எழுப்புவதில் வருங்கால சந்ததியினரான சிறுவர்களுக்கு மிக முக்கிய பங்கு உண்டு. அவர்களை கல்வி அறிவும், பல நல்லொழுக்க விழுமியங்களும் நிறைந்த சிறந்த நற்பிரஜைகளாக உருவாக்குவதில் எமது சமூகம் மிகவும் அக்கறையுடன் செயற்படுதல் அவசியமாகும். எமது நாட்டின் கலாசாரத்தையும், பண்பாடுகளையும் வாழையடி வாழையாக இம்மண்ணில் நிலை நிறுத்தி, தக்க வைப்பவர்களாக சிறுவர்கள் செயற்படுகிறார்கள்.

சுதந்திர வானில் தம் நண்பர்களுடன் உலாவரும் சிறுவர்கள் கல்வியையும், பல தரப்பட்ட அனுபவங்களையும் தமது ஆசிரியர்களிடம் பெற்றுக் கொள்வதுடன் சிறந்த ஆளுமைப்பண்புகளையும் பாடசாலைக் கல்வி மூலம் வளர்த்துக் கொள்கின்றனர். இவர்களில் பலர் பல்வேறுபட்ட காரணங்களால் தமது பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல், குழந்தைத் தொழிலாளர்களாகவும் மாறி விடுவதுடன், பல்வேறுபட்ட துஷ்பிரயோகங்களுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். இப்பொழுது சிறுவர் துஷ்பிரயோகம், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை போன்றவை எமது நாட்டில் பெரும் பூதாகரமான பிரச்சினைகளாக உருமாறியுள்ளது. இவை முடிந்தளவில் தடுத்து நிறுத்தப்பட வேண்டிய தேவையும் அவசியமும் இக்காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

உடல், உளரீதியில் சிறுவர்கள் பாதிக்கப்படுவதற்கும் பிழையான வழிகளில் அவர்கள் செல்வதற்கும் பல காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியில் இது பற்றிய பல ஆய்வுகள் நடத்தப்பட்டுத் தீர்வுகளும் கண்டறியப்பட்டு நடைமுறைப் படுத் தப்பட்டும் வருகின்றன. ஆனாலும் சிறுவர்கள் பற்றிய பிரச்சினைகள் தொடர்கதையாகவே உள்ளது.

வறிய குடும்பத்தில் பிறந்தவர்கள், பெற்றோர் இருவரையும் இழந்து அநாதையாகி விட்டவர்கள், தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவரை இழந்தவர்கள், மதுபோதைக்கும் - வேறு தீய பழக்கவழக்கங்களுக்கும் அடிமையான தகப்பனின் பிள்ளைகள், தகப்பனால் கைவிடப்பட்டவர்கள், கல்வி அறிவற்ற பெற்றோர்களின் குழந்தைகள், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர்கள், குழந்தைகள் பற்றி போதிய அக்கறையும் விழிப்புணர்வும் அற்ற பெற்றோர்களின் பிள்ளைகள், பெண் தலைமைத்துவக் குடும்பத்தில் உள்ளவர்கள், தாய் அல்லது தந்தை வெளிநாடு சென்றவர்களின் பிள்ளைகள், முக்கியமாக வெளிநாட்டில் வேலை பார்க்கும் தாயின் பிள்ளைகள், வேலைக்குச் செல்லும் தாய்மாரின் குழந்தைகள் போன்ற பல தரப்பட்ட குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் பெரும்பாலான பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இதைவிட எமது நாட்டில் போர்க்காலச் சூழலால் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகளும், சிறுவர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது. நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது ஊனமுற்ற பெற்றோர் களின் குழந்தைகளும் இதில் உள்ளடங்குவர்.



வறுமையும், பெற்றோரின் அக்கறையின் மையுமே பெரும்பாலான சிறுவர்களின் வாழ்க் கையில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன எனலாம். ஒருநேரச் சோற்றுக்கே வழியின்றி அலையும் குடும்பங்களில் பிறந்த சிறுவர்கள் கல்வியைத் தொடர முடியுமா?

வறுமையினாலும், பல்வேறுபட்ட குடும்பப் பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்ட சிறு வர்களால் ஒரு நிலைப்பட்டு, மனதை அடக்கி படிப்பை மேற்கொள்ள முடியுமா? சந்தோஷமாக இருக்க முடியுமா? என்றால் நிச்சயமாக இல்லை என்றே பதில் சொல்லலாம். சிறந்த முறையில் கல்வியைத் தொடர சந்தோஷமான, அமைதியான மனநிலை குழந்தைகளுக்கு இருக்க வேண்டியதன் அவசியத்தை பல கல்வியியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

உயிர் வாழ்தலுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவையே சரிவரக் கிடைக்காத நிலையில் குழந்தைகளின் மனநிலை கல்வி அறிவைப் பெறுவதற்கும் சந்தோஷமாக ஓடியாடி விளையாடுவதற்கும் முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விடுகின்றது என்பது உண்மை. இதை விட மதுபோதைக்கு அடிமையான தகப்பன், வீட்டில் செய்யும் சித்திரவதைகளுக்கும், தாய்மார்கள் படும் அவஸ்தைகளையும், துன்பங்களையும் நேரிடையாக பார்த்து, அனுபவித்து மனம் உடைந்த நிலையில் உள்ள சிறுவர்கள் படிப்பைத் தொடர்வதும், கல்வியை முழுமையாக கிரகித்துக் கொள்வது என்பதும் மிகவும் கடினமான காரியம் ஆகும்.

இந்த விடயத்தில், பெற்றோர்கள் இருவரினதும் பங்களிப்பு மிக மிக அவசியமானது. தன் குழந்தைகளின் நலனுக்காகவாவது மதுப்பழக்கத்தை கைவிட்டு, தன்னால் இயன்ற தொழிலைச் செய்து, தான் இழந்து விட்ட படிப்பையும், உயர் பதவியையும் தன் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள ஒவ்வொரு குடும்பத் தலைவரும் ஒத்துழைக்க வேண்டும். தன் பிள்ளைகள் தன் பரம்பரைத் தொழிலையே செய்ய வேண்டும் என்ற மனநிலை மாற்றப்பட்டு தன் குழந்தைகள் உயர் கல்வியை மேற்கொள்ள வேண்டும் என்பதிலும் உயர் பதவிகள் வகிக்க வேண்டும் என்பதிலும் பெற்றோர்கள் அக்கறையுடன் செயற்படல் வேண்டும். தம் மகனை ஒரு சிறந்த கல்வியாளனாக மிளிரச் செய்வதே ஒவ்வொரு பெற்றோர்க்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

பாடசாலைகளில் வழங்கப்படும் இலவசக் கல்வி, பாடப்புத்தகங்கள், சீருடை, மதிய உணவு போன்றவற்றுடன் தன் குழந்தைகளைப் படிக்க வைப்பதில் பெற்றோர்கள் மிகவும் அக்கறையுடனும் விழிப்புடனும் செயற்படல் அவசியம் ஆகும். ஏழ்மை என்ற ஒன்றைக் காரணம் காட்டி, பிள்ளைகளின் படிப்பைச் சீர்குலைக்காது கஷ் ரப்பட்டுப் படிக்க வைத்தால் அவர்கள் பிள்ளைகள் மாத்திரமல்ல தமது வருங்கால சந்ததியினரும் தொடர்ந்தும் கல்வியறிவைப் பெற வழி அமைத்துக் கொடுக்கின்ற பாக்கியவான்கள் ஆகின்றனர்.

பெற்றோர்களுக்கும், சிறுவர்களுக்கும் கல்வி பற்றியும் அதன் சிறந்த பலன்கள் பற்றியும் போதிய விழிப்புணர்வும், அறிவும் வழங் குதல் அவசியம். சிறுவர்களை வேலைக்கு அனுப்புவதைப் பெற்றோர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். இது பற்றி ஒவ்வொருவரும் அக்கறையுடன் செயற்படல் வேண்டும்.

மதுப்பழக்கவழக்கம், கூடாத நண்பர்களின் சேர்க்கை போன்றவற்றிற்கு இலகுவில் ஆளாகிவிடுகின்றனர். இந்தச் சிறுவர்கள் தனக்கு தன் குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கு வேண்டாதவர்களாகவே கருதப்படுகின்றனர். இச்சிறுவர்களால் இழந்து விட்ட இளம் பருவத்தையும், கல்வியையும், வளமான வாழ்வையும் மீளப்பெற்று வெற்றிநடைபோடும் மனிதர்களாக வாழ்வது கொம்புத்தேனாகி விடுகின்றது. கடந்து போன நாள்களும், இளமைக் காலங்களும் மீண்டும் பெற முடியாதவை. இழந்து விட்ட கல்வியும் அதேபோன்றதே.

குழந்தைத் தொழிலாளர்களைச் சித்திரவதைப்படுத்தி வேலை வாங்கும் பணக்கார வர்க்கத்தினர் அவர்களுக்கு வேலைக்கேற்ப தகுந்த ஊதியம் வழங்குவதில்லை. பணம் சுரண்டும் வர்க்கத்தினர் முன்னேறிச் செல்ல சிறுவர்கள் மிருகங்கள் போல நடத்தப்பட்டு வேலை வாங்கப்படுகின்றனர். இதைவிட குழந்தைத் தொழிலாளர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் பல் வேறு மட்டங்களில் உட்படுத்தப்படுகின்றனர். ஆகவே ஏதுமறியாத குழந்தைத் தொழிலாளர்கள் பெருகுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவது இன்றியமையாததாகும்.

குழந்தைத் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பெற்றோர்களுக்கும் ஏனையோர்களுக்கும் ஆலோசனைகளும் தண்டனைகளும் வழங்கப்படல் வேண்டும். சிறுவர்கள் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் கண்டறியப்பட்டுத் தக்க தண்டனைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படல் வேண்டும்.

சிறுவர்கள் எமது நாட்டின் செல்வங்கள். எமது நாட்டைக் கட்டியெழுப்பும் வருங்கால சிற்பிகள். வருங்காலத் தலைவர்களாக வளர்ந்து வரும் சிறுவர்கள் நலனில் நாம் மிகுந்த அக்கறையுள்ளவர்களாக இருத்தல் அவசியமாகும். அவர்களுக்குப் போதிய பாதுகாப்பும் கல்வி அறிவும் வழங்குதல் எமது இன்றியமையாத கடமையாகும்.

கலாநிதி வீரமங்கைஸ்ராலினா யோகரத்தினம்
சிரேஷ்ட விரிவுரையாளர் - ஆங்கிலம்,
மொழியியல் -ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள்

வடமராட்சி, ஒக்.1

கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தில் புதிய திருப்பணி குருவின் அமர்வு வழிபாடும் சர்வதேச தின நிகழ்வும் பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு என்.அருள்நாதன் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை முதல் பிற்பகல் வரை நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்குக் கிழக்கு மாகாண திருச்சபைத் தலைவர் அருட்திரு.எல்.டி.தயாசீலன் கலந்துகொண்டு புதிய திருப்பணிக் குருவான அருட்திரு ஹமில்டன் யூட்டுக்கான அமர்வு வழிபாடுகளை நடத்தி வைப்பார். தொடர்ந்து சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெறும்.

இதேவேளை அல்வாய் மெதடிஸ்த தேவாலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு என்.அருள்நாதன் தலைமையில் ஆங்கிலமொழி மூலமான வழிபாடும், முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறும். (ந-236)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
156 புள்ளிகள் பெற்ற
ஜெயசிங்கம்-சூரியகலா
தம்பதியரின் தவப்புதல்வி செல்வி
மதுஷாளினி
(மாணவி,யா/உடுவில் மகளிர் கல்லூரி)
சித்தியடைந்ததையிட்டு கற்பித்த
ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு,
கல்வி உலகில் சாதனையீட்ட
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அண்ணன்மார்,
அக்காமார், அத்தைமார், மாமாமார், சித்திமார், சித்தப்பாமார்,
சுதா அத்தை, குமுதா அத்தை.
தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு. (103989)


# மழலைகள் மகிழ் தினம்

யாழ்ப்பாணம், ஒக்.1

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான 'மழலைகள் மகிழ்தினம்' நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேலணையிலுள்ள மகளிர் அபிவிருத்தி நிலையக் கிளை அலுவலகத்தில் நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு செட்டிப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலிருந்து 70 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு புத்தகப்பைகள், இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படுவதுடன், சிறுவர்களுக்கான 'மகிழ்களம்' நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ந)

# பாடசாலை வீதியை புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.1

சுழிபுரம் விக்ரோரியா கல்லூரியின் உள்ளக சுற்று வட்டார வீதியைப் மீள் புனரமைப்புச் செய்து அபிவிருத்தி செய்ய பிரதேச சபை முன்வரவேண்டும் என பாடசாலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இப்பாடசாலையின் சுற்று வட்டார வீதி புனரமைப்பு இன்றி அழிவடைந்து காணப்படுவதால் மாணவர்களின் செயற்பாடுகளுக்கு குந்தகமாகவுள்ளது. எனவே, இதனை உடன் புனரமைத்துத் தருமாறு பாடசாலை அதிபர் வ. ஸ்ரீகாந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (ந-302)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய மட்டத்திலான சித்திரப் போட்டிகளில் சாதனை
படைத்துள்ள எமது கல்லூரி மாணவனான
தே.பாரிராஜ்
மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.
இவர் தான் பங்குபற்றிய
1.அஞ்சல் திணைக்களப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தையும்
2.தேசிய வீடமைப்புத்துறை உலக குடியிருப்பு தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தையும்
3.அகில இலங்கை போதைப்பொருள் ஒழிப்புதினப் போட்டியில் வட மாகாணத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.
சாதனைகள் படைத்த இம்மாணவனைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறோம்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
இணுவில் மத்திய கல்லூரி. [சி/571464]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி லிங்கமயம் நர்மதா
சங்கானை பொன்னையா
மனோன்மணியின் பூட்டியே,
சித்தன்கேணி சிவமயத்தின் பேத்தியே,
லிங்கமயம்- ஜெயறஞ்சினியின்
செல்வப் புதல்வி நர்மதாவே!- நீ
உடுவில் மகளிர் கல்லூரியில்
ஊக்கமுடன் கல்வி பயின்று
புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்ததையிட்டுப் பாராட்டி
வாழ்த்துகின்றோம். (103986)



துரைராஜன்-தாத்தா,
நாகரத்தினம்-அம்மம்மா.
து.வஜீசன், சங்கானை.



Super Line இன்
*Super Luxury*
பஸ்சேவை
இலங்கையின் முதற்றர போக்குவரத்து நிறுவனமான Super Line இன் பஸ் சேவைகள் யாழ். மாவட்டத்திற்கும் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.
★ தினமும் யாழ்-கொழும்பு, கொழும்பு-யாழ்ப்பாணம் சேவைகள்.
★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட இருக்கை வசதிகள்
★ ஒவ்வொரு பயணிக்குமான காப்புறுதி வசதி
★ குறைந்த கட்டண வசதி
★ நட்புறவுடன் பழகும் ஆளணி வசதிகளைக் கொண்டது.
தொடர்புகளிற்கு: யாழ்ப்பாணம்: 0774338423, 0772067627.
கொழும்பு: 0114579017, 0773686948.

## யா/இணுவில் மத்திய கல்லூரி
தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை- 2010
சித்தியடைந்த மாணவர்களை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சித்தியடைந்த மாணவர்களின் விவரம்



அறிவழகன் அஜீவன் (171)



சிறீநாதன் சருபன் (169)



தர்மராஜா ருசாந்தன் (158)



பவளேந்திரன் நக்கீரன் (153)



ஸ்ரீ திருமுருக கதிர்காமநாதன் தர்சிகன் (152)



சோமசுந்தரம் கஜானன் (150)



சிவகுமாரன் நிதுஜா (149)



லிங்கேஸ்வரன் அதிசன் (148)



பரமானந்தபிள்ளை மைதிலி (145)



மகேந்திரம் லிந்துசா (143)



பபிதாஸ் தனுர்ஜன் (143)

### வெட்டுப்புள்ளிக்கு அன்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர் விவரம்

★ தர்மஜெகநாதன் வினிதன் 141
★ தங்கராசா விதுசன் 141

### 100க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர் விவரம்

★ கருணாகரன் கார்த்தீபன் 139
★ சிவலிங்கம் அஜந்தன் 138
★ சந்திரமோகன் மாறன் 137
★ கலைச்செல்வம் தேசிகன் 137
★ சதீஸ்குமார் கஜனன் 136
★ கிருபைநாதன் துளசிகா 129
★ கந்தையா சபீனா 125
★ திருச்செல்வன் வைஸ்ணவி 122
★ உதயதாசன் பிரிதா 122
★ ரட்ணசங்கர் சஞ்சீவன் 120
★ வரதராசா சுவஸ்திகன் 118
★ குணசேகரன் கிக்சன் 117
★ ஆறுமுகதாஸ் விஜிதா 116
★ சத்தியராசா சஜீவன் 115
★ பொன்ராசா வினுசன் 113
★ தயாபரன் லவனியன் 110
★ சசீந்திரராசா [illegible] 104
★ தெய்வேந்திர[illegible] 104

இம்மாணவச் செல்வங்களை கற்பித்து நெறிப்படுத்திய கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
இணுவில் மத்திய கல்லூரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருவருட் செல்வன் தாமோதரன் 160 புள்ளி



சண்முகம் பிரசாந் 149 புள்ளி

2010 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
வெளியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் தி.தாமோதரனையும்
யா/வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவன் ச.பிரசாந்தையும்
வீரபத்திரர் அருள்பெற்று கல்வியில் மேலும் சிறக்க
வாழ்த்தும்:
அப்பம்மா, அம்மம்மா
உசன் தெற்கு, மிருசுவில்.

25 ஆவது வருடம்
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வெள்ளிவிழாவை முன்னிட்டு

## மின்னல் வேக கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



உதயன் நிறுவனம் தனது வெள்ளிவிழாவையொட்டி யாழ்.மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.
இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் தமது அணியில் கலந்துகொள்ளும் வீரர்களின்/ வீராங்கனைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு 07.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அ'அட்டை வழங்கும் திட்டத்தை தொடக்கி வைத்தார் பிரதமர் மன்மோகன்



தெம்பில் (மராட்டியம்),ஒக். 1

இந்தியாவில் தேசிய அடையாள அட்டை வழங்கும் திட்டத்தைப் பிரதமர் மன்மோகன் சிங் தொடக்கி வைத்தார்.

இந்திய மக்கள் அனைவருக்கும் பல்நோக்குத் தேசிய அடையாள அட்டை வழங்க மத்திய அரசு முடிவு செய்தது. இந்தத் திட்டத்தின் தலைவராக இன்போசிஸ் நிறுவனத்தின் துணைத் தலைவரான நந்தன் நிலேகணி கடந்த 2009ஆம் ஆண்டு ஜுலை மாதம் நியமிக்கப்பட்டார்.

இந்த தேசிய அடையாள அட்டையில் சம்பந்தப்பட்டவரின் பெயர், புகைப்படம், கைரேகை, ஸ்கான் செய்யப்பட்ட கருவிழிப் படலம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருக்கும். மேலும் அந்த நபருக்கான 12 இலக்கங்கள் கொண்ட அடையாள எண்ணும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

முதல் கட்டமாக தேசிய அடையாள அட்டை வழங்கும் விழா மராட்டிய மாநிலம் நந்துர் பார் மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கும் தெம்பில் என்ற கிராமத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

விழாவில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொண்டு தேசிய அடையாள அட்டை வழங்கும் திட்டத்தைத் தொடக்கி வைத்தார். திட்டத்தைத் தொடக்கி வைக்கும் வகையில் பிரதமர் மன்மோகன் சிங்கும், ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியா காந்தியும் பழங்குடியினவாசிகள் 10 பேருக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து அந்தக் கிராமத்தில் உள்ள மற்றவர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது.

விழாவில் பிரதமர் மன்மோகன் சிங் கூறியவை வருமாறு -

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தேசிய அடையாள அட்டை வழங்கும் பணி தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் உலகில் வேறு எங்கும் இது போன்ற பெரிய அளவிலான திட்டம் செயற்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. தொழில் நுட்பத்தில் நாம் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறோம்.

இந்தியாவில் உள்ள அனைவருக்கும் தனித்தனி அடையாள எண்ணுடன் கூடிய தேசிய அடையாள அட்டை விரைவில் கிடைக்கும் என்று நம்புகிறேன். ஏழை மக்களுக்கு அடையாள அட்டை எதுவும் இருக்காது என்பதால் அவர்களால் வங்கிக் கணக்கை ஆரம்பிக்க முடியாது, குடும்ப அடையாள அட்டையும் பெற முடியாது.

இதனால் அவர்கள் அரசு வழங்கும் நல உதவிகளை முழுமையாகப் பெற முடியாத நிலை இருந்தது. தேசிய அடையாள அட்டை வழங்கப்படுவதன் மூலம் அந்த பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்.

சாதாரண மக்களுக்கு நலத் திட்டங்களின் பலன்கள் உரிய முறையில் கிடைப்பதற்கான ஒரு தொடக்கமாக தேசிய அடையாள அட்டை வழங்கும் திட்டம் அமைந்துள்ளது. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொடக்கம் ஆகும். இந்தத் தேசிய அடையாள அட்டையை வாழ்நாள் முழுவதும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பயன்படுத்திக்கொள்ள முடியும். - இப்படி அவர் கூறினார்.




ஒரிசாவின், புவனேஸ்வரில் மணல் சிற்பக்கலைஞர், சுபல் மகாராணா, கொமன் வெல்த் போட்டிகளை முன்னிட்டு உருவாக்கியுள்ள மணல் சிற்பம்.

## அமித் ஷாவின் நீதிமன்றக் காவல் எதிர்வரும்13ஆம் திகதி வரை நீடிப்பு

ஆமதாபாத்,ஒக்.1

சோராபுதீன் போலி என் கவுன்டர் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள குஜராத் முன்னாள் உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் நீதிமன்றக் காவல் அக்ரோபர் 13ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அமித் ஷா உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் அவர் சிறையில் இருந்தவாறே 'வீடியோ கொன்ஃபரன்ஸ்' மூலம் நீதிமன்றத்தில் ஆஜராக ஏற்கெனவே சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அந்த ரீதியில், அமித் ஷா, சபர்மதி சிறையில் இருந்து புதன் கிழமை 'வீடியோ கொன்ஃபரன்ஸ்' மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதையடுத்து அவரது நீதிமன்றக் காவலை அக்ரோபர் 13-ம் தேதி வரை நீடித்து நீதிபதி தேவ் உத்தரவிட்டார்.

அமித் ஷா, செப்ரெம்பர் 15ஆம் திகதியே நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது. ஆனால் அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. (ற)

இந்தியச் செய்திகள்

## விரியன் பாம்பை காலால் மிதித்து குழந்தையை காப்பாற்றிய நாய்

பனமரத்துப்பட்டி,ஒக்.1

பனமரத்துப்பட்டி அருகே குழந்தை இருந்த அறைக்குள் புகுந்த கட்டு விரியன் பாம்பை வீட்டில் வளர்த்த நாய் காலால் மிதித்து, எஜமானருக்கு காட்டி கொடுத்தது.

சேலம் பனமரத்துப்பட்டியை அடுத்த களரம்பட்டி தண்ணிகாடு பகுதியை சேர்ந்தவர் பாலசுப்ரமணியன் (வயது 43). என்பவருக்கு நிவேதிதா (13), நிரஞ்சனி(8) ஆகிய குழந்தைகள் உள்ளனர். நேற்றுமுன்தினம் நிவேதிதா வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது நிரஞ்சனி டி.வி.,பார்த்துகொண்டிருந்தார். அப்போது, 4 அடி நீளமுள்ள கட்டுவிரியன் பாம்பு, அறைக்குள் புகுந்ததை பார்த்து நிரஞ்சனி அலறினார். அவர்கள் வளர்க்கும் நாய் குழந்தையின் சத்தம் கேட்டு, அறைக்குள் வந்தது. கட்டுவிரியன் பாம்பை கண்ட நாய் குரைத்துக்கொண்டு நகர்ந்து செல்ல முயன்ற பாம்பின் தலை மீது தனது முன் காலை வைத்து அழுத்தி பிடித்துக்கொண்டது. நாயின் காலில் சிக்கிய பாம்பு வாலை வேகமாக அசைத்து ஆவேசமாக சீறியது. பாம்புடன் போராடிய நாய், வினோதமாக சத்தம்போட்டு வீட்டு எஜமானரை அழைத்துள்ளது. அதைக்கேட்டு ஓடி வந்த பாலசுப்ரமணியமும் மற்றவர்களும் கொடிய விஷம் கொண்ட கட்டுவிரியன் பாம்பை அடித்து கொன்றனர்.

பாலசுப்ரணியம் இது தொடர்பாக கூறுகையில் இப்பகுதியில் விவசாய நிலங்கள் நிறைய உள்ளதால், எலி, தவளை ஆகியவற்றை பிடித்துச் சாப்பிட நிறைய பாம்புகள் வருகின்றன. அவை சில நேரம் வீட்டுக்குள் நுழைந்து விடுகின்றன.இதுவரை வீட்டுக்குள் நுழைய முயன்ற மூன்று பாம்புகளை இந்த நாய் தடுத்துள்ளதுடன் வினோதமாக சத்தம் போட்டு, பாம்பு வருவதை எங்களுக்கு உணர்த்திவிடும். நாய் நன்றி உள்ள ஜீவன் என்பதை நிரூபித்துள்ளது என்றார்.(ற)

## நடுக்கடலில் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை சூடு!

### தமிழக நாளேடுகள் தகவல்



நாகப்பட்டினம், ஒக். 01

நாகை மீனவர்களின் படகு மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டு, மீனவர்களை பியர் பொத்தலால் தாக்கி விரட்டிய சம்பவம் மீனவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாகை, அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (வயது - 28) என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் ராஜேஷ் (வயது - 31), விஜய் (வயது - 25), குணசேகரன் (வயது - 22), கோபால் (வயது - 21), ஆறுமுகம் (வயது - 42) ஆகியோர் கடந்த 27ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றனர்.

கோடியக்கரைக்கு கிழக்கில் சேதுசமுத்திரத் திட்டப்பணிகள் நடக்கும் இடம் அருகே கடந்த செவ்வாயன்று இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப் பகுதியில் ரோந்து வந்த இலங் கைக் கடற்படையினர் மீனவர்களின் படகை நோக்கித் துப்பாக் கியால் சுட்டுள்ளனர். இதில் படகின் முன்பகுதி சேதமடைந்துள்ளது. இதனால் அச்சமடைந்த மீனவர்கள் கைகளை மேலே தூக்கி நின்றனர்.

படகிற்குள் இறங்கிய இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை பியர் பொத்தலால் தாக்கி, படகில் இருந்த இரண்டு மீன்பிடி வலைகள், 200 மீற்றர் கயிறு, ஜி.பி.எஸ். கருவி, ஒரு மொபைல் போன் ஆகியவற்றை பறித்துக் கொண்டு விரட்டியடித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கரை திரும்பிய காயமடைந்த மீனவர்கள் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இச்சம்பவம் நாகை மீனவர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### இலங்கைக்குக் கடத்தவிருந்த கடல் அட்டைகள் பறிமுதல்

இராமேஸ்வரம்,ஒக்.1

இலங்கைக்குக் கடத்துவதற்காக இராமேஸ்வரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஐந்து லட்சம் ரூபா மதிப்புள்ள கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இராமநாதபுரம் மரைன் பொலிஸ் டி.எஸ்.பி. தியாகராஜன் தலைமையில் பொலிஸார் நேற்றுமுன்தினம் அதிகாலை வேர்கோடு அருகே பூலித்தேவன் நகர் பகுதியில் சோதனை செய்தனர். அங்குள்ள ஒரு குடிசைக்குள் இலங்கைக்குக் கடத்துவதற்காக பதப்படுத்தி, பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஐந்து லட்சம் ரூபா மதிப்புள்ள 100 கிலோ எடை கொண்ட கடல் அட்டைகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.

சமீபத்தில், ஒரு கோடி ரூபா மதிப்புள்ள கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்ட வழக்கில், வில்லாயுதம் என்பவர் தேடப்பட்டு வருகிறார். இச்சம்பவத்தால், கடல் [illegible]

## ரொக்கெட் லோஞ்சர் குண்டு வெடித்து இளைஞர் மரணம்

சென்னை,ஒக்.1

நாகை மீன் ஏலக் கூடத்தில் ரொக்கெட் லோஞ்சர் வெடி குண்டை வெல்டிங் மூலம் பிரிக்க முயன்ற போது அது வெடித்து சிதறியதில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

வெல்டிங் பணி நடைபெற்ற இடத்தில் பிற்பகல் சுமார் 2.20 மணிக்கு பெரும் சப்தத்துடன் வெடி விபத்து ஏற்பட்டது. மேலும், வெடி விபத்து ஏற்பட்ட போது மீன் ஏலக் கூடத்தின் மேற்கூரையைக் கிழித்துக் கொண்டு ஒரு பொருள் கடலை நோக்கி சீறிப் பாய்ந்து சென்றதை அப்பகுதி மக்கள் கண்டுள்ளனர்.

சப்தத்தைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் உடனடியாக மீன் ஏலக் கூடத்துக்கு விரைந்தனர். மீன் ஏலக் கூடத்துக்கு மேற்குப்புறக் கரையில் உள்ள கடுவையாற்றில் (படகுகள் கட்டுமிடம்) ஒரு சடலம் மிதப்பது தெரிய வந்தது.

இதுகுறித்து தகவலறிந்த பொலிஸார் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று கடுவையாற்றில் மிதந்து கொண்டிருந்த சடலத்தை மீட்டனர்.

அப்போது இறந்து கிடந்தவர் கீச்சாங்குப்பத்தைச் சேர்ந்த திருமுருகன் (17) என்பதை அப் பகுதி மக்களும், அவரது உறவினர்களும் உறுதி செய்தனர்.

இவர் வெல்டிங் பணி நடைபெற்ற இடத்துக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த ஒரு விசைப் படகின் காவல் பணியில் ஈடுபட்டிருந்தார் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பிரபல இசையமைப்பாளர் சந்திரபோஸ் காலமானார்



சென்னை, ஒக.1

திரைப்பட இசையமைப்பாளர் சந்திரபோஸ் உடல்நலக் குறைவால் நேற்றுக்காலை காலமானார்.

சந்திரபோஸுக்கு கடந்த 2 மாதங்களுக்கு முன்பு கல்லீரல் மற்றும் சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டது. அதற்காக, அவர் சிகிச்சை பெற்று வந்தார். கடந்த 24 ஆம் திகதி அவருடைய உடல்நிலை மோசம் அடைந்தது. சிகிக்சைக்காக சென்னையில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் அவர் சேர்க்கப்பட்டார்.

வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்தும், அவருடைய உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. அவர் நினைவிழந்து, கோமாவில் மூழ்கினார். இதையடுத்து சந்திரபோஸை மேல் சிகிச்சைக்காக சென்னை பொதுவைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில் வைத்தியர்களின் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை சந்திரபோஸ் காலமானார்.

சென்னை மைலாப்பூரில் உள்ள அவரது வீட்டில் அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. மறைந்த சந்திரபோஸின் பூதவுடலுக்கு தமிழ்த் திரையுலகத்தினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

வி.சி.குகநாதன் இயக்கிய 'மதுரகீதம்' என்ற படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் சந்திரபோஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர் மாவட்ட வளம் - 2010

## கல்விப் பொதுத்தராதர மாதிரிவினாத்தாள் - 2010

ஆக்கம்:



திரு.கே.கே.குமாரசாமி
BA (Hons) Dip.in.Edu.
ஆசிரிய ஆலோசகர்-வலயக்கல்வி அலுவலகம், சம்மாந்துறை.

திரு.வே.யோகராசா
B.com., Dip.in.sp.Edu,
Dip.in.Psychology, SLTS
LEARNIUM, சாய்ந்தமருது-07.



## வரலாறு

### வரலாறு - 01 நேரம்: 1 மணித்தியாலம்

* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
* சரியான விடையைத் தெரிவுசெய்க.

01. இலங்கையின் வரலாறறைக் கட்டியெழுப்ப வரலாற்றாசிரியர்களுக்கு கல்வெட்டுக்கள் முக்கியமாக அமைவது,
   1) அவை அரசர்களினால் செதுக்கப்பட்டமையால்.
   2) நிகழ்வுகளுடன் சமகாலத் தகவல்களைக் கொண்டிருப்பதால்.
   3) மொழி ரீதியாக முக்கியத்துவம் பெறும் தகவல்கள் அடங்கியிருப்பதால்.
   4) சமயத்தலங்களுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் பற்றிக் கூறுவதால்.

02. ஆரிய மற்றும் தேசிய இன மக்களிடையே ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதில் வெற்றிகரமான நடவடிக்கை ஒன்றை எடுத்த இலங்கையின் முதலாவது ஆட்சியாளனாகபின்வரும் எம் மன்னனைக் கருதலாம்?
   1) பண்டுகாபயன். 2) துட்டகைமுனு.
   3) முதலாம் பராக்கிரமபாகு. 4) முதலாம் விஜயபாகு.

03. இந்தியாவின் பௌதிகத் தோற்றம் அதன் வரலாற்றின் மீது செல்வாக்குத்செலுத்தியுள்ளது. பின்வரும் எக்காரணத்தினால் அது முக்கியத்துவம் பெறுகிறது?
   1) சிந்து, கங்கை நதிகள். 2) கைபர், போலன் கணவாய்கள்.
   3) ராஜஸ்தான் தாாப்பாலைவனங்கள். 4) பாருகச்ச, தாமிரலிப்தி துறைமுகங்கள்.

04. அசோகன் கற்றூண்களில் மேற்பாகம் சிங்க முகத்தைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய கற்றூண்களைப் பின்வரும் எக்காரணத்திற்காக நிறுவினான்?
   1) தனது கலை இரசனையை நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்ட.
   2) தனது பலத்தையும் அதிகாரத்தையும் எடுத்துக்காட்ட.
   3) தனது அரச வம்சத்தின் மேன்மையை எடுத்துக்காட்ட.
   4) தனது சமய பக்தியை மக்களுக்கு எடுத்துக்காட்ட.

05. 'அ' நிலையில் உள்ள நபர்களை 'ஆ' நிரலில் உள்ள புதிய கண்டுபிடிப்புக்களுடன் ஒழுங்காகத் தொடர்புபடுத்தும்போது சரியான விடையாக அமைவது,

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1) தோமஸ் வெல். | A - நீராவி இயந்திரம். |
| 2) வில்லியம் சீமன்ஸ். | B - உருளை அச்சுப்பதிப்பு முறை. |
| 3) ஜேம்ஸ் வாட். | C - நீராவி புகைவண்டி என்ஜின். |
| 4) ஜோர்ஜ் ஸ்ரீவன்ஸ். | D - இரும்பு, உருக்கு மின்சூளை. |
| | E - விமானத் தயாரிப்பு. |
| | F - தொலைபேசி தயாரிப்பு. |

   1) BDAC 2) CBFD 3) CDEA 4) BACE

06. முதலாம் விஜயபாகு மன்னன், தான் அரசனானவுடன் உபசம்பத விழாவைத் தோற்றுவிப்பதற்கு வெளிநாட்டு பிக்குமாரை வரவழைத்தான். இந்த நாடு பண்டைக்காலத்தில் எப்பெயரால் அழைக்கப்பட்டது?
   1) சீனாதேசம். 2) ராமங்கதேசம். 3) தக்கிணதேசம். 4) பாரசீகம்.

07. நவீன பொறியியலாளர்களிடம் உள்ள உன்னதமான நீர்ப்பாசன முறையை புராதனகால கைவினைஞர்களும் கொண்டிருந்தனர் என்பதை எடுத்துக்காட்ட சிறந்த உதாரணம்,
   1) சம சாய்வாக அமைக்கப்பட்டுள்ள ஜோத கால்வாய்.
   2) மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் அணையைக் கட்டியபோது முன்பிருந்த கருங்கல் தொட்டியின சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டமை.
   3) அநுராதபுரத்தின் ரனமசு பூங்காவிற்கு திஸ்ஸவாவியில் இருந்து நீர் பெறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டமை.
   4) சிகிரியா கோட்டையை சுற்றியுள்ள நீர் அகழித் தொகுதி நிலக்கீழ் நீர்த்தொகுதியுடன் தொடர்புபட்டமை.

08. அநுராதபுர, பொலநறுவைக் காலங்களில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களின்போதும், வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களின்போதும் இலங்கையின் மலைப்பிரதேசம் (மலையரட்டை) பின்வரும் காரணங்களுள் எதனால் முக்கியத்துவம்பெற்றது?
   1) போர்க்கருவிகளை உற்பத்திசெய்யும் ஒரு பிரதேசம் என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றது.
   2) போர் முன்னணிகளுள் உணவு வழங்கும் பிரதேசம் என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றது.
   3) பாதுகாப்பளிக்கும் பிரதேசம் என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றது.
   4) மேலதிக சேனைகளைக் கொடுத்து உதவும் பிரதேசம் என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றது.

09. கண்டி இராச்சியம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறான கூற்று,
   1) கண்டிய சமூக அமைப்பில் விகாரைகளும், பிக்குமார்களும் முக்கிய இடம்பெற்றிருந்தனர்.
   2) பழக்கவழக்கங்களும், பாரம்பரியங்களும் கண்டிச் சட்டங்களாகக் கருதப்பட்டன.
   3) சட்டத்தின் முன் சகல மக்களும் சமமானவர்களாகக் கருதப்பட்டனர்.
   4) பொருளாதார நடவடிக்கை சாதி அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

10. கண்டி இராச்சியம் பின்வரும் எந்தப் பிரித்தானிய ஆளுநர் காலத்தில் சுதந்திரத்தை இழந்தது?
   1) பிரட்றிக் நோர்த். 2) தோமஸ் மெயிட்லண்ட்.
   3) ரொபர்ட் பிரவுண்ரிக். 4) ரொறிங்டன்.

11. சீனாவில் இருந்து ஐரோப்பா வரையிலான பழைய தரைமார்க்க வர்த்தகப் பாதையில் முக்கிய மத்திய நிலையமாக விளங்கிய நகரம் எது?
   1) கொன்ஸ்தாந்திநோபிள். 2) பக்தாத்.
   3) டில்லி. 4) பர்மா.

12. முற்காலத்தில் ''சிலுவைப் போர்'' எனப் பெயர்பெற்ற போர் பலவற்றிற்கு காரணமானதும் தறபோதைய உரிமை தொடர்பாக இரு நாடுகளுக்கிடையில் மோதல் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்ததுமான அந்த நகரத்தின் பெயர் என்ன?
   1) லிஸ்பன். 2) அலக்சாந்திரியா. 3) ஜெருசலேம். 4) மக்கா.

13. மகாகமவில் இருந்து அநுராதபுரம் வரையில் பண்டைய இலங்கையின் முதலாம் விஜயபாகு, துட்டகைமுனு போன்ற மன்னர்கள் பயணம் செய்த பாதையில் முக்கிய கேந்திர மையமாக விளங்கிய இடம்,
   1) காஜரகாமம். 2) தீகவாவி. 3) மகியங்கன. 4) புலத்திநகர.

14. புதிய அரச வம்சத்தைத் தோற்றுவித்தல், போர்த்துக்கீசருக்கு எதிராக கடுமையான நடவடிக்கையைப் பின்பற்றுதல், உள்ளூர்க் கைத்தொழிலை முன்னேற்றுதல் போன்ற விடயங்களில் முக்கியத்துவம் பெற்ற மன்னர்களில் ஒருவர்,
   1) 2ஆம் ராஜசிங்கன். 2) சிறிநரேந்திரசிங்கன்.
   3) கீர்த்திசிறி ராஜசிங்கன். 4) முதலாம் விமலதர்மசூரியன்.

15. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தினால் வரும் விடை,
   A - மனித உரிமைகளை வென்றெடுத்த பிரான்சியப் புரட்சி.
   B - போர்த்துக்கீசரின் இலங்கை வருகை.
   C - முதலாம் உலக யுத்தம்.
   D - துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றியமை.
   E - கலிலியோ கலிலி தொலைகாட்டியைக் கண்டுபிடித்தமை.
   1) DBEAC 2) DEBAC 3) DBACE 4) DEABC

16. யாப்பகூவ இலங்கையின் தலைநகரமாக இருந்த காலத்தில் வாழ்ந்த ஒருவர் கேட்டிருக்க முடியாத நிகழ்ச்சியைக் குறிக்கும் விடை,
   1) சிகிரியாக் கோட்டை நிர்மாணிக்கப்படுதல்.
   2) தூது இலக்கிய நூல்கள் தோன்றியமை.
   3) முல்லேரியாப்போர்.
   4) சந்திரபானு எனும் ஜாவா அரசனின் ஆக்கிரமிப்பு.

17. யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான பிழையான கூற்று எது?
   1) யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக நல்லூர் விளங்கியது.
   2) சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிராகக் கடும் நடவடிக்கையைப் பின்பற்றியது.
   3) யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியடைவதற்கு உள்நாட்டு அரசியல் முரண்பாடுகளே காரணமாகும்.
   4) போர்த்துக்கீசரின் ஆட்சி வரும்வரை யாழ்ப்பாண இராச்சியம் விஜயநகரப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்தது.

18. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் தக்கிண தேசத்து ஆட்சியாளனாக இருந்தபோது தனது ஆட்சி மையமாகத் தெரிவுசெய்த இடம் எது?
   1) யாப்பகூவ. 2) தம்பதெனியா. 3) பண்டுவஸ்நுவர. 4) கங்கசிறிபுர.

19. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவின் அரையிறுதிக் காலத்தில் பலம்வாய்ந்த பல பிரபல அரசுகள் தோற்றம்பெற்றன. பின்வருவனவற்றுள் அது எந்த நகரமாகும்?
   1) வஜ்ஜி. 2) மல்ல. 3) குரு. 4) மகதம்.

20. இந்தியாவில் அமைக்கப்பெற்ற 16 குடியேற்றங்களில் அநேகமானவற்றின் மன்னராட்சியே நடைபெற்றன. ஆனால், பின்வரும் எப்பிரதேசங்களில் சமூக உடைமையாட்சி நடைபெற்றது?
   1) அங்கதம், மகதம். 2) வத்சய, மல்ல.
   3) காந்தாரம், காம்போஜம். 4) வஜ்ஜி, மல்ல.

21. மக்கள் மனதை வென்ற நிர்வாகியாகவும், வேற்று மதங்களுக்கு மதிப்பளிக்கும் கொள்கையைக் கொண்டவனாகவும் விளங்கிய மன்னன்,
   1) பிம்பிசாரன். 2) முதலாம் சந்திரகுப்தன்.
   3) ஸ்கந்தகுப்தன். 4) அசோகன்.

22. முதன்முறையாக வரையறுக்கப்பட்ட வாக்குரிமைப் பலத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் குழு பின்வரும் எந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மூலம் சட்டவாக்கக் கழகத்தில் இடம்பெறறது?
   1) 1833 இன் கோல்புறூக். 2) 1910 மக்கலம்.
   3) 1921 மனிங். 4) 1931 இன் டொனமூர்.

23. நாட்டின் அடிப்படைச் சட்டங்கள் போன்று மேன்மையான உயர் சட்டம்,
   1) அரசியல் யாப்பு. 2) தண்டனைச் சட்டக்கோவை.
   3) தாபனக் கோவை. 4) உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கள்.

24. இலங்கை அரசியல் யாப்பிற்கு ஏற்ப தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக ஜனநாயகத்துக்கு உகந்த முறையில் முடிவினைப் பெறக்கூடியது,
   1) பாராளுமன்றத்தில் நிகழும் வாதப்பிரதிவாதம்.
   2) பொதுசன ஊடகங்கள் வாயிலாக பெறும் கருத்து.
   3) பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு. 4) உயர் நீதிமன்றத் தீர்ப்பு.

25. நிரல் I இல் இலங்கையின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களும், நிரல் II அவர்களைப் பற்றிய விவரமும், அவர்களைச் சம்பந்தப்படுத்துகிற நிகழ்ச்சியும் காட்டப்படுகிறது. நிரல் II இல் உள்ளதை நிரல் I உடன் பொருத்தும்போது வரும் சரியான விடை எது?

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A புத்ததாச அரசன் | F கரிகால சர்வக்ஞபண்டித என்ற பட்டம் பெற்றது. |
| B முதலாம் பராக்கிரமபாகு | G யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சிசெய்தான். |
| C 4ஆம் புவனேகபாகு மன்னன் | H ஒரு சிறப்பு வைத்திய நிபுணன். |
| D ஆரியச் சக்கரவர்த்தி வம்சம் | I தந்ததாதுவை இலங்கைக்குக் கொண்டுவந்தமை. |
| E 2ஆம் பராக்கிரமபாகு மன்னன் | J இலங்கையை ஐக்கியப்படுத்துதல். |
| | K இலங்காதிலக, கடலாதெனிய ஆகியவற்றைக் கட்டியவன். |

   1) I,G,H,J,K 2) H,J,K,G,F 3) H,I,J,K,F 4) J,I,H,F,K

26. தவுக்கண புத்தர், பராக்கிரமசிலை ஆகிய கலையாக்கம் செல்வாக்குச் செலுத்தியதாகக் கருதப்படும் இந்திய கலை மரபு பின்வருவனவற்றுள் எது?
   1) மதுரா பல்லவர். 2) காந்தார சோழர்.
   3) குப்தர் காந்தாரம். 4) குப்தர் சோழர்.

27. அநுராதபுர காலத்தில் நிலவிய சர்வதேச வர்த்தகத்தில் இலங்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டமைக்குக் காரணம்,
   1) அக்காலத்தில் சிறந்த கறுவாவை வழங்கியது.
   2) சர்வதேச பாய்மரக் கப்பலைப் பழுதுபார்க்கும் நிலையமாக விளங்கியது.
   3) மேலைத்தேய, கீழைத்தேய வர்த்தகர்கள் ஓய்வெடுக்கும் நிலையமாக விளங்கியது.
   4) வர்த்தகப் பொருட்களை பண்டமாற்றுச்செய்யும் இடமாக விளங்கியது.

28. ஊழல் நிறைந்த சர்வாதிகாரத்தையும் முதலாளித்துவ பொருளாதாரத்தையும் அளித்து பொதுநல உடைமைக் கூட்டாட்சியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட புரட்சி,
   1) ரஷ்யப் புரட்சி. 2) பிரான்சியப் புரட்சி.
   3) ஆங்கிலப் புரட்சி. 4) கைத்தொழிற்புரட்சி.

29. அரசியல், பொருளாதாரம், சமயம் போன்ற அனைத்துத் துறைகளிலும் சுதந்திரமாகச் செயற்படுவது,
   1) மானிடவாதம். 2) லிபரல்வாதம்.
   3) பொதுவுடைமை வாதம். 4) இளைய இத்தாலிய இயக்கம்.

30. கீழைத்தேய, மேலைத்தேய வர்த்தக நாடுகளின் தரைமார்க்க வர்த்தகம் தடைப்பட்டதன் முக்கிய காரணியாக விளங்கியது,
   1) சிலுவை யுத்தம்.
   2) கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாதல்.
   3) நிலமானிய முறையின் வீழச்சி. 4) புதிய கடல்மார்க்கத்தை நாடியமை.

31. கி.பி 11ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 15ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் ஐரோப்பாவில் இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவருக்கும் இடையில் யுத்தம் ஏற்படுவதற்குப் பிரதான காரணியாக அமைந்தது,
   1) சமயம், வர்த்தகம் தொடர்பான பிரச்சினை.
   2) நாடுகாண் பயணம் தொடர்பான பிரச்சினை.
   3) பாப்பாண்டவரின் ஆதிக்கம் தொடர்பான பிரச்சினை.
   4) வாசனைத் திரவியம் கொண்டுசெல்வதைத் தடுத்தல்.

32. இந்தியாவில் பிரித்தானியருக்கு எதிராக ஏற்பட்ட மிக மோசமான சிப்பாய்கிளர்ச்சி ஏற்பட்டது,
   1) கி.பி. 1857 2) கி.பி. 1856 3) கி.பி. 1855 4) கி.பி. 1875

33. சீனப் புரட்சியின் முக்கியமான கட்டங்களில் ஒன்றாக விளங்குவது,
   1) மேய்ஜி மறுசீரமைப்பு.
   2) கொமாண்டோ பியரி துறைமுகத்துக்கு வருதல்.
   3) மஞ்சு அரச வம்சம் அதிகாரத்தில் இருந்து நீக்கப்படல்.
   4) சீனாவில் சமாதானப் பின்னணி இல்லாமை.

34. 17ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் ஆசிய நாடுகளில் ஜப்பான் உலகின் பலம்வாய்ந்த நாடாக வளர்ச்சியடைந்தமைக்கான காரணம்,
   1) மேற்குலக நாடுகளுடன் கொண்டிருந்த பொருளாதாரத் தொடர்பு.
   2) தூரகிழக்கு நாடுகளுடன் மேற்கொண்ட வியாபாரம்.
   3) ஜப்பானின் மூடிய கொள்கை.
   4) துறைமுக வர்த்தக வசதிகள் கிடைத்தல்.

35. முதலாம் உலக யுத்தத்திற்கு மிகவும் உடனடிக் காரணியாக அமைந்தது,
   1) குடியேற்ற நாடுகள் தொடர்பான போட்டி. 2) வர்த்தகம் தொடர்பான போட்டி.
   3) கடலாதிக்கம் தொடர்பான போட்டி. 4) 1914 சரஜீவோ நிகழ்ச்சி.

36. முதலாம் உலக மகா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்,
   1) வின்ஸ்ரன் சேர்ச்சில். 2) முசோலினி.
   3) வுட்ரோ வில்சன். 4) ஹிட்லர்.

37. 2ஆம் உலக மகா யுத்தத்தின் பின் சோவியத் ஒன்றியம் எழுச்சிபெறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது,
   1) திறமைவாய்ந்த ஆட்சியாளரின் தோற்றம்.
   2) ரஷ்யா கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை.
   3) சோவியத் யூனியனின் பௌதீக வளம்.
   4) ஏனைய நாடுகளுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பு.

38. அமெரிக்கா உலக வல்லரசாக விளங்குவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது,
   1) ஜப்பானுக்கு எதிராகக் குண்டுவீசியதும், ஐக்கிய நாடுகள் சபைக்கு தலைமைதாங்கியதும்.
   2) உலக நாடுகளுக்கு எதிராக சமாதானத்தை முன்னெடுத்தமை.
   3) ஐக்கிய அமெரிக்கா கைக்கொள்ளும் சமவுடைமைப் பொருளாதாரம்.
   4) நேச நாடுகளைத் தம்மோடு இணைத்துக்கொள்ளுதல்.

39. உன்னதமான கலைத்திறனுக்கும் கட்டடக்கலை அமைப்பிற்கும் சிறந்த உதாரணமாக விளங்குவது,
   1) சிகிரியா கண்ணாடிச்சுவர். 2) ருவன்வலிசாய யானைச்சுவர்.
   3) கலிங்கல் தொட்டி. 4) அநுராதபுர குட்டம்பொக்குண.

40. இலங்கையை ஜனநாயக வழிக்கு இட்டுச்சென்ற கோல்புறூக் சீர்திருத்தத்தின் ஆலோசனை எது?
   1) இராசகாரிய முறையை ஒழித்தல்.
   2) சட்டவாக்கக் கழகம், சட்டநிர்வாகக் கழகம் அமைக்கப்படல்.
   3) நீதிமன்ற முறையை ஏற்படுத்துதல்.
   4) மலைநாட்டையும், தாழ்நாட்டையும் ஒன்றாக இணைத்தல். (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லையாக மாறிப்போன தொலைக்கல்வி தொலையுமா?

| | |
|---|---|
| பஸ் கட்டணம் | 2500/= |
| உணவுச் செலவு | 3000/= |
| காகிதாதிச் செலவு | 500/= |
| ஏனைய சிறு செலவுகள் | 1000/= |
| மொத்தம் | 7000/= |
| சம்பளம் | 3000/= |
| மேலதிகச் செலவீனம் | 4000/= |

இதென்ன வினோதமான கணக்கு வழக்கென்று யோசிக்கிறீர்களா? யாழ்.குடாநாட்டில் கடந்த வருடம் ஆசிரிய உதவியாளர்களாக உள்ளீர்க்கப்பட்டவர்களில் சராசரி மாத 'பட்ஜெட்டே' இது. சாதாரணமாக எந்தவொரு தொழிலாளிக்கும் மாதம் 3000 ரூபா சம்பளம் என்பது உச்சாணிக் கொப்பில் விலைவாசி ஏறி நிற்கின்ற இக்காலத்தில் தனி மனித சீவியத்திற்குக் கூட போதாது. கூலி வேலை செய்பவர்களுக்கே மாதாந்தம் 15ஆயிரத்துக்கும் அதிகமான சம்பளம் கிடைக்கும்போது, நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கவல்ல - ஒரு வைத்தியரை, பொறியியலாளரை, விஞ்ஞானிகளை உருவாக்கக்கூடிய - சிற்பிகள் எனப் போற்றப்படுகின்ற ஆசிரியர்களுக்கு சொற்பமான தொகை வேதனமாக வழங்கப்படுவது ஒரு வேதனையான விடயமே.

பல வருடங்களாக தொண்டராசிரியர்களாக - அதுவும் சிறுதொகை வேதனத்துக்கே - பணியாற்றிய 462 பேருக்கு நீண்டகால இழுபறியின் பின்னர், அவர்கள் பலமுறை தமக்கு நியமனம் தருமாறு சாத்வீகமாகப் போராடியதன் காரணமாக கடந்த வருடம் நியமனம் வழங்கப்பட்டது. அதுவும் 3000 ரூபா சம்பளத்துக்குத்தான். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் இவர்கள் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் விடுமுறை எடுக்கவேண்டி ஏற்பட்டால் அந்த நாளுக்குரிய சம்பளத் தொகையான 100 ரூபா வெட்டப்படும். கிட்டத்தட்ட ஒரு நாள் கூலி போலவே இவர்களுடைய வேதனம் கணிக்கப்படுகிறது. இத்தனைக்கும் ஏனைய ஆசிரியர்கள் செய்கின்ற பணிகள் அத்தனையும் - ஒப்படை, கணிப்பீடு போன்றவற்றை - இவர்களும் செய்யவேண்டியுள்ளது. ஆசிரிய உதவியாளர்களின் கற்பித்தல் நேரசூசி இடைவெளியின்றி நிரம்பி வழிகின்றது. ஓய்வெடுக்கவோ, ஒரு அவசரத்துக்குக்கூட விடுமுறை கோரவோ முடியாத நிலை இவர்களுக்கு. இந்நிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய தொலைக்கல்வி வாண்மைக் கற்கை நெறியைப் பயிலுமாறு வந்த அழைப்பினால் இவர்கள் நிறையவே இடிந்துபோனார்கள். ஒரு கற்கை நெறியைப் பயில்வது நல்லவிடயம்தானே. அதற்கேன் இவர்கள் தளர்ந்து போக வேண்டும் என்று நீங்கள் எண்ணு வது புரிகிறது. ஆசிரிய உதவியாளர்கள் தமது ஆதங்கத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டார்கள். அவர்களின் மனக் குமுறல்கள் இங்கே பகிரப்படுகின்றன.

சிரமங்கள் பல இருந்தபோதும் அவர்கள் நிரந்தரமாக ஆசிரிய சேவை தரத்துக்குள் உள்வாங்கப்பட்ட பின்னர் இத்தகைய இடையூறுகள் எல்லாம் மறைந்து போகும் என்ற காரணத்தால் சகித்துக் கொண்டார்கள். வழமையாகவே தொண்டராசிரியர் களாகப் பணியாற்றியவர்களை, ஆசிரிய உதவியாளர்களாக உள்ளீர்த்து, பின்னர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் ஊடாக அவர்களுக்குரிய மேலதிக தகைமைகளை வளர்த்து ஆசிரிய சேவைக்குள் உள்வாங்குவதே நடைமுறை. ஆனால் அந்த நடைமுறை குடாநாட்டில் கடந்த வருடம் பணிக்கமர்த்தப்பட்ட ஆசிரிய உதவியாளர்கள் விடயத்தில் பொய்த்துப்போயுள்ளது. ஆசிரிய கலாசாலை அனுமதி விரைவில் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தவர்களுக்கு தேசிய கல்வியியற் கல்லூரியில் தொலைக் கல்வி வாண்மை விருத்திக் கற்கை நெறியை பயிலுமாறு கோரும் அறிவிப்பே கிடைத்தது. இந்த அறிவிப்பு ஆசிரிய உதவியாளர்களின் கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையையும் ஒரே நொடியில் தகர்த்து விட்டது.

தொலைக்கல்வி வாண்மை விருத்திக் கற்கைநெறி என்பது காலாவதியாகிப்போன ஒரு கற்கைநெறி. அது கொண்டுள்ள பலவீனங்கள் காரணமாக 90களின் முற்பகுதியிலேயே நடைமுறையிலிருந்து காணாமல் போய்விட்டது. ஆசிரியர்களின் கற்றல் விருத்திக்கு எவ்வித பயனையும் அல்லது தனித்துவங்களையும் சேர்ப்பதற்கு குறித்த கற்கை நெறியானது தவறியமையே இதற்கு முக்கிய காரணம். இப்போது என்ன காரணத்துக்காக தொலைந்துபோனதாகக் கருதப்பட்ட இக்கற்கைநெறியைத் தூசு தட்டி எடுத்திருக்கிறார்கள் என்று புரியாமல் ஆசிரிய உதவியாளர்கள் தவிக்கிறார்கள்.

தொலைக்கல்வி வாண்மை விருத்திக் கற்கைநெறியைப் பயில்வதன் ஊடாக பல்வேறு சலுகைகளையும் இழப்பதோடு மேலும் மேலும் இடர்ப்பாடான வாழ்க்கை முறைக்குள்ளேயே ஆசிரிய உதவியாளர்கள் பயணிக்க வேண்டியிருக்கும். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உள்வாங்கப்பட்டால் பாடசாலைக்குக் கற்பிக்கச் செல்லாமல் அதே நேரத்தில் கற்கை நெறியை - வேதனத்தில் எவ்வித வெட்டுமில்லாமல் - பயின்று பூர்த்தி செய்ய முடியும். ஆனால் இந்தக் கற்கைநெறி அப்படியல்ல. வாரநாள்களில் பாடசாலைக்குச் சென்று கற்பித் தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு வார இறுதிநாள் களில் தொலைக்கல்வி வாண்மைக் கற்கை நெறியைப் பயில்வதற்காக கல்வியியற் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். இதற் காக மேலதிகக் கொடுப்பனவு எதுவும் கிடையாது. அத்தோடு குறித்த கற்கை நெறிக்கான மேலதிக அறிவு விருத்திக்காக நூலகத்துக்கோ அல்லது வேறேதேனும் அறிவுசார் நிலை யங்களுக்கோ வார நாள்களில் செல்ல வேண்டுமாயின் சம்பள மற்ற விடுமுறையிலேயே செல்ல வேண்டியிருக்கும். கிட்டத் தட்ட ஓயாது உழைக்கின்ற 'எந்திரர்களாக' அவர்கள் மாற வேண்டியிருக்கும். கற்பித்தல் நடவடிக்கையிலும், குறித்த கற்கை நெறியைப் பின்பற்றும் செயலிலும் தொடர்ச்சியாக இவர்கள் ஈடுபடும்போது மன உளைச்சல் காரணமாக இவர்களுடைய ஆசிரியத்துவபாங்கு உயர்வதற்குப் பதிலாக தேய் மானமடையவே அதிக சந்தர்ப்பம் உண்டு.

''ஆனால் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இவர்களுக்குரிய அறிவுத்திறன் ஊட்டப்பட்டு தொழில்முறைசார் ஆசிரியர்களாக இவர்கள் பயிற்றப்படும்போது பல நன்மைகள் கிடைக்கும். வேதனத்துக்கு எவ்வித பங்கமும் இல்லாமல் கலாசாலைக்குச் சென்று பயில முடிவதோடு குறுகிய காலத்திலேயே அவர்களுக்குரிய கற்கை நெறிகள் பூர்த்தியாகும். மேலும் ஆசிரியர்களுடைய கற்பித்தல் திறனை மாத்திரமல்லாது ஏனைய ஆற்றல்களையும் வளர்த்து அவர்களை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவது ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் பங்காற்றுகின்றன. அத்தோடு குறித்த நேரத்துக்கு சமூகமளித்தல், பாடவேளைகளில் பயிற்றுவிக்கப்பட்ட விரிவுரையாளர்களால் அறிவூட்டப்படல், 2 வருடத்துக்குள் பயிற்சியைப் பூர்த்தி செய்தல், என்பவற்றால் ஒரு நல்ல ஆசிரியனை கலாசாலை ஊடாக தோற்றுவிக்க முடியும். ஓய்வும் நல்ல மனோநிலையும்தான் ஒரு கற்கைநெறியினை கருத்தூன்றிப் பயில்வதற்கு மிக முக்கியமான ஏதுநிலைகள். ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஊடாக பயிற்றப்பட்டு வெளிவருவதே சிறந்ததென நான் எண்ணுகிறேன்.

இடவசதியின்மை, ஆளணி வசதியின்மை என்பவற்றாலேயே இந்த ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் கலாசாலைகளுக்கான அனுமதியை வழங்கவில்லையென்று எவரும் கூற முடியாது. ஏனெனில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கூட சென்ற வருடம் 300 மாணவர்கள் வரை பயின்ற இடத்தில் இவ்வருடம் 62 மாணவர்கள் மாத்திரமே பயில்கிறார்கள். எனவே புதியவர்களை அனுமதிப்பதற்கு இடவசதியோ, ஆளணி வசதியோ ஒரு இடையூறல்ல என்றே நான் நினைக்கிறேன்''. தொலைக்கல்வியைக் காட்டிலும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஊடான பயிற்சி நெறி ஏன் சிறந்தது என்பதற்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் என்.இக்னேசியஸின் கூற்றே சான்று பகிர்கின்றது.

எனவே தமது வாழ்நாளில் பெரும்பகுதியை தொண்டராசிரியராக சிறுதொகை வேதனத்தோடு கழித்துவிட்ட ஆசிரிய உதவியாளர்களுக்கு இனியாவது அவர்களுக்குரிய அங்கீகாரத்தை வழங்க வேண்டும். எவ்வித மனக்கசப்புகளும் அவர்களுக்கு உண்டாகாத வண்ணம் தொல்லைக்கல்வியாக மாறிப்போன தொலைக்கல்வி முறைக்குப் பதிலாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு தாம் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இன்னும் இரு நாள்களே அவகாசம் இருக்கின்றது. அதற்கிடையில் உரியவர்கள் இவர்களின் குரலுக்கு செவிசாய்ப்பார்களா? ஒக்ரோபர் 6இல் கொண்டாடப்படவுள்ள ஆசிரியர்தினப் பரிசாக 462 ஆசிரிய உதவியாளர்களுக்கும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அனுமதி கிடைக்குமா?

- ஒளண்யன்-

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வரலாறு - 02

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

கவனிக்குக:
- பகுதி I இன் முதலாவது வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுக்கும், பகுதி III இல் இருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

01. அ. கீழே 1 இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், 2 இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.
1) சூரகதித்த, நாற்சதுவக் குளம், உபதிஸ்ஸகம, ரந்தெனிவல, தம்புள்ள, வல்லிபுரம், குடிகந்த நதி, மகியங்கனை, சுகபெளவத, திபங்க பமுணுகம.
2) ஸ்டெப்பிஸ் புல்வெளி, இஸ்கே குடா, கீல் கால்வாய், அம்ஸ்ரெடாம், கள்ளிக் கோட்டை, யூப்ரட்டீஸ், தைக்றீஸ் நதி, இந்துக்குஸ் மலை, கொஸ்மஸ் தொடுகடல்.

ஆ. 1) கீழே A,B,C,D ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புபட்டுள்ளவர்களை ஒழுங்குமுறையாக உமது விடைத்தாளில் எழுதுக.
A - செய்லாவோ எனும் பெயரால் இலங்கையை அறிமுகம் செய்தவர்கள்.
B - அநுராதபுர காலப்பகுதியில் ஒலுவடு எனும் ஓட்டுக் கைத்தொழிலை அறிமுகம் செய்தவர்கள்.
C - 2ஆம் ராஜசிங்கன் ஆட்சிக்காலத்தில் கண்டியில் சிறைக் கைதியாக இருந்த போது இந்நாட்டின் சமூக, பொருளாதார பின்னணி பற்றிய நூலை எழுதியவர்.
D - கலாபளலு வாவிகளை ஒன்றிணைத்து பாரிய நீர்த்தேக்கத்தை உருவாக்கியவன்.
(அராபியர், ஆரியர், போர்த்துக்கீசர், ஜோன் பைப்பஸ், ரொபர்ட் நொக்ஸ், தாதுசேனன், மகாசேனன்)

2) கீழே A,B,C,D எனக் காட்டப்பட்டுள்ள கலைப்படைப்புக்களை முறையே குறிப்பிடுக.


A


B


C


D

3) கீழே A,B,C,D ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
A - மலையக இராச்சியத்தில் முதலாம் விமலதர்மசூரியனுக்குப் பின் ஆட்சிப் பீடமேறிய மன்னன் யார்?
B - மஹிந்த தேரரினால் இந்நாட்டில் பெளத்த மதம் பரப்பப்பட்டபோது முதல் பிக்குவாகத் துறவறம் பூண்ட அரச உயர் அமைச்சர் யார்?
C - கவிசிலுமின என்ற நூலை எழுதியதால் 2ஆம் பராக்கிரமபாகுவிற்கு வழங்கப் பட்ட பட்டப்பெயர் யாது?
D - கோட்டை இராச்சியத்தைத் தமது அதிகாரபூர்வ ஆட்சியின் கீழ்க் கொண்டுவர போர்த்துக்கீசர் 1597 இல் பிரதானிகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கை எவ்வாறு அழைக்கப்பட்டது?

### பகுதி II

02. 1) பின்வரும் குளங்கள் அமைந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகளை A,B,C ஒழுங்கில் குறிப்பிடுக.
A - குறுளுவாவி. B - கந்தளாய்க் குளம். C-நாச்சதுவக் குளம்.
2) ஆரியர் இலங்கையில் குடியேற்றத்தை அமைத்தபோது அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் 4 ஐக் குறிப்பிடுக.
3) இலங்கையில் புராதன நீர்ப்பாசனம் தொடர்பாக உயர் தொழில்நுட்பம் காணப்பட்ட விதத்தை இரண்டு உதாரணங்கள் கொண்டு விளக்குக.
4) பண்டைய தொழில்நுட்பவியலாளர்கள் சூழலை நேசிப்பவர்களாகக் காணப்பட்டார்கள் என்பதற்கான 2 உதாரணங்கள் தந்து விளக்குக.

03. 1) A - அரசனின் உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட கிராமங்கள்.
B - அரசனுக்காக நிறைவேற்றவேண்டிய சேவைகள்.
C - அரசனும் பிரதான அதிகாரிகளும் கொண்டமைந்த கண்டிய அரசசபை.
மேற்கூறப்பட்டவை எப்பெயரால் இனங்காணப்பட்டன என்பதை ஒழுங்குவரிசைப் படி எழுதுக.
2) ஆரம்ப காலத்தில் மேலைத்தேசத்தவர்களால் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றித் தமது ஆட்சியின் கீழ் அடிமைப்படுத்திக்கொள்ள முடியாமையில் செல்வாக்குச்செலுத்திய 2 காரணிகளையும், பின்னர் அதை அடிமைப்படுத்திக்கொண்டமை தொடர்பாக செல்வாக்குச் செலுத்திய 2 காரணிகளையும் தருக.
3) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கண்டி மக்களின் மிகுந்த வெறுப்புக்கு ஏன் உள்ளானான் என்பதை 2 காரணிகள் கொண்டு விளக்குக.
4) பல்வேறு ஐரோப்பிய படையெடுப்புக்களை எதிர்நோக்கியபோதும் கண்டி இராச்சியம் சமயம், கலாசாரம் பற்றிய விழிப்புணர்வு காணப்பட்ட விதத்தினை 2 விடயங்கள் மூலம் விளக்குக.

04. 1) கி.பி. 1848 இல் இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கண்டிய சுதந்திரப் போராட்டத்துக்கு உந்திய 3 தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2) அப்போராட்டத்திற்குப் பின்னணியாய் அமைந்த நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.
3) கி.பி. 1848 இல் கண்டிய சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கு ஏதுவான 2 காரணிகளை விளக்குக.
4) கி.பி. 1848 இல் 2 ஆவது கண்டிய சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்த பின்னர் அதனால் ஏற்பட்ட 2 விளைவுகளைத் தந்து விளக்குக.

05. 1) மத்தியகால ஐரோப்பாவில் காணப்பட்ட நிலமானிய முறையின் 3 பண்புகளைக் குறிப்பிடுக.
2) கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமானதால் உண்டான 2 பலாபலன்களை எழுதுக.
3) ஐரோப்பாவில் சமய சீர்திருத்தம் ஏற்பட்டதால் உண்டான விளைவுகள் 2 ஐக் குறிப்பிட்டு விளக்குக.
4) நாடுகாண் பயணத்தைத் தூண்டிய 2 அரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு பயணங்களுக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் 2 ஐ விளக்குக.

06. 1) ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் புரட்சிகளுடன் தொடர்பான சில ஆண்டுகள் தரப்பட்டுள்ளன. அவ்வாண்டுகளில் இடம்பெற்றுள்ள நிகழ்வுகளை எழுதுக.
I - 1789 II - 1917 III - 1817
2) பிரான்சியப் புரட்சிக்கு வித்திட்ட/மூலகாரணமாய் அமைந்த பிரான்சிய சமூகப் பிரிவினர்களுள் நால்வரைக் குறிப்பிடுக.
3) பிரான்சியப் புரட்சிக்கு வித்திட்ட உடனடிக் காரணிகள் 2 ஐச் சுருக்கமாக விவரிக்குக.
4) பிரான்சியப் புரட்சியின் பின்னர் அவர்களின் சிந்தனையின் விளைவாக ஏற்பட்ட விளைவுகள் 2 ஐ விளக்குக.

### பகுதி III

07. 1) மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய விஞ்ஞானிகள் மூவரைக் குறிப்பிடுக.
2) மானிய முறை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகள் 4 ஐக் குறிப்பிடுக.
3) ஐரோப்பாவில் நாடுகாண் பயணங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள் 2 ஐக் கூறி விளக்குக.
4) நிலமானிய முறையின் இலட்சணங்கள் மூன்றைக் குறிப்பிடுக. அவற்றை விளக்குக.

08. 1) ஐரோப்பாவில் உருவாகிய தேசிய அரசுகள் 3 ஐத் தருக.
2) தேசிய அரசுகள் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 4 தருக.
3) பிரான்சியப் புரட்சி உருவாகியமைக்கான பிரதான கட்டங்கள் பற்றி விளக்குக.
4) பிரான்சியப் புரட்சியின் விளைவுகள் 3 ஐக் கூறி விளக்குக.

09. 1) இந்தியாவின் சுதந்திரத்துடன் தொடர்புடைய வீரர்கள் தொடர்பான கூற்றுக்கள் கீழே A,B,C எனக் காட்டப்பட்டுள்ளன. இவர்கள் யார் என A,B,C என்ற ஒழுங்கில் குறிப்பிடுக.
A - இந்திய தேசிய சங்கத்தின் தோற்றுவிப்பாளர்.
B - ''இந்தியாவின் மேன்மையாளர்'' என அழைக்கப்பட்டவர்.
C - ''உலக அபிமானி'' எனும் நாமத்துக்குரியவர்.
2) சிப்பாய்க் கலகம் ஏற்பட்டமைக்கான அடிப்படைக் காரணங்கள் 4 தருக.
3) சீனாவில் மாவோசேதுங் என்பவர் கொம்யூனிசப் புரட்சி தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் 2 ஐ விளக்குக.
4) மெஜ்ஜி சீர்திருத்தத்தினால் ஜப்பானில் ஏற்பட்ட சாதகமான விளைவுகள் 3 ஐக் கூறி விளக்குக.

10. 1) பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய தலைவர்களை A,B,C என்ற ஒழுங்கில் குறிப்பிடுக.
A - ஜப்பானிய நகரங்கள் மீது அணுகுண்டு போடுவதற்கு கட்டளை பிறப்பித்த அமெரிக்க ஜனாதிபதி.
B - ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாயி நகரங்கள் மீது அணு குண்டு வீசப்பட்ட காலத்தில் அங்கு ஆட்சிசெய்த ஜனாதிபதி.
C - அணிசேரா அமைப்புக்காக பஞ்சசீலக் கொள்கையை வழங்கிய தலைவர்.
2) 2 ஆம் உலக மகா யுத்தத்திற்கான காரணங்கள் 4 ஐக் குறிப்பிடுக.
3) 2 ஆம் உலக மகா யுத்தம் ஏற்படுவதற்கு ஜேர்மனியத் தலைவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை இரு விடயங்களைக் கொண்டு விளக்குக.
4) ஐக்கிய நாடுகள் சபையின் பணிகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி அருணோதயாவுக்கு இரண்டு தங்கம்; ஒரு வெள்ளி

யாழ்ப்பாணம்,ஒக்.1

கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான 2010ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட தடகளப் போட்டியில் யாழ்.மாவட்டத்துக்கு இரண்டு தங்கப்பதக்கமும் ஒரு வெள்ளிப் பதக்கமும் கிடைத்துள்ளன.

முதல் நாள் இடம்பெற்ற 19 வயதுப் பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி எஸ்.தனுஷா 2.70 மீற்றர் உயரத்தினை பாய்ந்து முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார். அதே பாடசாலையைச் சேர்ந்த எஸ். ஜக்சனா 2.50 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து 2ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் 17 வயதுப்பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி பவித்திரா 2.50 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினை வென்றார். (த-23-86)

# 400 மீற்றர் தடை தாண்டலில் லக்காசினியின் சாதனை பதிவு

வலி.வடக்கு, ஒக்.1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான தடகளப் போட்டிகளின் அடிப்படையில் 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினியின் 1:13:6 செக்கன் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படைச் சாதனைப் பட்டியலைத் தயாரிக்கவுள்ளது.

2007ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ரி.செபமலர் 2:31:7செக்கனிலும், 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மேரி பெனினா 1:23:8 செக்கனிலும், 2010 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினி 1:13:6 செக்கனிலும் 400 மீற்றர் தடை தாண்டலை ஓடியுள்ளார்கள்.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினியின் 2010ஆம் ஆண்டு பெறுபேறான 1:13:6 செக்கன் என்ற சிறந்த பெறுபேறு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனைப் பட்டியலில் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

# உடுவில் கோட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

வலி.வடக்கு, ஒக்.1

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய போட்டிகளில் 07 பாடசாலைகளின் அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
* சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம் எதிர் புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.
* சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
* ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.
* சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.
* இணுவில் இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.
* ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் புன்னாலைக் கட் டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.
* சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.
* இணுவில் இந்துக் கல்லூரி எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம். (த-86)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

யாழ்ப்பணம்,ஒக்.1

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 14,16, 18,20 வயதுப் பிரிவு அணிகளின் சிநேகபூர்வ உதை பந்தாட் டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பணம்,ஒக்.1

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டங்கள் பருத் தித்துறை திக்கம் முனை மைதானத்தில் இடம்பெறும்.

ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**பி.ப 4 மணி** :- யங் லயன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கற்கோவளம் உதய தாரகை 'பி' விளையாட்டுக்கழம்.

**பி.ப 5 மணி**: கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி டயமன்ஸ் 'ஏ' அணி. (த-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# மகாஜனவுக்கும் தங்கம்



வலி.வடக்கு,ஒக்.1

தெலிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத் தில் இடம்பெற்ற 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தேவராசா மோகுநாத் 3.70 மீற்றர் தூரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் தேசிய மட்டத்தில் மகாஜனா தங்கப் பதக்கம் பெற்றமை கல்லூரிச் சமூகத்தை மிகவும் உற்சாகப்படுத்தியுள்ளது. (த-86-23)

# மகாஜன நூற்றாண்டு விழா; 6பேர் பங்குபற்றும் கிரிக்கெட்

வலி.வடக்கு, ஒக்.1

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் 6பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான கிரிக்கெட் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இப் போட்டிகளில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி.

கொக்குவில் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய 15 பாடசாலை அணிகள் இப்போட்டியில் கலந்து கொண்டு மோதவுள்ளன.

பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-86)

# நவாலி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாப் போட்டிகள்

யாழ்ப்பணம்,ஒக்.1

நவாலி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் வீதியோட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.


பாடசாலை மாணவர்களுக்கான 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியும், மாணவிகளுக்கான 10மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும், உள்ளூர் ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட அமரர் நாகர் மகேந்திரன் நினைவாக ஆண்களுக்கான 75 கிலோ மீற்றர் திறந்த சைக்கிள் ஓட்டப் போட்டி யும் இடம்பெறும்.

இந்தப் போட்டிகள் யாவும் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு பாடசாலை முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (த-26)

# பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவில் அலுவலராக அண்ணாத்துரை



வலி.வடக்கு.ஒக்1

இந்தியாவின் புதுடில்லியின் நடைபெறவுள்ள 19ஆவது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் அலுவலராக வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சின்னத்தம்பி அண்ணாத்துரை கலந்துகொள்ளவுள்ளார்.

இவர் கடந்த காலத்தில் மலேசியாவில் நடைபெற்ற உதைபந்தாட்ட நிர்வாகப் பயிற்சிலும், பாங்கொங்கில் இடம்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டி, கேரளாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டி, அண்மையில் பங்களதேஷில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டி ஆகியவற்றிலும் அலுவலராகக் கடமையாற்றியுள்ளார்.

பணிப்பாளர் அண்ணாத்துரை முதல் தடவையாக வட மாகாண விளையாட்டு அலுவலர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுச்சங்கங்கள், பிரதிநிதிகள் ஆகியோருக்கு தேசிய ஒலிம்பிக் குழுவினால் யாழ்ப்பாணத்தில் ஒலிம்பிக் நிர்வாகப் பயிற்சி நெறியை நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (த-186)

# கலட்டி ஐக்கியம், அல்வாய் நண்பர்கள் உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி

யாழ்ப்பணம்,ஒக்.1

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றிபெற்றன.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் கலட்டி ஐக்கியம், அல்வாய் நண்பர்கள் ஆகிய அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணியை 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



வடமாகாணப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணிகளின் படங்கள்.

19 வயதுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் இரண்டாம் இடத்தையும், பூப்பந்தாட்டத்தில் மூன்றாம் இடத்தையும் மென்பந்தாட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்ற அணிகளைப் படங்களில் காணலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-ஆஸ்திரேலியா மோதல் மொஹாலியில் இன்று ஆரம்பம்

மொஹாலி, ஒக். 01

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் ஆட்டம் பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் இன்று ஆரம்பமாகிறது.

2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் இந்திய அணியுடன் ஆஸ்திரேலியா விளையாடவுள்ளது.

வலுவான துடுப்பாட்டம், ஓரளவு சிறப்பான பந்து வீச்சைக் கொண்டுள்ள இந்திய அணியை, அதன் சொந்த மண்ணில் ஆஸ்திரேலியா எதிர்கொள்ளவுள்ளது.

இந்தியா சார்பாக ஷேவாக், டெண்டுல்கர், டிராவிட், கம்பீர், லக்ஷ்மன், டோனி ஆகியோர் துடுப்பாட்டத்தில் வலுச்சேர்க்கும் விதத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் சஹீர்கான், ஹர்பஜன் சிங், இஷாந்த் சர்மா ஆகியோர் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராகக் கடந்த போட்டிகளில் சிறப்பாக விளையாடியுள்ளனர். இது அணிக்குக் கூடுதல் பலம். ஹர்பஜன் பயிற்சியின்போது ஏற்பட்ட காயத்திலிருந்து குணமாகியுள்ளதால், முதல் போட்டியில் இடம்பெறுவார் எனத் தெரிகிறது.

ஆஸ்திரேலிய அணி கடந்த சில போட்டிகளில் அவ்வளவு சிறப்பாக விளையாடவில்லை என்றே கூறலாம்.

தரவரிசையில் முதல் இடத்தில் இருந்த அணி, இப்போது நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மேலும், இந்திய அணிக்கு எதிராக நன்கு அனுபவமுள்ள பந்து வீச்சாளர்களான மெக்ராத், வோர்ன், பிரெட் லீ ஆகியோர் அந்த அணியில் இல்லாதமை சற்றுப் பின்னடைவே.

எனினும், ஜோன்சன், வோட்சன், போலிஞ்சர் ஆகியோர் அவர்களின் இடங்களை ஈடுசெய்யக் கூடிய வகையில் விளையாடி வருகின்றனர்.

நடந்து முடிந்த சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த போலிஞ்சர், சிறப்பாகப் பந்து வீசியமை குறிப்பிடத் தக்கது.

பயிற்சி ஆட்டத்தில் வோட்சன், கடிச், நார்த் ஆகியோர் சதமடித்து அசத்தினர்.

ஹசி, கிளார்க், பொண்டிங் ஆகியோரும் சிறப்பாக விளையாடி வருகின்றனர். எனவே, இந்திய அணிக்கு நிகரான துடுப்பாட்ட வலிமையை ஆஸ்திரேலியாவும் கொண்டுள்ளது.

எனவே, இன்று தொடங்கும் போட்டி போராட்டங்கள் நிறைந்த ஒன்றாகவே காணப்படும். (12)



இந்திய - ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்கான கிண்ணத்தை அறிமுகம் செய்கிறார்கள் இரு அணியினதும் தலைவர்கள்.

## கொமன்வெல்த் ஆரம்ப விழாவில் 7,000 கலைஞர்கள்

புதுடில்லி, ஒக்.1

கொமன்வெல்த் போட்டிகளின் ஆரம்ப விழா 45 நிமிடங்கள் நடைபெறவுள்ளது. இதில் 7 ஆயிரம் கலைஞர்கள் பங்கேற்று கண்கவர் கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர்.

டில்லியில் நாளைமறு தினம் ஆரம்பமாகவுள்ள கொமன்வெல்த் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, கொமன்வெல்த் போட்டி அமைச்சர்கள் குழுக் கூட்டம் நேற்றுமுன் தினம் நடந்தது

இதன்போதே, ஆரம்ப விழா 45 நிமிடங்கள் நடைபெறும் எனவும், இந்த விழாவில், 7 ஆயிரம் கலைஞர்கள் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவார்கள் எனவும் கூறப்பட்டது.




# அணியில் இடம்பிடிப்பதற்காக சலுகைகள் பெற்றதில்லை-சச்சின்

சண்டிகர், ஒக். 01

''இந்திய அணியில் இடம்பெற இதுவரை எந்தச் சலுகையையும் நான் பெற்றதில்லை. கடின முயற்சியின் காரணமாகத்தான் அணியில் இடம்பிடித்துள்ளேன்.''

- இவ்வாறு இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான சச்சின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வெற்றி, தோல்வி இரண்டும் இணைந்ததுதான் வாழ்க்கை. இவற்றை நாம் கடந்துதான் செல்ல வேண்டும். கடந்த 20 ஆண்டுகளாக கடின முயற்சியுடன் கிரிக்கெட் விளையாடி வருகிறேன். இதனால்தான் இந்திய அணியில் நிலைக்க முடிந்தது.

அணியில் இடம்பிடிப்பதற்காக நான் எந்தச் சலுகையும் பெற்றதில்லை. எத்தனை ஆண்டுகள் விளையாடி வருகிறேன் என்பது முக்கியமல்ல. உடல் நிலையும், மனமும் ஒத்துழைக்கும் வரையில் விளையாட விரும்புகிறேன். சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக நான் விளையாடவில்லை. இந்திய அணிக்காக அதிக ஓட்டங் களைக் குவிக்கவே விரும்புகிறேன்.

- இவ்வாறு சச்சின் தெரிவித்தார்.



# 2018இல் உலகக் கிண்ணத் தொடரை நடத்த இங்கிலாந்து - ரஷ்யா இடையே கடும் போட்டி

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடத்த இங்கிலாந்து - ரஷ்யா இடையே கடும் போட்டி நிலவுகிறது.

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடத்துவது யார் என்பதைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பு, வரும் டிசம்பர் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

'பிபா' செயற்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 24 பேர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் நாட்டைத் தெரிவு செய்வார்கள்.

உலகக் கிண்ணப் போட்டியை நடத்தப் பல நாடுகள் போட்டி போட்டாலும், இங்கிலாந்துக்கும் ரஷ்யாவுக்கும் இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது.

இங்கிலாந்தில் 1966ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி நடந்துள்ளது. ரஷ்யாவில் இதுவரை உலகக் கிண்ணப் போட்டி நடந்ததே இல்லை.

இதனால், இந்த முறை எப்படியாவது வாய்ப்பைப் பெற்றுவிட ரஷ்யா முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்த 9 நாடுகள் களத்தில் உள்ளன. இதில் இங்கிலாந்து 67 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது. ரஷ்யா 66 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது.

போட்டிய்யை நடத்த விரும்பும் நாடுகளுக்கு 10 பிரிவுகளில் ஆய்வு நடத்தப்பட்டு அதில் ஒவ்வொரு பிரிவுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். வரும் டிசம்பர் 2ஆம் திகதி 2018 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் நாடுகளை 'பிபா'வின் செயற்குழு வாக்கெடுப்பு மூலம் தெரிவுசெய்யும்.




# ஐ.சி.சியின் விளம்பரத் தூதராக 3ஆவது முறையாகவும் சங்கக்கார

கொழும்பு, ஒக். 01

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரான குமார் சங்கக்கார மூன்றாவது முறையாகவும் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2010-2011ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சியின் விளம்பரத் தூதர்களாக ஆஸ்திரேலிய நடுவர் சிமோன் டௌபெல், இலங்கை வீரர் குமார் சங்கக்கார, இந்திய வீரர் ஷேவாக், இங்கிலாந்து வீரர் போல் கொலிங்வூட், ஆஸ்திரேலிய வீரர் மைக்கல் கிளார்க் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சங்கக்கார, டௌபெல் ஆகியோர் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஐ.சி.சியின் தூதர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.சி. சார்பாக செய்தியாளர்கள் கூட்டத்தில் பங்கேற்பது, சமூக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது, பயிற்சி வகுப்புகள் நடத்துவது, ஐ.சி.சியின் செயற்பாடுகளைப் பிரபலப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் இத்தூதர்கள் ஈடுபடுவர்.



# ஐ.பி.எல். குழுவிலிருந்து கவாஸ்கர் நீக்கம்

## டால்மியா மீதான மோசடி வழக்கு வாபஸ்

மும்பை, ஒக். 01

ஐ.பி.எல்.நிர்வாகக் குழுவிலிருந்து கவாஸ்கர் நீக்கப்பட்டுள்ளார். இந்தியக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் டால்மியா மீதான நிதி முறைகேடு வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது. இதற்கான முடிவுகள் இந்தியக் கிரிக்கெட் சபை பொதுக்குழுவால் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டன.

இந்தியக் கிரிக்கெட் சபையின் 81ஆவது ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் மும்பையில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் 2010-2011ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவரும், இந்தியக் கிரிக்கெட் சபைச் செயலாளருமான என்.சீனிவாசன் 3ஆவது முறையாக கிரிக்கெட் சபைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர் ஷசாங்மனோகர், பொருளாளர் பாண்டோவ், இணைச் செயலாளர் சஞ்சய் ஜக்டாலே ஆகியோர் 3ஆவது முறையாகத் தங்கள் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

அருண்ஜெட்லி (வடக்கு மண்டலம்), ஷிவ்லால் [illegible] (கிழக்கு), லலித்மோடிக்குப் பதிலாக ராஜீவ்சுக்லா (மத்திய மண்டலம்), நிரஞ்சன் ஷா (மேற்கு மண்டலம்) ஆகியோர் துணைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தலைவராகத் தொடர்ந்து நீடிப்பார். தேசிய கிரிக்கெட் அகடமித் தலைவராக ரவிசாஸ்திரிக்குப் பதிலாக கும்பளே நியமிக்கப்பட்டார்.

முன்னாள் தேர்வுத் குழுத் தலைவர் வெங்சர்க்கார் தலைமையில் கிரிக்கெட் மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், கொச்சி ஆகிய ஐ.பி.எல். அணிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த விதிமுறைகளை மீறியதாக இந்த அணிகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்படும்.

அதேவேளை, நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியை கல்கத்தா அணி, மொகாலியில் நடத்த மறுப்புத் தெரிவித்ததால், ஹைதராபாத்துக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது மற்றும் 3ஆவது ஒருநாள் போட்டிகள் முறையே ஜெய்ப்பூர் மற்றும் பரோடாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் நன்னீர் தீர்த்த உற்சவத்தன்று நடைபெற்ற அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின் முடிவுகளின் வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| 1 ஆம் இலக்கம் - 2452 | 6 ஆம் இலக்கம் - 2462 |
| 2 ஆம் இலக்கம் - 1645 | 7 ஆம் இலக்கம் - 956 |
| 3 ஆம் இலக்கம் - 2116 | 8 ஆம் இலக்கம் -1096 |
| 4 ஆம் இலக்கம் - 1142 | 9 ஆம் இலக்கம் -1964 |
| 5 ஆம் இலக்கம் - 2798 | 10 ஆம் இலக்கம் -1304 |

இவர்களுக்குரிய பரிசுகளை மேற்படி ஆலயமடத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம். என்பதனை அறியத்தருகிறோம்.

தலைவர் — ஏ.தனபாலசிங்கம். (சி-571477) செயலாளர் — கி.சண்முகநேசர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன்

**இந்திரகுமார் பௌசிகன்**

2010 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளுடன் மாவட்ட மட்டத்தில் 133 ஆம் இடத்தைப் பெற்ற இவர் கல்வியில் மேன்மேலும் சிறப்புற வாழ்த்திப் பாராட்டுவதோடு இவர் கல்வியில் சிறக்க கல்விகற்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் கல்வி கற்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, தம்பி, தங்கை, மச்சான், மச்சாள்மார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், அப்பம்மா, அம்மம்மா.

இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நந்தகுமார் கோமதி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**ந.துஷ்யந்தன்**

(சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

அவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதுடன் இவர் கல்வித்துறையில் மேலும் பல திறமைச் சித்திகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

ஐயனார் கோயிலடி, கொடிகாமம்.

வாழ்த்துவோர்: சுதா சித்தப்பா, மதி அன்ரா குடும்பத்தினர்.

# முதியோர் தினத்தின் தேசிய வைபவம் இன்று கொழும்பில்

யாழ்ப்பாணம்,ஒக்.1

சர்வதேச முதியோர் தினத்தைக் கொண்டாடும் தேசிய வைபவம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ''மிஹிலஹமதுர'' ஒன்று கூடல் மண்டபத்தில் சமூக சேவைகள் அமைச்சினால் கொண்டாடப் படுகிறது.

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சமூகசேவைகள் அமைச்சின் பிரதி அமைச்சர் சந்திரசிறி ஆரிய ஆராச்சி, செயலாளர் டபிள்யு யமுனா சித்ராங்கனி உட்பட பலர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் 300 க்கும் மேற்பட்ட முதியவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை முதியோருக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் ஜெ.கிருஸ்ணமூர்த்தி செய்துள்ளார்.(ஒ-10)

# சிறுவர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

சிறுவர் தினத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி உதயன் முன்பள்ளியில் சிறப்பு நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கத் தலைவர், சி.இராமலிங்கம், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் ரி.முகுந்தன் மேற்படி பிரதேச செயலரும் விசேட ஆணையாளருமான சி.சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொள்வர். சிறுவர்கள் பங்குபற்றும் உலக சிறுவர் தின நிகழ்வு வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் இன்று மு.ப. 10 மணிக்கு நடைபெற வுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை கரப்பிரான் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோம சிவகுமாரக்குருக்களும் தென்னிந்திய திருச்சபை ஆதீன வண. பிதா செபஸ்திரியன் அன்ரனியும் வழங்குவர். பிரதம அதிதியாக மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் கலந்து கொள்வார். (ஒ-313-315)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### 26 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் 2010 ஒக்ரோபர் 06

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 06ஆம் திகதி நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோர்க்கு கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்தில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச் சீட்டினையும் பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினையும் காண்பித்து கல்விக் கிளையில் பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

பட்டமளிப்பு வைபவத்தில் எடுக்கப்படும் புகைப்படத்திற்கான கட்டணமாக ரூபா 50 இனையும் (DVD) பிரதிகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர். அதற்கான கட்டணமாக ரூ 250 இனையும் காசாகக் கல்விக்கிளையில் செலுத்திப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

| Date | Time | Degrees |
|---|---|---|
| 2010.10.02 | 9.30 a.m. - 12.00pm | LLB, BFA, BA, BSc. |
| | 2.00 p.m. - 04.30pm | MBBS, BSc(Agri),PGD |
| 2010.10.03 | 9.30 a.m. - 12.00pm | BBA, BCom, BSc. (App.Sc), BSc.(Env.Sc.), BBM. (Vavuniya) |
| | 2.00 a.m. - 4.30pm | PhD.,M.Phil.,M.Ed, M.A (RP), MA (DS), MA (PDS). |

(c/571480)

30.09.2010 பதிவாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/உடுவில் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த

**செல்வன் கு.துவாரகன்**

2010 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 21 ஆவதாகவும் பாடசாலை மட்டத்தில் 03 ஆவதாகவும் அன்பொளி கல்வி நிலையத்தில் 02 ஆவதாகவும் சித்தியடைந்தமையைப் பாராட்டி மகிழ்வதுடன் அவர் மேலும் கல்வியில் பல சிறப்புகளையும் பெற்று சீருடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: உரிமையாளர் Pc Solve

சுன்னாகம்.

## ஷெல் சமையல் எரிவாயு விற்பனை நிலையம் காட்சியறை திறப்புவிழா

இலங்கையின் முன்னணி சமையல் எரிவாயு நிறுவனமான SHELL GAS LANKA Ltd வடமாகாணத்திலும் வாடிக்கையாளர்களுக்கு உயர்தரமான சேவையை வழங்கும் நோக்குடன் கடந்த 27.09.2010 அன்றிலிருந்து தங்களின் சேவை விரிவாக்கலை சுழற்சி முறையில் கிராமங்கள், நகரங்கள், பட்டினங்கள் ரீதியாக மேற்கொண்டு வருகின்றனர். வடமாகாண ஏக விநியோகஸ்தரான S.V. முருகேசு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஷெல்காஸ் நிறுவனத்தின் விநியோகக்கிளையும், காட்சியறையும் மங்களகரமாக இன்று (01.10.2010) வெள்ளிக்கிழமை மு.ப.10மணிக்கு

முன்னாள் வடவலய உதவிப் பொது முகாமையாளர் மக்கள் வங்கி

**திரு.T.K.ஆனந்தராசா**

அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

### மங்கள விளக்கேற்றல்

- ★ திரு S. பத்மநாதன் (மக்கள்வங்கி, பிராந்திய முகாமையாளர்,- யாழ்ப்பாணம்)
- ★ K.சுசிந்திரன் (உதவி பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
- ★ M. நாகேஸ்வரன் (பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
- ★ திரு V.S.முதலி (முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதான வீதிக்கிளை)
- ★ திரு.சுசந்த பெர்ணாண்டோ (பிரதேச விற்பனை முகாமையாளர், ஷெல்காஸ் லங்கா லிமிடெட்)
- ★ திரு. மணிலால் தென்னக்கோன் (விற்பனை நிறைவேற்று அதிகாரி, ஷெல்காஸ் லங்கா லிமிட்டெட்)
- ★ திரு S. கனகநாதன் (விற்பனைப் பிரதிநிதி- யாழ்பாணம். ஷெல்காஸ் லங்கா லிமிடெட்)

மங்கள விளக்கேற்று நிகழ்வுடன் இனிதே வாடிக்கையாளருக்காக திறந்துவைக்கப்படுகின்றது. விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

S.V.Murugesu நிறுவனம்
154 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



## யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலையின் முதல் வெற்றி மணிகள்

2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, 100 புள்ளிகளுக்கு மேல் மற்றும் 70புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவ மணிகளை உளமார வாழ்த்துக்கின்றோம்.

### வெட்டுப்புள்ளியில் சித்தியடைந்தவர்கள் விவரம்



பா.பிரார்த்தனா
168 புள்ளிகள்



தி.கேசகன்
157 புள்ளிகள்



அ.கஸ்தூரி
148 புள்ளிகள்



செ.பானுசா
147 புள்ளிகள்



ப.வராகினி
142 புள்ளிகள்

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விவரம்

| | | |
|---|---|---|
| த.யசோதா - 139 | கு.விதுசா - 123 | ச.ரூபிகா - 110 |
| அ. ச.சஹீதா - 138 | த.தனுசியா - 119 | உ. சுயாளினி - 108 |
| ர.தார்மீகன் - 138 | பா.ஜனனி - 117 | த. தீப்திகா - 108 |
| து.லக்சாகினி -136 | ர.கயூரிகா - 115 | அ. நிலுக்சனா- 106 |
| கு.தனுஷன் -129 | ச. பிரியங்கா - 114 | க. பிரதீபன் - 103 |
| ரா.அமணன் -129 | சு.தபோதினி - 112 | க. கம்சிகா - 101 |
| எ.சௌ.பிறின்சி - 128 | ச.நிதர்சன் - 112 | ப. சோபனா - 100 |
| த.ஜெனனி - 126 | ஆ.இந்துயா - 111 | |

### 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 37 மாணவர்கள்

ஆகியோரைக் கல்வியில் மேலும் சிறந்து விளங்கப் புத்தூர் சோமஸ்கந்தன் அருளை வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் வரையான பஸ்சேவை மேலும் இரு மாதங்களுக்கு நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.1

அரச பணியாளர்களுக்காக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து துணுக்காய் வரை நடத்தப்பட்ட இலவச போக்குவரத்துச் சேவை மேலும் இரு மாதங்களுக்கு நீடிக்கப் பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபை ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியுடன் நடத்திய பேச்சுக்களின் போது இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த நான்கு மாதங்களாக நடை முறையில் இருந்துவரும் இந்தச் சேவை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட் டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இதுவிடயமாக ஆளுநருடன் கலந்துரை யாடினோம். அதன்போது மேலும் இரு மாதங்களுக்கு இந்தச் சேவையை நீடிக்க ஆளுநர் இணக்கம் தெரிவித்துள் ளார் - என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-ஐ)

# ஆமையை வானில் கடத்திச் சென்ற நால்வருக்கு ரூபா 45 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.1

வடமராட்சிப்பகுதியில் பிடிக்கப்பட்ட ஆமையை ஏ-9 வீதியூடாகக் கடத்திச் செல்ல முற்பட்ட நால்வர் சாவகச் சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வானில் பயணித்த நால்வரையும் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சாவகச்சேி நீதிமன்ற நீதிபதி எம்.என்.எம்.அப்துல்லா 45 ஆயிரம் ரூபாவைத் தண்டப்பணமாக செலுத்துமாறு உத்தரவிட்டார் . (ஒ-16


## MORE VACANCIES

**Good Salary for Young team.**

SABINS No. 1 Modern Healthy Farm

**Veterinary Surgeon** – Full or Part time.

**CEO** - Management and 2 years minimum Poultry Farm experience.

**Secretary** – Young girl, English speaking with ComputerBasic, MS Office knowledge.

**Sales Manager** – with Trading Experience.

**Need more staff** – O/L or A/L with Poultry Farm experience - most welcome.

**Driver/ Security/ Servant girl.**

Please send the application with Photo to:

**Mr.Sabins Jeyasegara,**
"Pakia Illam", Pulavar Road, Navaly North, Navaly.

(103984) **Tel. No. 0778350478.**


## மரண அறிவித்தல்

### திருமதி இராமலட்சுமியம்மா

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவையைச் சேர்ந்த திருமதி இராமலட்சுமியம்மா அவர்கள் நேற்று (30.09.2010) வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகக்குருக்கள் அவர்களின் பாசமிகு மனைவியும் சுப்பிரமணிஐயர், திருமதி விசாலாட்சியம்மா, காலஞ்சென்ற கோமளாம்பிகையம்மா, மார்க்கண்டேயசர்மா (இளைப்பாறிய ஊழியர், அளவெட்டி-மல்லாகம் பலநேக்குக் கூட்டுறவுச்சங்கம்), காலஞ்சென்ற சச்சிதானந்தசர்மா, பரமேஸ்வரக்குருக்கள், வைத்தீஸ்வரசர்மா (பெருமாக்கடவை பிள்ளையார் கோயில்) ஆகியோரின் அன்புத்தாயாரும் இராஜராஜேஸ்வரியம்மா, பாலகுருசாமிசர்மா, சோமசுந்தரக்குருக்கள், பிறேமகுமாரி, கௌரியம்மா, சுந்தரேஸ்வரியம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2010) வெள்ளிக்கிழமை மாலை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(104060)

# சைவநெறிகளை அனுசரித்து வாழ்வோம்

நாம் ஒவ்வொரு காரியத்தையும் செய்யும்போது இறைவனை நினைத்து எடுத்த காரியம் எண்ணியபடி நிறைவேறவேண்டும் என வேண்டுதல் செய்து அக்காரியத்தை ஆற்றுவது எமது சமய மரபு. இறைவனை முன்வைத்துச் செய்யப்படும் எந்தக் கருமமும் நிச்சயம் நல்லபடி கைகூடும். இறைவனைச் சிந்தித்து கருமங்களை ஆற்றும்போது நல்ல வழிகளைக் கையாளுவோமே தவிர தீய வழிகளை நினைததும் பார்க்கமாட்டோம். இறைவன்மீது நமக்குப் பக்தி இருப்பதனால் உதவுவான் என்னும் நம்பிக்கை இருப்பதனால் நம்முடைய ஒவ்வொரு செயலையும், ஏன் சிந்தனையையும் சதா, இறைவன் கண்காணித்துக் கொட்டிருப்பதால் இறைவனுக்குப் பிடிக்காதவற்றை செய்ய நாம் துணிவதில்லை. அவ்வாறு கடவுளுக்கு விரோதமாக ஏதாவது செய்தால் நாம் என்றோ ஒருநாள் அதற்குரிய தண்டனையை அனுபவித்து ஆகவேண்டும் எனற கோட்பாட்டில் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் பயனே தீய செயல்களில் ஈடுபாடு கொள்ளாமல் இருத்தலாகும். இந்த வகையில் இறைசிந்தனை, இறைபக்தி, இறை நம்பிக்கை என்பவற்றைக் கொண்டிருப்பவர்கள் பாவங்களைச் செய்ய அஞ்சுகின்றனர்.

"அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்" என்பார்கள். குற்றங்களைக் கண்டு ஆராய்ந்து குற்றவாளிக்கு உடனுக்குடன் தண்டனை வழங்குபவன் ,அரசன். அதனால் குற்றங்களைக் கண்டு ஆராய்ந்து குற்றவாளிக்கு உடனுக்குடன் தண்டனை வழங்குபவன் அரசன். அதனால் குற்றச் செயல்களைக் குறைக்க முடிகிறது. சில சமயங்களில் ஏதாவது காரணங்களினால் குற்றவாளிகளுக்கு உடன் தண்டனை கிடைக்காமலும் போகலாம். ஆனால் தெய்வ தண்டனைக்கு எவருமே தப்பிவிட முடியாது. எவருடைய தனிப்பட்ட செல்வாக்கும், தவறான வழியில், தெய்வத்தின் சந்நிதியில் ஈடுபடாது என்பது உண்மை. தெய்வ நீதி என்றும் சரிந்தது இல்லை சரியப் போவதும் இல்லை. தெய்வத்திற்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதம் இல்லை. தெய்வத்தின் முன் எல்லோரும் சமம். தெய்வம் தான் நீதி; நீதிதான் தெய்வம். எனவே நீதியின் முன் எல்லோரும் சமம் என்று கொள்வதே சைவநீதி.

## ஞானக்கதிர்

சைவநெறி நிற்போர், சைவக் கோலத்தில் மறைந்துகொண்டு தீய செயல்களை செய்யாதிருத்தல் மிக அவசியம். சிவ சின்னங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் ஆகாது. மறைந்தொழுகும் மாந்தர்களாகச் சைவ மக்கள் இரட்டை வாழ்வு வாழ்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் அவசியம். கூடாவொழுக்கம் புரிந்து கொண்டு திருக்கோயில் செல்வதினாலோ பெருந் தொகைப் பணத்தை அங்கு செலவு செய்வதினாலோ, தீர்த்த யாத்திரைகள் மேற்கொள்வதினாலோ பாவங்களைத் தீர்த்துவிடலாம் என எண்ணுவது அறிவுடமையாகாது. இரும்பைத் தின்றுவிட்டு இஞ்சித் தண்ணீரைக் குடித்தால், இரும்பு சமிபாடு ஆகப்போவதில்லை.

சைவர்கள் எப்பொழுதும் சைவ நெறிப்படி சைவ நீதியை அனுசரித்து வாழ வேண்டும். அதற்கு இறையுணர்வோடு, இறை பக்தியோடு, இறை நம்பிக்கையோடு கருமம் ஆற்றுதல் அவசியமாகின்றது. இறைவனோடு வாழ்கின்றோம் என்ற உணர்வு ஏற்படும் பட்சத்தில் எம்முடைய ஒவ்வொரு சிந்தனையும், பேச்சும், செயலும் நல்லதாகவே அமையும் என்பது உறுதி.

# ஆளுநர் விருது இம்முறை புத்தூர் இளையகுட்டிக்கு

யாழ்ப்பாணம்,ஒக.1

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாண சபையின்அனுசரணை யுடன் ஆண்டுதேறும் வழங்கும் விருதில் இந்த ஆண்டுக்கான ஆளுநர் விருதை கவிஞர் புத்தூர் வே.இளையகுட்டி பெறுகின்றார்.

ஒருவர் வாழ் நாளில் கலை, இலக்கியப் பண்பாட்டுத்துறைக்கு பங்காற்றிய ஆளுமைக்காக இவ் விருது வழங்கப்படுகிறது.

இந்த விருது வ்ழங்கும் நிகழ்வு எதிர் வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறும் தமிழ் இலக்கிய விழாவில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# தொல்புரம் விக்னேஸ்வரா நிறுவுநர் தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு நிறுவுநர் தினமும் பரிசு நாளும் அதிபர் சி .கணேசானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினர்களாக திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக் களத்தின் பிரதிப் பணிப்பாளர் ச.க. குசல குமாரனும், உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தின் வரிமதிப்பாளர் திருமதி ராதா குசலகுமாரனும் கலந்துகொள்வர்.

தொல்புரம் முத்துமாரி அம்மன் தேவஸ்தான சிவஸ்ரீ சு.சுந்தாரராஜக்குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

## ஆதவனின் குழந்தைகள் வாழ்கவே!

சின்ன விழி அசைத்து
சிங்கார நடைநடந்து
பள்ளிவரும் பிள்ளைகளே !
பல்கலைகள் பயின்று நீங்கள்
பண்பு மிகு பிள்ளைகளாய்
பார்போற்ற வாழ்கவென
ஐப்பசி ஒன்று தனில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
வாழ்க வாழ்க வாழ்கவே!
வையகம் போற்றிட வாழ்கவே!

முன்பள்ளிச் சமூகம்,
கிளி/ ஆதவன் முன்பள்ளி, கிளிநொச்சி

(சி/571497)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை (சித்திரபாடம்)

**செல்வி சி.யோகேஸ்வரி**

இலங்கை கல்வி அமைச்சினால் திறமை விருது வழங்கிக் கல்வியமைச்சில் 08.10.2010 இல் கௌரவிக்கப்படவுள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
இணுவில் மத்திய கல்லூரி, இணுவில்.

[சி/571465]


## விற்பனைக்கு

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியில் இரண்டு பரப்புக் காணி யில் அமைந்த பெரிய வீடு (69 லட்சம்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : S.பிறேம்
**Tele : 0772231096**

## தேவை

ஆங்கில மருந்தகத்தில் வேலை செய்வதற்கு ஆங்கில மருந்தகத்தில் வேலைசெய்து அனுபவம் உள்ள Bio படித்த பெண் பிள்ளை தேவை.

தொடர்பு: 0771158911

Duration 1 Month **Job Opportunity Course** For Just Rs. 2500.00

## Certificate in Personality Development

### ஆளுமையை விருத்தி செய்யும் பயிற்சி நெறி

இப்பயிற்சி நெறியானது Interview வை எவ்வாறு எதிர்கொள்வது அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது, அலுவலகத்தில் பேசக்கூடிய English பயிற்சிகள், Computer பயிற்சிகள் என பல விடயங்களை உள்ளடக்கியது.

இன்று எமது பிரதேசத்தில் எத்தனையோ வங்கிகள், நிறுவனங்கள் தமது கிளைகளை திறந்தும் தகுதியானவர்களை இனம்காண முடியாத காரணத்தினால் பல திறமைசாலிகளின் வேலைவாய்ப்பு அவர்களைவிட்டு கைநழுவியது. இவற்றிற்கு காரணம் நீங்கள் நேர்முகத் தேர்வினை சரிவர மேற்கொள்ளாததே ஆகும். ஆங்கிலப்புலமையும், ஆளுமை விருத்தியுமின்றி தனியே பட்டங்களையும், சான்றிதழ்களையும் வைத்து இன்றைய நவீன உலகில் வேலை கிடைத்துவிடுவதில்லை. ஆகவே எமது இக் கற்கைநெறியிலே இணைந்து பயன்பெற்று உங்களுக்கான நல்ல தொழில் வாய்ப்பை உறுதி செய்துகொள்ளுங்கள்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திலிருந்து பங்குபெறுபவர்களுக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
[illegible] 0777585913/0714299935

Batch - 1: 10-10-2010 @ 10.00am
Batch - 2: 16-10-2010 @ 10.00am

Objectives: How to face an interview, how to answer the questions correctly how to prepare yourself for an interview, Spoken English for office use, Computer applications for office use, etc.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயோத்தி நிலம் முத்தரப்பினருக்கும் சொந்தம் மேன்முறையீடு செய்ய 3 மாத கால அவகாசம்

## அலகாபாத் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

புதுடில்லி, ஒக். 01

அயோத்தி, இராமஜென்ம பூமியில் சர்ச்சைக்குரிய நிலம் யாருக்குச் சொந்தம் என்ற வழக்கின் தீர்ப்பை அலகாபாத் உயர்நீதிமன்றம் நேற்று வழங்கியது.

நீதிபதிகள் 3 பேரும் தனித்தனியே தீர்ப்பு வழங்கினர். நிலத்தைப் பிரித்து இரு தரப்புக்கும் வழங்க 2 நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். நிலத்தில் கோவில் கட்ட அனுமதிக்க ஒரு நீதிபதி தீர்ப்பு வழங்கினார். இதனையடுத்து 3 மாதங்களுக்கு நிலம் மத்திய அரசிடமே இருக்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேன்முறையீடு செய்வதற்கு மூன்றுமாத கால அவகாசமும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிலத்திற்கு உரிமை கோரிய சன்னி மத்திய வக்பு வாரியம் மற்றும் நிர்மோகி அகாரா அமைப்பு ஆகியவற்றின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பாபர் மசூதி இருந்த இடமான 2,400 சதுர அடி நிலம் மூன்றாகப் பிரிக்கப்படும். இதைப் பிரித்து மூவரிடம் வழங்கும் வரை இப்போது இருக்கும் நிலையே, அதாவது மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

மசூதியின் மையப் பகுதி அமைந்திருந்த இடத்துக்குக் கீழே உள்ள இடம் இராமர் பிறந்த இடம் என்பதால், அந்த இடத்தில் கோவில் கட்ட இராமர் கோவில் குழுவுக்கு அனுமதியளிக்க வேண்டும் என்றும், மீதமுள்ள இடத்தை அங்கு சிறிய கோவில் கட்டியிருந்த நிர்மோலி அகராவிடமும் பாபர் மசூதி குழுவிடமும் பிரித்து வழங்கவேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தீர்ப்பு அளித்த 3 நீதிபதிகளின் மற்றும் அவர்களின் வீடுகளுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நீதிபதிகள் டி.வி.சர்மா, சுதிர் அகர்வால், எஸ்.யு.கான் ஆகியோர் அடங்கிய குழு தான் நேற்று அயோத்தி தீர்ப்பை அளித்தது.

நீதிமன்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள், பொதுமக்கள், செய்தி சேகரிக்க செல்லும் பத்திரிகையாளர்கள் நீதிமன்றத்துக்குள் நுழைய கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ஏற்கனவே ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தீர்ப்பை வழங்கிய மூன்று நீதிபதிகளில் ஒருவரான டி.வி.சர்மாவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைகிறது. நீதிபதி நேற்றுடன் ஓய்வு பெறுகிறார்.

## வெலிக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டையிலுள்ள கடற்படைத் தலைமை அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொன்சேகா வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நேற்றுக் காலை 10 மணி முதல் பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்கள் அங்கு காத்திருந்தார்கள்.

இரவு 9 மணிவரை காத்திருந்த அவர்கள் அங் கிருந்து அகன்று சென்றதும் சன சந்தடியின்றி பொன்சேகா நேற்றிரவு 10 மணியளவில் வெலிக்கடைச் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

## சுண்ணக்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்காகக் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை தாம் நேரடியாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டதாக அரச அதிபர் கூறினார்.

குறிப்பிட்ட பிரதேசங்களில் இதுவரை காலமும் சுண்ணக்கல் அகழப்பட்டது உண்மை என்றும் எனினும் தற்போது அகழும் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அகழ்ந்து எடுக்கப்பட்ட சுண்ணக்கல் அந்த இடங்களிலேயே காணப்படுகின்றன என்றும் அவற்றைத் தெற்கே எடுத்துச் செல்வதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த விவகாரம் குறித்து கடந்த மாதம் 21ஆம் திகதி பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

## பிறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு பதிவுகள் யாவற்றையும் கணனி மயப்படுத்து வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதன் பிரகாரம் 1960ஆம் ஆண்டுக்குப் பின்னரான பிறப்பு, இறப்பு, விவாக மற்றும் காணிப்பதிவுகள் யாவும் நேற்று முதல் கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளுக்காக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதிகாரிகள் இங்கு வருகைதந்துள்ளனர்.

பதிவுகள் அனைத்தும் இரண்டு மாதங்களுக்குள் கணனி மயப்படுத்தப்பட்டுவிடும் - என்றார். (ஒ-9)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக வாழ்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்த சரத் பொன்சேகாவுக்கு இந்த அரசு சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. அத்தண்டனையை ரத்துச் செய்யுமாறு மகாநாயக்க தேரர்கள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துவிட்டார்.

பொன்சேகா மீதுள்ள தனிப்பட்ட கோபமே இந்த நிலைக்குக் காரணம். பொன்சேகாவை விடுதலை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி பல நடவடிக்கைகளை எடுக்கும். முதற்கட்டமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு தொம்பேயில் சமய நிகழ்வொன்றை நடத்தவுள்ளோம். இதில் ஜனநாயக விரும்பிகள் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

வடக்கில் யுத்தம் முடிந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. ஆனால், அங்கு வடமாகாணசபைத் தேர்தலை நடத்த இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கிழக்கில் யுத்தத்தை முடித்து ஒரு மாதத்தில் அங்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும் என்றால் ஏன் வடக்கில் நடத்த முடியாது?

வடக்கில் உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடத்தி அம்மாகாண மக்களின் அரசியல் உரிமையை அரசு பாதுகாக்க வேண்டும் - என்றார். (சி)

## நீதிமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரத்தில் கட்டிவைத்த அமைச்சருக்குத் தண்டனை இல்லை. நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து சுதந்திரத்தைக் கொண்டு வந்த பொன்சேகாவுக்குச் சிறைத்தண்டனை. இது பெரும் அநியாயம்.

இந்தத் தீர்ப்பை ஏற்கமுடியாது. இதற்கு எதிராக நாம் நீதிமன்றம் செல்வோம். பொன்சேகாவின் எம்.பி. பதவியைப் பாதுகாப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம். அதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவுள்ளோம்.

நாம் இந்தத் தீர்ப்பைப் பார்த்து பின்வாங்கப் போவதில்லை. பொன்சேகாவை மீட்பதற்காகத் தொடர்ந்து போராடுவோம். மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொன்சேகாவை விடுவிப்பதற்கான எமது பயணத்தில் இணையவேண்டும்.

இந்த நாட்டில் இப்போது காட்டுச் சட்டம் ஒன்றுதான் நடைமுறையில் இருக்கின்றது. ஜனநாயகம் அழிந்துவிட்டது. நாம் இந்த ஆட்சியில் இழந்துள்ள ஜனநாயகத்தை மீட்க வேண்டும்.

தேசத்துரோகிகள், பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டோர் அமைச்சர்களாக இருக்கின்றனர். பயங்கரவாதத்தை ஒழித்தவர் சிறையில் இருக்கின்றார். இதுதான் இந்த நாட்டின் ஜனநாயகம். (சி)

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக் கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கி யதை உத்தியோகபூர்வமாக ஊட கங்களுக்கு அறிவிக்கவென இராணுவப் பேச்சாளர் இந்த செய்தியாளர் மாநாட்டுக்கு வந்திருந்தார்.

தண்டனைக்கு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கியமை குறித்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது கூறியவை வருமாறு:-

இரண்டாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும். தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பார். அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் இவ்விடயம் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இராணுவ சேவையில் இருந்தபோது இராணுவ ரெண்டர் வழிமுறைகளுக்குப் புறம்பாகச் சென்று மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகள் இரண்டாவது நீதிமன்றத்தில் இடம்பெற்றன.

அதில் சரத் பொன்சேகாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் அவர் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டதுடன், அங்கு 30 மாதங்கள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. அந்தத் தண்டனைக்கு ஜனாதிபதி 29ஆம் திகதி ஒப்புதல் வழங்கினார்.

சரத் பொன்சேகாவுக்கு எதிராக இராணுவச் சட்டத்தின் இல. 109 (இ) பிரிவின் கீழ் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டார் என்பதன் கீழ் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. (உ-சி)

## சென்றவேகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையோடு மீண்டும் பாடசாலை உரும்பிராயில் உள்ள பாடசாலையின் பழைய கட்டடத்துக்கே வந்துசேர்ந்தது.

"பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு ஜனவரியில் கையளிப்போம். அதன் பின்னர் பாடசாலையை இயக்குங்கள்" என்று படைத்தரப்பு தெரிவித்துவிட்டது.

அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிதி மற்றும் படையினரின் நிதி ஆகியவற்றுடன் பாடசாலை புனரமைக்கப்படவிருக்கின்றது. அதன் பின்னரே பாடசாலையைச் சொந்த இடத்தில் முழுமையாக இயக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ-86)

Model PAPER CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்
02.10.2010 சனி

DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
பாடம்,பிரிவு மாறிப்படிக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவு
ஆரம்பம்
02.10.2010 சனி

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
யூனிவேர்சல் யா/இந்துமகளிர் கல்லூரி அருகே

இந்து நாகரிகம் T.ஸ்ரீஸ்
A/L - 2011
(Sat, Sun : 9-10 A.m)
A/L - 2012
(Sat, Sun : 10-11 A.m)

வரலாறு R.R.ஆனந்தன்
A/L - 2011
Paper Class
(Sat, Sun : 10-11 A.m)
A/L - 2012
(Sat, Sun : 11-12 A.m)

ஆரம்பம் : 02.10.2010 சனிக்கிழமை
தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
2011இல் தரம் 4 (தற்போது தரம் 3)
மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
காலம் :- 10.10.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணி
அனுமதிகளை 10.10.2010 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளுங்கள்.
சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்

Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
★ டிசெம்பர் மாத ஜேர்மன் தூதரக பரீட்சைக்குரிய புதியவகுப்புகள் 02.10.2010 சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
Vivekananda Academy
(Centre for International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
பொருளியல் - திரு.N.B. கஜீதரன்
நாளை ஆரம்பம்
A/L 2011
Model Paper Class
புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது ஆரம்பம்
02.10.2010 சனி 10 மணி
A/L 2012 சனி, ஞாயிறு 12 மணி.

விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
அரசறிவியல் - திரு.ஸ்ரீரங்கநாத்
நாளை ஆரம்பம்
A/L 2011
துரித மீட்டலும் கடந்த கால வினா விடைகளும் Sat/Sun 9 மணி
A/L 2012
Sat./Sun 10 மணி ஆரம்பம் 02.10.2010 சனி

புதிய ஆரம்பம்
A/L 2011, 2012, PaperClass, DayClass
நாடக அரங்கியல் திரு.S.சுகந்தன்
வரலாறு திரு.S.ஸ்ரீ
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
இவ் முன்னணி ஆசிரியர்கள் யாழ்நகரில் எமது நிறுவனத்தில் மாத்திரமே.
யூனிவேர்சல் யா/இந்துமகளிர் கல்லூரி அருகே

A/L 2011, 2012 DAY
கலை, வர்த்தகப் பிரிவுகள்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
ஆரம்பம் 02.10.2010 Sat

அறிவாலயா கல்வியகம்
சூராவத்தை, சுன்னாகம்
ஆசிரியர் இ.தேவகுமார் அவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் - 2011இற்கான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.
அனுமதிகளை 3.10.2010 ஞாயிற்றுக் கிழமை முதல் தினமும் மாலை 4 மணிமுதல் பெற்றுக்கொள்ளலாம்.
நிர்வாகி

விற்பனையாகிறது
ஆசிரியர் தின அன்பளிப்புப் பொருள்கள் மற்றும் வாழ்த்து மடல்கள் ஏராளமான வகைகள் மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
2229881

விற்பனையாகின்றன
★ முழுநேர கல்வி டிப்ளோமா தெரிவுப் பரீட்சை வழிகாட்டி விலை ரூ 150/=
★ பொது அறிவு, பொது உளச்சார்பு வழிகாட்டி - விலை ரூ 350/=
தொகுப்பு : த.தவசேகர்
பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

NEW SCIENCE HALL, JAFFNA
A/L COM.MATHS
By
Mr. S. பிரேம்நாத் B.Sc.
★ சனி, ஞாயிறு வகுப்புக்கள் ★
2012 - தொடர்பு வேகம்
Sat, Sun : 11.00 - 12.30
2011 - வரிசை மாற்றமும் சேர்மானமும்
Sat, Sun : 12.30 - 2.00
DAY CLASS
(2011 பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது)
அலகு ரீதியான துரித மீட்டல் வினா விடை வகுப்பு
Sat, Sun : 8.00 - 11.00
ஆரம்பம் :- 02.10.2010

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org